செந்தமிழ்ச் செல்வி

சிலம்பு ௩௪

கழக வெளியீடு

Vol. XXXVI   1961—1962

செந்தமிழ்ச்செல்வி

திங்கள் வெளியீடு

முப்பத்தாறும் சிலம்பு

திருவள்ளுவர் ஆண்டு
௧௯௯௨—௧௯௯௩

The South India Saiva Siddhanta Works
Publishing Society, Tinnevelly, Ltd,

All Rights Reserved] Tirunelveli - 6 :: Madras - 1. *Price Rs.* 6-00

‘ செந்தமிழ்ச் செல்வி ’

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

EDITORIAL BOARD MEMBERS

க. திரு. செந்தமிழ்க் காவலர், டாக்டர், அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள், எம். ஏ., பி. எச். டி., எம். எல் சி., சென்னை.

உ. ,, ‘சித்தாந்த கலாநிதி’ வித்துவான், ஔவை, சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள், *தலைமைத் தமிழ் விரிவுரையாளர், தியாகராயர் கல்லூரி, மதுரை.*

ங. ,, பேராசிரியர், மு. இராசாக்கண்ணனர் அவர்கள், *பி. ஓ. எல். (ஆனர்சு), முதல்வர், அரசினர் கலைக் கல்லூரி, உதகை.*

ச. செந்தமிழ்க் கலைமணி, வித்துவான், பண்டித, கா. பொ. இரத்தினம் அவர்கள், *பி. ஏ. (ஆனர்சு), (லண்டன்), எம். ஏ., பி. ஓ. எல். (சென்னை.) ஆராய்ச்சித் துறைத்தலைவர், அரசகருமமொழித் துறை, கொழும்பு.*

ரு. [redacted]சிவம் அவர்கள், எம். ஏ., *தமிழ் விரிவுரையாளர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.*

சா. ,, க. கோவிந்தராசன் அவர்கள், பி.ஏ. (ஆனர்சு), பி.டி. *முதல்வர், ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, குமாரபாளையம்.*

எ. ,, சித்தாந்த பண்டிதர், ப. இராமநாத பிள்ளை அவர்கள், *கழகப் புலமையாளர்.*

அ. ,, பண்டித வித்துவான், தி. சங்குப் புலவர் அவர்கள், *கழகப் புலமையாளர்.*

உள்ளுறை

	பக்கம்
அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கழக நூற்காட்சி	௩௮௭
அப்பரும் முருகவேளும்—*தணிகைமணி, திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ.*	௩௪௧
அருட் புகழ்—*அருட்கவி சேதுராமன் அவர்கள் பாடியது.*	௩௭௩, ௪௩௫, ௪௬௧, ௫௧௫, ௫௮௬
1008 ஆவது வெளியீட்டு விழா வாழ்த்துக்கள்	௫௪
,, ,, ,, வாழ்த்துரைகள்	௫௬
ஆவியுலகுவாழ் அடிகளார் கருத்து	௪௫௮
இடைச் செருகல்—*திரு. செ. வை. சண்முகம்,* M.A., M. Lit	
உணர்வாய் !—*நாஞ்சில், திரு. கா. கணபதி*	௨௩௩
உண்மை விளக்கம் —*புலவரேறு, திரு. அ. வரதநஞ்சைய பிள்ளை*	௧௬௧
உயர்திரு. எம். பக்தவத்சலம் அவர்கட்கு விருப்புரை —*பண்டிதமணி, மு. கதிரேசச் செட்டி*	௫௫௪
உரிச் சொல்லும் வேர்ச் சொல்லும் ஒன்று ? —*திரு. மு. சதாசிவம் எம். ஏ.*	௧௦௩
உரிச்சொல் லாராய்ச்சி—*பண்டித வித்துவான், திரு. தி. சங்குப் புலவர்*	௩௨௫
எட்டுக்கோள் கூடிய மூன்றுநாள்	௨௯௭
எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி யாராய்ச்சி (ஒன்பது, தொண்ணூறு, தொள்ளாயிரம்)—*பண்டித வித்துவான், திரு. தி. சங்குப் புலவர்*	௮௫
எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி ஆராய்ச்சியில் ஐயங்கள் —*திரு. செ. பொதுவன்*	௨௦௫
எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி ஆராய்ச்சியில் ஐயங்கள் தெளிவித்தல்—*பண்டித வித்துவான், திரு. தி. சங்குப் புலவர்*	௨௪௧

எதிர்மறையிடை நிலை யாராய்ச்சி—பண்டித வித்துவான்,
திரு. தி. சங்குப் புலவர் ௪௯0, ௫௩௯

என்னே உலகம் ?—திரு. த. சிங்காரவேலன் ௧௧0

'ஐந்துடன் மாண்டது அமைச்சு'—பண்டித வித்துவான்,
சைவப்புலவர், சித்தாந்த நன்மணி கு. சுந்தரமூர்த்தி ௪௧௫

கலைத்தந்தை கருமுத்து தியாகராசச் செட்டியார் ௧௮௧

கல்கத்தாவில் தமிழ் ௪00

கால்டுவெல் தொல்காப்பியம் கற்றிருந்தால்...
—திரு. மு. சதாசிவம், எம். ஏ. ௫0௧

குறியீட்டுச் சாத்திரமும் துருயித்து சைவசமயங்களின்
ஒருமைப்பாடும்—வித்துவான், மாவை. துரை
பழநிமகாதேவன் ௨௫௩

கோவர விடுதலை ௨௧௩

கோளறு திருப்பதிகச் சிறப்பு—இனியன் ௨0௨

கோயில்களில் சிவனை வழிபடச் சேராது ௨0௩

சங்க இலக்கிய வெளியீட்டு நிறைவுவிழா வாழ்த்துக்கள் ௧௪௮

,, ,, ,, வாழ்த்துரைகள் ௧௫0

சங்ககாலச் செய்யுள்நடை—திரு. ச. கணபதி முதலியார்,
எம்.ஏ , எல். டி ௨௮௯, ௩௪௭, ௩௮௧, ௪௨௯; ௪௭௩, ௫௩௧

"சட்ட வியல்" வெளியீட்டு விழா ௨௬௧

"சட்டவியல்" வெளியீட்டு விழா வாழ்த்துக்கள் ௨௭௩

சங்கநூற்களின் தனிச்சிறப்பு ௬௫

சாந்தம் ஒரு மெய்ப்பாடா ?—திரு. மு சதாசிவம், எம். ஏ. ௧௯௭

சீர்மையர்—நாஞ்சில், திரு. கா. கணபதி ௩௮0

சுனீதிகுமார் சட்டர்ஜியின் வாழ்த்துரை ௧௫௬

சூளாமணி உரை வெளியீட்டு விழா ௩௫௫

சூளாமணி உரை வெளியீட்டு விழா வாழ்த்துக்கள் ௩௭௧

செய்திகளும் குறிப்புக்களும் ௧௧௪, ௧௬௩, ௨0௯, ௨௫௯, ௩0௬,
௩௫௨, ௪0௧, ௪௪௭, ௪௯௬, ௫௪௪

சென்னைப் பல்கலைக் கழகச் சொர்ணம்மாள் நினைவுச்
சொற்பொழிவுகள் (1962) ௩௩௩

சைவசித்தாந்த சாத்திர வகுப்புக்கள் ௯௪௯
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் சங்க இலக்கிய வெளியீட்டு நிறைவு விழா ௧௧௭
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் 1008 ஆவது வெளியீட்டு விழா ௩
சொல்லாக்கம் ௩௦௬
'டாக்டர் சேதுப்பிள்ளை' வரலாற்றுநூல் வெளியீட்டு விழா ௧௫௬
தமிழக அரசின் தமிழ்நூல் வெளியீட்டுக் கழகத் தொடக்க விழா ௩௪௩
தமிழர் விழாநாள் (ஆவியுலகச் செய்தி) ௨௭௭
தமிழால் முடியும் ௨௬௩
தமிழிசை மாநாடு ௨௧௮
தமிழில் வழங்கும் பிறமொழிச் சொற்களைக் கண்டுபிடிப்பது எப்படி?—திரு மு சதாசிவம், எம் ஏ ௪௮௩
தமிழும் பிறமொழித் தொடர்பும்—திரு. மு. சதாசிவம், எம், ஏ. ௪௧௬
தமிழே யன்றோ! நல்லைக்கிழார், வித்துவான், திரு. சொ. அரிய நாயகம் ௩௬௭
தமிழ் இசை பத்தொன்பதாம் விழா ௨௧௬
தமிழ் எழுத்தாளர் ஒன்பதாவது மாநாடு ௨௩௪
தருக்க சங்கிரகக் காண்டிகையுரை—வித்துவான், திரு. வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் ௩௧௪
திருக்குறளுக்குப் பல உரைகள் ஏன்?—திரு. மு. சதாசிவம், எம். ஏ ௩௬௦
திரு. டி. ஏ. வி. நாதன் மறைவு ௩௦௨
திரு. தாம்சனின் பாராட்டுரை—பெயர்ப்பு: மு. ச. ௧௭௬
திருநாவுக்கரசர் திருத்தேவாரத்தில் காணப்படும் இடப்பெயர்ச்சி—சித்தாந்த பண்டிதர், திரு ப இராமநாத பிள்ளை ௩௨௩
திருப்பனந்தாள் மடத்துத் திருப்பணிகள் ௨௦௮
திருமுறை அருச்சனை—அமைச்சர் பக்தவத்சலனார் அறிவிப்பு ௧௧௩
திருமுறை யருச்சனை ௧௧௩

*

திருவருட்டிரு சோமசுந்தர ஞானசம்பந்த அடிகளார்க்கு
வேண்டும் பணிவுரை—மு. கதிரேசச் செட்டி ருருஉ
திருவாசகத்தின் இயற்பெயர் யாது?—புலவர் சுந்தர
சண்முகனார் புதுவை ரு0அ
தென்னிந்திய தமிழ்ச்சங்கம், திருநெல்வேலி, தமிழ்ப்
புலவர் மாணவர் தேர்வு (1962) கசுஉ, ௩எஅ
தேனூர் வரகவி, வே. செ. சொக்கலிங்கனார் சிவனடி நீழல்சேர்தல் அக
தொண்டு செய்க—திரு. புலவர் 'அரசு' ருநஎ
தொல்காப்பிய "ஆராய்ச்சிக்" காரர்கள்
—மயிலை. திரு. சீனி. வேங்கடசாமி கூஎ
நகைச்சுவை இலக்கியம்—திரு. மு. சதாசிவம், எம். ஏ. நகசு
நம் கடன்—நாஞ்சில், திரு. கா. கணபதி சகஅ
நரந்தம் (Semon grass)—திரு. பி. எல். சாமி, பி. எஸ். ஸி. சு0
நாங்கோல் வாடை—கவிஞர், திரு. பசும்பொற் கிழார் சசு0
நினைப்போம்—நாஞ்சில் திரு. கா. கணபதி சஅசு
நூற்காட்சி உஎஉ
நூற்காட்சியைப் பற்றிய கருத்துரைகள் சுஉ
நெல்லைத் தமிழ்த் திருநாளில் ஐந்தாவது சிற்றிலக்கிய மாநாடு சசுஎ
பஞ்ச மரபு—வித்துவான், திரு. வே. ரா. தெய்வசிகாமணிக்
கவுண்டர் உநரு
பண் ஆராய்ச்சி பன்னிரண்டாம் மாநாடு உஉஉ
பதவிப் பிரமாணம் ச00
பல்கலைக் கழக மொழிவாயில் உகஎ
'பன்னிரு திருமுறைப் பெருந்திரட்டு'—திரு. யோகி
சுத்தானந்த பாரதியாரின் பாராட்டுரை ந0ந
'பாராட்டு விழா நூற்பட்டி' கழக வெளியீட்டுக்குப் பாராட்டு
மதிப்புரை ந0ச
பால் பொங்குக!—புலவர் 'அரசு' உருஅ
பிழை நீக்கிப் பதிப்பித்தல் விழைதகு செயல் நசரு
புதுவையில் பாரதியார் நினைவு ந00
பூசை கசுரு

பேரன்புரி ஏனமே!—(ஆவியுலகச் செய்தி) ௨௭௯

பொங்கல் வாழ்த்து—சித்தாந்த பண்டிதர்,
திரு. ப. இராமநாத பிள்ளை ௨௫௨

பொது எழுத்து வேண்டுமென்பது பொருந்தாது ௮௩

பொருள்வயிற் சென்றவன் வந்தான்!
—திரு. ப. பச்சையப்பன் ௨௪0

மதிப்புரை ௨௪௨, ௨௯0, ௩0௮, ௩௫௪, ௪0௨, ௪௫0, ௪௯௭, ௫௪௯

மறைமலையடிகளாரின் நன்றியுரை ௫௮௮

மறைமலையடிகள் கலைக்கூடம் வேண்டுகோள் ௪௫௪

மறைமலையடிகள் கலைமன்றத் திறப்புவிழா ௪௯௯

மறைமலையடிகள் கலைமன்றம் ௫௪௭

,, ,, வாழ்த்துப்பாக்கள் ௫௮௪

,, ,, வாழ்த்துரைகள் ௫௭௧

மறைமலையடிகள் நூல்நிலையத்தைப் பார்வையிட்டவர்கள்
கருத்து ௩௪௯

மறைமலையடிகள் நூல்நிலையம் ௨௧௧, ௩௪0

மன்றல் நாள் மணப்பாடல்—(ஆவியுலகச் செய்தி) ௧௭௩

“மாறிப் பிறப்பின் இன்மை”—திரு. கு. பரமசிவன், எம். ஏ. ௯௩

மாற்றருஞ் சிறப்பின் மரபியல்—திரு. மு. சதாசிவம், எம்.ஏ. ௨௮௨

முதியர் முதிஞர் டாக்டர் விசுவேசுரய்யாவின் மறைவு ௪0௩

முத்தமிழ்த் திருநாளும் 21 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் ௩0௧

மெய்ப்பாடும் சுவையும் ஒன்றா?
—திரு மு. சதாசிவம் எம். ஏ. ௨௨௯

மொழிக் குழப்பம் ௪௫௧

மொழி முதல் அகரச் சகரம்—திரு. தி. முருகரத்தனம்,
பி. ஏ. (ஆனர்சு) ௪௧0

மொழியும் உண்டுமோ?—நாஞ்சில் திரு. கா. கணபதி ௧0௩

யாழ்ப்பாணம் கலைப்புலவர் நவரத்தினம் அவர்கள்
நாயனடி நண்ணினர் ௩௯௮

யாழ்ப்பாணம் வழக்குரைஞர் அருளம்பலம் அவர்கள் அரனடியடைந்தனர் ௩௬௮

வட நாட்டில் தென் தமிழ் (Study of Tamil in North India)—பெயர்ப்பு: மு. ச. ௨௨௫

வதுவை நன்னாள் வண்ணத் தமிழ் மடல்—(ஆவியுலகச் செய்தி) ௧௭௫

வாய்மைக்காரன்—நாஞ்சில், திரு. கா. கணபதி ௩௧௮

வாழ்க்கைத் துணையின் மாண்பு—கழகப் புலவர், சித்தாந்த பண்டிதர், திரு. ப. இராமநாத பிள்ளை ௨௪௫

வான்—மருதூர், திரு. இளங்கண்ணன் M. O. L ௧௦௧

விருந்து ௯௪

விழா நிகழ்ச்சி ௧௨௪

விழைவு—திரு. அ. துரைக்கண்ணு ௮௬

A Letter from Mr. M. S. H. Thompson ௧௭௮

Statement about ownership and other particulars about the journal—Senthamil Selvi as required by rule 8 of the Registration of News papers (Central) Rules, 1956. ௩௫௪

படங்கள்

பக்கம்

அருட்புகழ் ௪௩௫

(1) சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஆர். சதாசிவம் அவர்கள் வளமனையின்கண் அமைந்துள்ள வழிபாட்டுத் திருமுருகன் திருவுரு.

(2) அருட்கவி சேதுராமன் அவர்கள், திருமுருகன் திருமுன்னின்று அருட்பெருந்தலால் திருப்பாட்டுப் பாடுதல்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக நூற்காட்சி ௩௮௬

(1) பேராசிரியர் ஆதிநாராயணு வரவேற்புரையாற்றுதல்.

(2) துணைவேந்தர் நூற்காட்சியைத் திறந்துவைத்துப் பேசுதல்.

(3) துணைவேந்தர் நூற்காட்சியைத் திறந்துவைத்தல்.

(4) துணைவேந்தர் வி. சுப்பிரமணியம் அவர்கள் நூற்காட்சியினைப் பார்வையிடல்.

ஐந்தாவது சிற்றிலக்கிய மாநாடு ௪௬௭

(1) தலைவர் சரவண ஆறுமுக முதலியார் பேசுகிறார்.

(2) தினமலர் ஆசிரியர், திரு. T. V. இராமசுப்பையர் தொடக்கவுரை யாற்றுகிறார்.

கழக 1008 ஆவது வெளியீட்டு விழாப்படங்கள் ௧

(1) மாண்பமை ஆளுநர் உயர்திரு விட்ணுராம்மேதி அவர்கள் தலைமையுரை ஆற்றுதல்.

(2) இந்து அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் உயர் திரு. எம். பக்தவத்சலம் 'பன்னிருதிருமுறைப் பெருந் திர'ட்டை வெளியிட்டுப் பாராட்டிப் பேசுதல்.

(3) மொழி மாநாட்டில் டாக்டர் மு. வரதராசனார் தலைமையுரை யாற்றுதல்.

(4) நூலக நுண்கலையறிஞர் டாக்டர் எஸ். ஆர். ரங்கநாதன் அவர்கள் கழகப்பணியைப் பாராட்டிப் பேசுதல்.

(5) கல்வித்துறை இயக்குநர் நெ. து. சுந்தரவடிவேலு பாராட்டுவிழா நூற்பட்டியை வெளியிட்டுப் பேசுதல்.

(6) ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி முதல்வர் எம். ஆர். பெருமாள் முதலியார் சொற்பொழிவாற்றுதல்.

(7) இலக்கிய மாநாட்டில் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் தலைமையுரை நிகழ்த்துதல்.

(8) அமைச்சர் மாணிக்கவேலு அவர்கள் கழக நூலாசிரியர் கா. அப்பாத்துரை அவர்கட்குப் பரிசுவழங்கல்.

(9) நிதி அமைச்சர் உயர்திரு. சி. சுப்பிரமணியம் ஆயிரத் தெட்டாவது வெளியீட்டு விழா மலரை வெளியிட்டு விரிவுரையாற்றுதல்.

(10) இலக்கிய மாநாட்டில் திருமதி. சௌந்தரம் கைலாசம் அவர்கள் சொற்பொழிவாற்றுதல்.

(11) திரு. கீ. இராமலிங்கனார் எம். ஏ. அவர்கள் கழகப் பணியைப் பாராட்டுதல்.

(12) அறநிலைய ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் சமய மாநாட்டைத் திறந்து வைத்துப் பேசுதல்.

(13) சமய மாநாட்டில் அருட்டிரு. குன்றக்குடி அடிகளார் தலைமையுரை நிகழ்த்துதல்.

(14) அருட்டிரு குன்றக்குடி அடிகளார், மாணவர் மன்றச் சார்பில் கழகப் புலவர்க்கும் ஆட்சியாளருக்கும் மலர் மாலை அணிவித்துச் சிறப்பித்தல்.

(15) குன்றக்குடி அடிகளார், திரு. ப. இராமநாத பிள்ளைக்குச் சிவமணி அணிவித்துப் பொன்னாடை போர்த்துதல்.

(16) புலவர் குழந்தையம்மாள், எம். எல். ஏ., அவர்கள் சமய மாநாட்டில் சொற்பொழிவாற்றுதல்.

(17) அரசினர் அச்சக ஆட்சியாளர் சி. டி. சானகிராமன் ஐ. ஏ. எஸ்., கட்டடத் தலைமைப்பணியாளர் திரு. ஆர். மாணிக்கசாமிக்குப் பரிசு வழங்குதல்.

(18) விழாவுக்கு வந்திருந்த பெருமக்களின் ஒரு பகுதியினர்.

,, **நூற்காட்சி**

(1) உயர்நீதிமன்ற நீதிபதி உயர்திரு. சு. கணபதியா பிள்ளை நூற்காட்சியைத் திறந்து வைத்தல்.

(2) நூற்காட்சியில் கழகத்தின் கவின்மிக்க கட்டடம் அமைந்த நூல்களையும் பரிசுப் பொருள்களையும் மாண்பமை கவர்னர் அவர்கள் பார்வையிடல்.

(3) அமைச்சர் திருவரங்கனார் படமும், காலஞ்சென்ற புலவர் பெருமக்களின் திருவுருவப் படங்களும், வரலாற்றுக் குறிப்புக்களும்.

(4) கழகம் தொகுத்துள்ள அரிய நூல்களும், கருத்து விளக்க அட்டைகளும், வரலாற்றுப் படங்களும்.

(5) கழகத்தின் 1008 வெளியீடுகளும் பழம் பத்திரிகைகளும்.

சங்க இலக்கிய வெளியீட்டு விழாப் படங்கள் : ௧௧௭

(1) ஆட்சியாளர் திரு. வ. சுப்பையாபிள்ளை வரவேற்புரை நிகழ்த்துதல்.

(2) உயர்நீதி மன்ற நீதிபதி உயர்திரு. பா. ச. கைலாசம் அவர்கள் தொடக்க உரை நிகழ்த்துதல்.

(3) கலைத்தந்தை உயர்திரு கருமுத்து தியாகராசச் செட்டியாரவர்கள் தலைமையுரை யாற்றுதல்.
(4) அமைச்சர் உயர்திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் 'ஐங்குறுநூறு' நூலை வெளியிட்டுப் பாராட்டிப் பேசுதல்.
(5) அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் நூற்காட்சியில் வைக்கப்பட்டிருந்த உ. வே. சா. சேகரித்து வைத்திருந்த ஓலைச்சுவடிகளைப் பார்வையிடல்.
(6) உயர்திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் டாக்டர் சாமிநாதையர் படத்தைத் திறந்து வைத்துப் பேசுதல்.
(7) உயர்திரு மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்கள் சி. வை. தாமோதரனார் படத்தைத் திறந்து வைத்தல்
(8) அமைச்சர் எம். பக்தவத்சலம் அவர்கள் புலவர், பொ. வே. சோமசுந்தரனார் அவர்கட்குக் கதர்ப் பொன்னாடை போர்த்திச் சிறப்புச் செய்தல்.
(9) டாக்டர், மா. இராசமாணிக்கம் பிள்ளையவர்கள் நாவலர் வேங்கடசாமி நாட்டார் படத்தைத் திறந்து வைத்தல்.
(10) உயர்திரு. இளவழகனார் அவர்கள் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் படத்தைத் திறந்துவைத்துப் பேசுதல்.
(11) சிலம்புச் செல்வர். ம. பொ. சிவஞானம் அவர்கள் சங்க இலக்கிய நூற்காட்சியைப் பாராட்டிப் பேசுதல்.
(12) திரு மா. பொ. சி. அவர்கள் சங்க இலக்கிய நூற்காட்சியைப் பார்வையிடல்.
(13) விழாவிற்கு வந்து சிறப்பித்த தமிழன்பர்கள்.

'சட்டவியல்' வெளியீட்டுவிழா உசுக

(1) திரு. வ. சுப்பையா பிள்ளையவர்கள் வரவேற்புரை நிகழ்த்துதல்.
(2) உயர்நீதி மன்ற நடுவர் திரு. மா அனந்தநாராயணன் அவர்கள் நூலை வெளியிட்டுப் பேசுதல்.
(3) உயர் நீதி மன்ற நடுவர் திரு. மா. அனந்தநாராயணன் அவர்கள் நூலை வெளியிடல்.
(4) திரு. அ. மு. பரமசிவானந்தம் அவர்கள் பாராட்டுரை வழங்குதல்.
(5) திரு. த. செங்கல்வராயன் அவர்கள் பாராட்டுரை வழங்குதல்.
(6) நூலாசிரியர், திரு, மா. சண்முகசுப்பிரமணியம் அவர்கள் கருத்துரை கூறுதல்.
(7) விழாவிற் கலந்து கொண்ட பெருமக்கள் விருந்துண்ணுங் காட்சி.
(8) விழாக்கூடத்தில் "தமிழால் முடியும்" நூற்காட்சி.

சூளாமணிப் பேருரை வெளியீட்டுவிழா ௩௫

(1) நீதிபதி ஆர். சதாசிவம், எம். அனந்தராமகிருட்டிணன் I. C. S., சௌந்தரம் கைலாசம் அம்மையார், நீதிபதி வெங்கடாத்திரி, மேஜர் ஜெனரல் அழகப்பன்.
(2) தமிழக அரசுக் கல்வி, நிதி அமைச்சர் உயர்திரு.
(3) 'சூளாமணி'ப் பேருரை நூலை உயர்திரு. நீதிபதி சு. கணபதியா பிள்ளை அவர்கள் வெளியிடல்.
(4) உயர்திரு. நீதிபதி சு. கணபதியா பிள்ளை அவர்கள் நூலை வெளியிட்டுப் பேசுதல்.
எம் பக்தவத்சலம் அவர்கள் தலைமையுரை யாற்றுதல்
(5) உரையாசிரியர்களைப் பாராட்டித் திரு. எம். ஆர். பெருமாள் முதலியாரவர்கள் பேசுதல்.
(6) உரையாசிரியர்கள் திரு. பொ. வே. சோமசுந்தரனார், திரு சு. அ. இராமசாமிப் புலவர் இருவரையும் கதர்ப் பொன்னாடை போர்த்திப் பெருமைப் படுத்தல்.
(7) உயர்திரு. சரவண ஆறுமுக முதலியாரவர்கள் பேசுதல்
(8) நாவலர் இரா. நெடுஞ்செழியன் பேசுதல்.

டாக்டர் சேதுப் பிள்ளை நூல்வெளியீட்டுவிழா கசு

(1) விழாத்தலைவர் திரு. எஸ். குற்றாலலிங்கம் செட்டியாரிடம் பேராசிரியர் சி. இலக்குவனார் நூலை வழங்குதல்.
(2) பேராசிரியர் சி. இலக்குவனார் நூல் வெளியீட்டுரை நிகழ்த்துதல்.

மறைமலையடிகள் கலைமன்றத் திறப்பு விழா **12-7-1962**

(1) மதுரையாதீனம் சோமசுந்தர அடிகளார், வ. சுப்பையா, நிதியமைச்சர் எம். பக்தவத்சலம்.
(2) நிதியமைச்சர், எம். பக்தவத்சலம் அவர்கள் கலை மன்றத்தைத் திறப்பது.
(3) நிதியமைச்சர் கலைமன்றக் காட்சிப்பொருள்களைப் பார்ப்பது,
(4) உயர்நீதிமன்ற நீதிபதி சு. கணபதியா பிள்ளை நிதியமைச்சரிடம் அடிகளார் கையெழுத்துப்படியைக் காட்டுதல்.
(5) வ. சுப்பையா பிள்ளை வரவேற்புரை நிகழ்த்துதல்.
(6) விழாத் தலைவர் மதுரையாதீனம் மறைமலையடிகளார் உருவப்படத்தைத் திறப்பது.
(7) நிதியமைச்சர் திறப்புரை நிகழ்த்துவது.
(8) டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் பேசுவது.
(9) திரு. ச. சிவகுமரன், எம்.ஏ., சொற்பொழிவாற்றுவது.
(10) அருட்கவி சேதுராமன் அம்மை அம்பலவாணர் திருமுன் பாடுவது.
(11) அருட்கவி சேதுராமன் பாடுவதும் அருட்டிரு சுப்பிரமணியம் எழுதுவதும்.

வரகவி. வே. செ. சொக்கலிங்கனார் அக

கழக 1008 ஆவது வெளியீட்டு விழாப் படங்கள்

(இராசாசி மண்டபம்: 20, 21, 22-8-1961)



மாண்பமை ஆளுநர் உயர்திரு. விட்ணுராம் மேதி அவர்கள்
தலைமையுரை ஆற்றுதல்



இந்து அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் உயர்திரு. எம். பக்தவத்சலம்
'பன்னிரு திருமுறைப் பெருந்திரட்'டை வெளியிட்டுப் பாராட்டிப் பேசுதல்



மொழி மாநாட்டில்
டாக்டர் மு. வரதராசனார் தலைமையுரை யாற்றுதல்



நூலக நுண்கலையறிஞர் டாக்டர் எஸ். ஆர். ரங்கநாதன் அவர்கள்
கழகப்பணியைப் பாராட்டிப் பேசுதல்



கல்வித்துறை இயக்குநர் நெ. து. சுந்தரவடிவேலு
பாராட்டு விழா நூற்பட்டியை வெளியிட்டுப் பேசுதல்

ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி முதல்வர்
எம். ஆர். பெருமாள் முதலியார் சொற்பொழிவாற்றுதல்



இலக்கிய மாநாட்டில் பேராசிரியர்
தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் தலைமையுரை நிகழ்த்துதல்



அமைச்சர் மாணிக்கவேலு அவர்கள் கழக நூலாசிரியர்
கா. அப்பாத்துரை அவர்கட்குப் பரிசு வழங்கல்



நிதி அமைச்சர் உயர்திரு. சி. சுப்பிரமணியம் ஆயிரத்தெட்டாவது வெளியீட்டு விழா மலரை வெளியிட்டு விரிவுரையாற்றுதல்

இலக்கிய மாநாட்டில்
திருமதி. சௌந்தரம் கைலாசம் அவர்கள் சொற்பொழிவாற்றுதல்

திரு. கீ. இராமலிங்கனார் எம். ஏ. அவர்கள்
கழகப்பணியைப் பாராட்டுதல்



அறநிலைய ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி
முதலியார் சமய மாநாட்டைத் திறந்துவைத்துப் பேசுதல்



சமய மாநாட்டில் அருட்டிரு. குன்றக்குடி அடிகளார்
தலைமையுரை நிகழ்த்துதல்.

அருட்டிரு. குன்றக்குடி அடிகளார், மாணவர் மன்றச்சார்பில்
கழகப்புலவர்க்கும், ஆட்சியாளர்க்கும் மலர்மாலை அணிவித்துச்சிறப்பித்தல்

குன்றக்குடி அடிகளார் திரு. ப. இராமநாதபிள்ளைக்குச்
சிவமணி அணிவித்துப் பொன்னுடை போர்த்துதல்

புலவர் குழந்தையம்மாள், எம். எல். ஏ., அவர்கள்
சமயமாநாட்டில் சொற்பொழிவாற்றுதல்

அரசினர் அச்சக ஆட்சியாளர் சி. டி. சானகிராமன், ஐ. ஏ. எஸ். கட்டடத் தலைமைப பணியாளர் திரு. ஆர். மாணிக்கசாமிக்குப் பரிசு வழங்குதல்

விழாவுக்கு வந்திருந்த பெருமக்களின் ஒரு பகுதியினர்

நூற்காட்சி

உயர்நீதிமன்ற நீதிபதி உயர்திரு. சு. கணபதியாபிள்ளை
நூற்காட்சியைத் திறந்துவைத்தல்

நூற்காட்சியில் கழகத்தின் கவின்மிக்க கட்டடம் அமைந்த நூல்களை பரிசுப்பொருள்களையும் மாண்பமை கவர்னர் அவர்கள் பார்வையிடல்

அமைச்சர் திருவரங்கனார் படமும், காலஞ்சென்ற புலவர் பெருமக்களின் திருவுருவப்படங்களும், வரலாற்றுக் குறிப்புக்களும்



கழகம் தொகுத்துள்ள அரிய நூல்களும், கருத்துவிளக்க அட்டைகளும், வரலாற்றுப் படங்களும்



கழகத்தின் 1008 வெளியீடுகளும் பழம் பத்திரிகைகளும்

சிலம்பு ௩௬	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௯௨, ஆவணி செப்டம்பர், 1961	பரல் ௧

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் 1008 ஆவது வெளியீட்டு விழா[1]

மண்டபம் நுழைவாயில்களில் வாழை முதலிய தோரணங்களாலும், விழாக்குறிப்பும் நல்வரவும் பொறித்த சொற்றொடர்களாலும், முற்றத்தின்கண் தமிழ்க்கொடி பொறித்த தாளியற்றோரணங்களாலும் காண்பார் கண்கவர் வனப்பினதாய்க் காட்சியளித்தது. முற்றத்து நாப்பண் அழகுறத் தமிழ்க்கொடி ஆடிக்கொண்டிருந்தது. கொடியென்பது குறிக்கோளை வனப்புற வரைந்து மாந்தரெலாம் உணர உயர்த்திக் காட்டும் ஒண் குறிப்பாகும்.

20-8-61 ஞாயிறு காலை 9-30 மணிக்கு விழாத் தொடங்கப் பெற்றது. தொடங்குவதற்குச் சிறிது நேரத்துக்கு முன்னதாக மக்களிருபாலாரும் திரளாக வந்து குழுமிக் கொண்டிருந்தனர். கூடிய மக்கட்குழுவின் திறனைக் காண்பார் அனைவர் மனத்தும் முன்னையினும் சிறந்து மக்களிடையே தாய்மொழியார்வம் தழைத்து வருகின்றது என்னும் வாய்மை நன்கு புலனாகும்.

குறித்தநேரத்துத் தமிழ்நாட்டு ஆளுநர் (கவர்னர்) உயர்திரு. விட்டுணுராம் மேதி அவர்கள் வருகை தந்துள்ளனர். அவரைக் கழக ஆட்சிப்பொறுப்பாளர் திரு. வ. சுப்பையாபிள்ளை

1. இவ்விழாச் செவ்வையாக இனிமிகு சிறப்புடன் தமிழ்நாட்டுத் தலைநகர்க் (சென்னைக்) கண் 1961 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டுத் திங்கள் 20, 21, 22 ஞாயிறு, திங்கள், செவ்வாய் மூன்று நாட்களிலும் கீழ் வருமாறு இராசாசி மண்டபத்தில் நிகழ்ந்தது.

யவர்கள் வாயிலின்முன் வனப்பமை சரிகைமாலைசூட்டி நல்வர வேற்றனர். அவரும் நகைமுகங்காட்டி ஆளுநர்க்கமைந்த பீடு நடையுடன் அணுக்கக்காவலரும் பிறரும் புறம் புறஞ்சூழ மண்ட பத்துக்கு எழுந்தருளினர்.

மண்டப அரங்கில் நடுநாயகமாக விழாத்தலைவர் ஆளுநர் வீற்றிருக்க இருபாலும் முறையே டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார், எம்.ஏ., எம், எல்.சி., (தலைமையாசிரியர், ஆங்கிலத் தமிழ் அகராதி) அவர்கள், திரு. வி. சுப்பிரமணியம் (துணை வேந்தர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்) அவர்கள், உயர்திரு. எம். பக்தவத்சலம் (இந்து அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர்) அவர்கள், உயர்திரு. கணபதியா பிள்ளை, (நீதிபதி, சென்னை உயர்நீதிமன்றம்) அவர்கள், கழக ஆட்சிக்குழுத் தலைவர் உயர் திரு. மு. காசிவிசுவநாதன் செட்டியாரவர்கள், கழக ஆட்சிக் குழுவின் உறுப்பினர் உயர்திரு. உ. சுப்பிரமணியன் அவர்கள் அமர்ந்திருந்தனர்.

சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளித் தமிழா சிரியர் வித்துவான் இசைப்புலவர் திரு. புண்ணியகோடி அவர்கள் பண்ணமை இன்னிசையுடன் கடவுள் வாழ்த்துப் பாடினர். அனைவரும் எழுந்துநின்று வாழ்த்தினைச் செவிமடுத்து வணங்கி அமர்ந்தனர்.

கழக ஆட்சியாளர் திரு. வ. சுப்பையா பிள்ளையவர்கள் ஆற்றிய

அறிவிப்புரை

தமிழ்நாட்டுக் கவர்னர் அவர்களே! தமிழ்நாட்டு உட்டுறை அமைச்சரவர்களே! உயர்நீதிமன்ற நீதிபதி கணபதியா பிள்ளை யவர்களே! ஆங்கிலத் தமிழ் அகரவரிசைக்குத் தலைமை ஆசிரிய ராக அமர்ந்து பணியாற்றிவரும் டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்களே! இவ்விழாவினுக்கு வரவேற்புரை ஆற்ற எழுந்தருளி யிருக்கும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர் களே! இவ்விழாவினைக் கண்டுகளித்தற்பொருட்டு வந்து திரண்டு குழுமியிருக்கும் அறிஞர் பெருமக்களே! அன்பர்களே உங்கள் அனைவர்களுக்கும் அன்பும் வணக்கமும் உரியவாகுக.

ஈண்டு இவ்விழா எதன்பொருட்டுக் கொண்டாடப்படுகின்ற தென்பதை நீங்க ளனைவர்களும் அறிக்கை வாயிலாக அறிந் திருப்பீர்கள். இஃது ஆயிரத்தெட்டாவது வெளியீட்டு விழா. ஆனால் இதுபோல முன்பு வெளிப்போந்த ஆயிரத்தேழு வெளி யீடுகளுக்கும் தனித்தனியே இங்ஙனம் விழாக் கொண்டாடப் பட்டதுண்டோ எனின்? இல்லை,

இவ்விழா வணிக முறைக்காகக் கொண்டாடப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கழகத்தின் 25 ஆம் ஆண்டு நிறைவாகிய வெள்ளிவிழாவினைக் கொண்டாடக் கருதினோம். அக்காலை இக்கழகத்தை நிறுவிப் போற்றி வளர்த்த என் அருமைத் தமையனார் திரு. வ திருவரங்கம் பிள்ளையவர்கள் இறையடி நீழலெய்தினர். அதனால் அப்பொழுது அவ்விழாக் கொண்டாட முடியாதுபோயிற்று. பின்பு சித்தாந்த சைவத்தின் சிறப்புத் தத்துவங்கள் முப்பத்தாறென்ப. அவ் வியைபினால் கழகத்தின் முப்பத்தாறுவதாண்டு நிறைவு விழாவை 'மெய்யுணர்வு விழா' எனப் பெயரமைத்துக் கொண்டாடலாம் எனக் கருதினம். செந்தமிழ்ப் பொதுமறையாம் திருக்குறளின் கண் 'மெய்யுணர்தல்' என்னும் அதிகாரம் முப்பத்தாறாக அமைந்துள்ளமையும் ஈண்டு நினைவு கூருக.

ஆனால் அப்பொழுது மறைத்திரு மறைமலையடிகளாரின் விருப்ப ஆவணம் உயர்நீதிமன்றத்தில் உறுதிசெய்யப்பட்டது. உடனடியாக அவர்கள் நூல்கள் அனைத்தையும் வெளியிடுவதிலும், அவர்கள் பெயரால் 'மறைமலையடிகள் நூல் நிலையம்' என ஒன்றுநிறுவுவதிலும் ஈடுபட்டிருந்தமையால் அப்பொழுதும் கொண்டாட வாய்ப்பில்லாதுபோயிற்று.

'மறைமலையடிகள் நூல்நிலையத்தின், திறப்பு விழா (24-8-1958)வை மாட்சிமைமிக்க (இங்கு வீற்றிருக்கும்) நம் கவர்னரவர்களே தலைமைதாங்கவும் (அதுபோல்) உட்டுறையமைச்சராகிய இவர்களே திறந்துவைக்கவும் திருவருள் கூட்டிற்று. அதுபோலவே இவ்வெளியீட்டு விழாவிற்கும் இருபெருந் திருவினரும் ஒருங்கமைந்துள்ளமையும், அவர்கள் தலைமையில் இவ்விழா நிகழ்ச்சிகள் நடைபெறுவதும் மிக்க மகிழ்ச்சிக்குரியவாகும்.

எங்ஙனமாயினும் கழகத்தின் அரும்பணியினைக் குறித்து ஒரு பெருவிழாக் கொண்டாடுதல் வேண்டும் என்ற எண்ணமும் ஆர்வமும் பெருகிக்கொண்டேயிருந்தன. அந்நிலையில் என் அரிய நண்பரொருவர் அருச்சனைக்குரிய எண் 1008ஆக இருப்பதாலும், கழகம் சைவ சித்தாந்தக் கழகம் என்ற பெயரைப் பெற்றிருப்பதாலும் அம்முறையில் கழகத்தின் ஆயிரத்தெட்டாவது நூல் வெளியீட்டினை ஒரு பெருவிழாவாகக் கொண்டாடுவதுபொருத்தமாகுமென்று யோசனைகூறினர்.

அது மிகவும் போற்றற்குரியதாக விருந்தமையால் அங்ஙனம் செய்வதெனஎண்ணினம். கழகச் செயற்குழுவினரும் அப்படியே இசைந்து அவ்விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதெனத் தீர்மானித்தனர்.

1008 ஆவது வெளியீடு சிறந்த பயனளிப்பதொன்றாக இருத்தல் வேண்டுமென எண்ணியே 'பன்னிரு திருமுறைப் பெருந்திரட்டு' என்ற தலைப்பில் நூலையமைத்தோம். இப்பெருந் திரட்டில் 'அகத்தியர் தேவாரத் திரட்டு' முழுவதும், உமாபதி சிவம் திரட்டியருளிய 'தேவார அருண்முறைத் திரட்'டிலுள்ள 99திருப்பாட்டுக்களும், அற்புதத் திருப்பதிகங்கள் பலவும், திருவாசகத் திருப்பதிகங்கள் சிலவும் தொகுக்கப்பட்டுள்ளன. மேலும் பாடல்பெற்ற திருவூர்கள் 274 ஆகும். இத்திருவூர்கள் அனைத்திற்கும் மூவராலும் பாடப்பெற்ற திருப்பதிகங்கள் பல. ஒவ்வொரு திருப்பதிகத்திலிருந்தும் ஒன்று அல்லது சில பல திருப்பாட்டுக்கள் இதன்கண் தொகுக்கப்பட்டுள்ளன. இப் பெருந்திரட்டில் தேவார முதல்வர்கள் பாடியருளிய திருப்பாட்டுக்கள் உட்பட மொத்தம் 2835 திருப்பாட்டுக்கள் உள்ளன. இதனோடிணைந்து திருக்கோவிலுக்குச் செல்லும் வழி வகைகளை விளக்கும் படங்களும் தனியே உள்ளன. இதுகாறும் இத்தகைய சிறந்ததொரு நூல் வெளிவரவில்லை.

நாற்பதாண்டுகளாகக் கழகம் தமிழுக்கும் சைவத்திற்கும் தொண்டாற்றி வருகின்றது. இரண்டு அறநிலையங்களையும் இரண்டு நூல் நிலையங்களையும் சிறந்த முறையில் நடத்தி வருகின்றது. சித்தாந்த வகுப்புக்கள், திருக்குறள் வகுப்புக்கள் போன்ற பல வகுப்புக்களை நடத்தியுள்ளது. இலக்கிய மாநாடுகள் பலவற்றையும் பாங்குற நடத்தியுள்ளது. இம்மாநாடுகளிலுள்ள சிறப்பொன்று வருமாறு: மாநாட்டின்கண் சொற்பொழிவாற்றும் புலவர் பெருமக்களும், தலைவர்களும் தத்தம் கட்டுரைகளையும், தலைமையுரைகளையும் முன்னமே எழுதிக் கொடுக்க அவற்றை நூல்வடிவில் அச்சிட்டு அவ்வம் மாநாடுகளிலேயே விலைக்கு வழங்கும் வாய்ப்பினை அமைப்பது, இம்முறை கழகத்தாராக்கிய ஒரு புதுமுறையாகும்.

பின்புறமுள்ள விருந்து மண்டபத்தின்கண் 200க்கு மேற்பட்ட புலவர்களின் உருவப்படங்களையெல்லாம் தொகுத்து வைத்திருக்கின்றோம். மேலும் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் காலத்திலிருந்து தொடர்ந்து வாழ்ந்து வந்துள்ள புலவர் பெருமக்களின் கடிதங்கள், கைச்சாத்துக்கள் முதலியன கிடைத்தவரை தொகுத்து வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறே கிடைத்தற்கரிய பழம்பெருநூல்கள் பலவும் தொகுத்து வைக்கப்பட்டுள்ளன. உலகமெங்கும் தமிழ், சைவம் ஆகிய இரண்டன் சிறப்பையும் அறிந்துகொள்வதற்கு இவை பெரு வாய்ப்பளிக்கும் தன்மைய. இவையனைத்தும் இறைவன் திருவருட்டுணையால் நிகழ்ந்தனவாகும். அத்தகைய இறைவனுக்கு

என்றும் நீங்கா வணக்கம் புரிகின்றேன். இவ்விழாத் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு நடக்கவிருக்கின்றது. எல்லோரும் அம் மூன்று நாட்களும் அன்புடன் வந்து கண்டுகளித்து விழாவினைச் சிறப்பிக்குமாறு வேண்டுகின்றேன்.'

வரவேற்புரை

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் உயர்திரு. வி. சுப்பிரமணியம் அவர்கள் வரவேற்புரை நவின்றனர். வரவேற்பில் கழகம் நாற்பதாண்டுகளாகத் தமிழுக்கும், சமயத்திற்கும், நாட்டுக்கும் இடையறாது புரிந்துவரும் நற்பணிகளைப் பற்றியும், நிலைத்த மாறிலாவின்பம் பண்ணமை திருவருட் பாடலால் மட்டும் வரும் என்னும் உண்மையும், அப்பாடல் இன்பமும் வீணையொடு கெழுமவிழுமிதாம் என்னும் இயல்பும், பிறவும் அமைந்திருந்தன. அவற்றை இனிதுறக் கேட்குமாறு எழிலுறப் பகர்ந்தனர். அவற்றின் சுருக்கம் வருமாறு :

1300 ஆண்டுகட்கு முன் பாடிய சொல்வேந்தர் இன்பத்தின் எல்லைக்கு உவமையாக "மாசில் வீணையும்", என்றார். இதன் அருமையை என்னவென்று சொல்வது! மாசில் வீணை என்பது போன்று, இன்பத்தின் எல்லைக்கு எடுத்துக்காட்டாக உள்ள உவமைகள் இன்னும் வருகின்றன. அத்திருப்பாட்டில்,

மாலை மதியமும்
வீசு தென்றலும்
வீங்கிள வேனிலும்

இவைகளுக்குப்பின் வருகின்ற சொற்றொடர் நம்மை அப்படியே பெருவெளிக்கும் அப்பாலாய்த் தூக்கிச் சென்று சிந்தையை நிறையற்றதாக்கிச் சொல்லுதற்கும் எண்ணுதற்கும் அரியதாய இன்பத்தை விளைவிக்கின்றது. அச்சொற்றொடர்தான் "மூசுவண்டறை பொய்கையும்", என்பது. தாமரைக் குளத்தின் அருகில் மொய்த்த வண்டுகள் அருமையான பாட்டுக்கள் இசைக்கத் தனியாக அமர்ந்திருந்து தமிழன் தனது கண், மூக்கு, செவி வழியாய் இன்பத்தை எவ்வாறு அனுபவித்திருந்தான் என்பதை அழகாக நமக்கு விளக்குகிறது. மாசில் வீணை, மாலை மதியம், வீசு தென்றல், வீங்கிள வேனில், மூசுவண்டறை பொய்கை, இவையெல்லாம் எதற்கு உவமையாகச் சொன்னார் என்று எண்ணும் பொழுது தான் நாம் இன்பமகிழ்ச்சிப் பெருமை அடைகின்றோம். இவை போன்றதே "ஈசன் எந்தை இணையடி நீழலே". ஈசன் அவருக்கு ஏதோ ஒரு தத்துவப் பொருளாக மட்டும் அன்று, வேண்டுகோள்களை ஏற்றுக்கொள்ளும் பரம்பொருளாக மட்டும் அன்று, தம்மை அணைத்துக் காப்பாற்றும் தந்தை தாயாக அவருடனேயே இருந்தான். அவன் அருட்பெருந் திருவடி இமைப்பொழுதும் நீங்காத நிழலாகக் குளிர்வித்துக் கொண்டிருந்தது. நாம் இதுவரை பார்த்தது ஓரே பாட்டு. தமிழ் இலக்கியத்

தின் விரிவனைத்தையும் ஒரு சிறிது நாம் தெரியக்கூடுமானல் தமிழைப்பற்றிய அறிவு வளர்ந்தோங்கும். நாம் செய்யக்கூடிய தொண்டெல்லாம் சிறிதளவே ஆகும் அல்லவா?

சைவ சமயத்தின் பெருமையையும், தமிழ் இலக்கிய நூல்களின் சுவையையும் மக்கள் அறிந்து அனுபவிக்கவேண்டும் என்றும், அதற்காக நூல்கள் பதிப்பிக்கப்பட வேண்டும் என்றும் எண்ணி இக்கழகம் 1920 ஆம் ஆண்டு நிறுவப்பெற்றது. இக் கழகத்தின் முதலாவது வெளியீடு விநாயகர் அகவல், கந்தர் கலிவெண்பா ஆகிய இரண்டும் அடங்கிய "திருவடிப் புகழ் மாலை" என்பது. அகவலால் ஔவையார் போற்றிய விநாயகர்

"சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புத நின்ற கற்பகக் களிறு".

கந்தனே கலியுக வரதன். அவர் இருவரது திருவடிப் புகழை முதலாகக் கொண்டு தொடங்கிய பதிப்புக்களின் வரிசை எண் இன்றேடு 1008 ஆகிறது.

தொடக்கத்தில் கழகமானது பெரும்பாலும் சமயச் சார்புடைய நூல்களையே வெளியிட்டுக் கொண்டிருந்தது. நாளடைவில் இலக்கிய நூல்களின் எண் அதிகரித்தது. சங்ககால இலக்கியங் களைப்பற்றிய அறிவு மக்களிடம் பரவுவதற்கு முதல் நூல்களை மாத்திரம் வெளியிட்டால் போதாது. முதல் நூல்களைத் தாமாகவே படித்துப் பொருள் தெரிந்துகொள்ளக்கூடிய அளவு தமிழறிவு படைத்த மக்கள் நம்நாட்டில் மிகச் சிலரே உளர். நம்முடைய பள்ளிகளில் தமிழ்இலக்கியங்களை இப்பொழுது சில நாட் களுக்கு முன்வரை அதிகமாகக் கற்பிக்காததாலும், தமிழ் இலக்கி யங்களைத் தெரிந்துகொள்ளக்கூடிய அளவு தமிழறிவு உள்ள மக்கள் பெரும்பாலும் சமூகத்தில் இல்லாமையாலும் தமிழ் இலக் கியங்களைப்பற்றிய அறிவு தமிழ் மக்களிடையே வளர்வதற்காக, அதற்குரிய முறைகள் கையாளப்பட வேண்டியிருந்தன. சீவக சிந்தாமணி வசனம், பெரியபுராண வசனம், திருவிளையாடல் வசனம் முதலிய வசன நூல்கள் இக்கழகத்தால் வெளியிடப் பட்டன. சிலப்பதிகாரச் சுருக்கம், சிந்தாமணிச் சுருக்கம், மணி மேகலைச் சுருக்கம், சூளாமணிச் சுருக்கம், பெருங்கதைச் சுருக்கம் முதலிய நூல்களை விளக்கக் குறிப்பு உரையுடன் கழகம் வெளியிட் டது. சங்ககால நூல்களுக்கும் பிற்கால இலக்கிய நூல்களுக்கும், தகுந்த புலவர்களைக்கொண்டு உரைகள் ஆக்கப்பட்டு நூல்கள் வெளியிடப்பட்டன.

நச்சினர்க்கினியர், பரிமேலழகர், அடியார்க்குநல்லார் முதலிய தமிழ் இலக்கிய வரலாற்றில் புகழ்பெற்ற உரையாசிரியர்களது உரை, முதல்நூல்களைத் தாங்களாகவே கற்று ஒருவாறு தெரிந்து கொள்ளக்கூடியவர்களுக்கு முதல்நூல்களின் நயங்களை விளக்கு வதற்கு மிகவும் பயன்படும். இந்நாள் தமிழ் மக்களில் பெரும் பாலோருக்கு அவ்வுரைகளினும் எளிய உரைகள் தேவையாகின் றன. ஆதலால் அவர்கட்கு ஏற்பத் தெளிவுரைகள் எழுதக் கூடிய திரு. கா. சுப்பிரமணியபிள்ளை, திரு. ந. மு. வேங்கடசாமி

நாட்டார், டாக்டர் மு. வரதராசன் போன்ற அறிஞர்களைக் கொண்டு தெளிவுரைகள் எழுதப்பட்டன. சங்க நூல்களை ஆய்ந்து அவைகளினின்றும் விளங்கும் பொருள்களைக் கொண்டு அக் காலத்துப் புலவர் வரிசை, மன்னர் வரிசை என்று தொகுப்பாக மன்னர்கள், புலவர்கள் வரலாறுகள் வெளியிடப்பட்டன. திருக் குறள் முதலிய நூல்களின் பெருமைகளை விளக்கக்கூடிய ஆராய்ச்சி நூல்கள் பல வெளியிடப்பட்டிருக்கின்றன. இப்பணி கள் எல்லாம் செவ்வையாக நிறைவேறுவதற்காக இக்கழகம் தொடக்கத்திலிருந்தே தமிழில் புலமை கொண்ட தமிழ்மக்கள் அனைவருடனும் நெருங்கிய தொடர்புகொண்டு அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்துகொடுத்து அவர்களால் கிடைக்கக் கூடிய பயன்களைப்பெற்றுத் தமிழ் உலகுக்கு வழங்கியிருக்கின்றது.

பள்ளி மாணவர்களுக்குச் செந்தமிழ் உணர்ச்சியைச் சிறப் பாக ஊட்டும் முறையில் கழகம் பல தமிழ்ப்பாட நூல்களை எழுதி வெளியிட்டிருக்கிறது. கல்வித்துறையில் பதவி வகித்திருந்த பல அறிஞர்கள் இப்பணியில் கழகத்துக்கு மிகவும் ஊக்கமும் உதவி யும் தந்திருக்கின்றார்கள். தமிழ்நூல்களின் ஆங்கில மொழி பெயர்ப்புக்களைக் கழகம் வெளியிட்டிருக்கின்றது. "The Tamils Eighteen Hundred Years Ago", போன்ற தமிழ்க் கலையைப் பற்றி ஆங்கிலத்தில் எழுதப்பெற்ற நூல்களைக் கழகம் மறுபதிப்பாக வெளியிட்டிருக்கின்றது. தமிழ்ச்சங்க இலக்கியத்தின் அழகிய பகுதிகளை ஆங்கிலத்தில் தொகுப்பாக மொழிபெயர்த்து "Golden Anthology" ஒன்று பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறே பல நூல்கள் பதிப்பித்து வெளியிட்டு வந்த நூல் களின் எண் ஆயிரத்தெட்டு ஆகும். ஆயிரத்தெட்டு என்ற எண் ஒரு சிறப்புள்ள எண்ணாகும். ஆயிரத்தெட்டு, நூற்றெட்டு என்ற தொகை தெய்வத்தை வழிபடும் பூசனை எண்ணெனப் புகழ் பெற்றது. ஆயிரத்தெட்டாவது நூல் வெளியீட்டு விழாவில் வரவேற்புரை கூறும் பேறு எனக்கு வாய்த்ததுகுறித்து மிகவும் மனமகிழ்ச்சியடைகிறேன்.

பல வகையாலும் தமிழுக்கும் தமிழ் உலகுக்கும் கழகம் செய்து வரும் பணியைப் போற்றிக் கழகமானது 1008 ஆவது நூலை வெளியிடும் நாளை ஒரு விழாவாகக் கொண்டாடுவது முற்றிலும் பொருத்தமாகும். தமிழ்மக்களும் தமிழ்நாட்டு ஆளுநர், தமிழ் நாட்டுத் தலைவர், அமைச்சர் முதலியோரும் புலவர்களும், அறி ஞர்களும் கழகத்துக்குச் செய்திருக்கும் உதவியைக் கழகம் பெரி தும் போற்றித் தனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளு கிறது.

கழகமும் தமிழறிஞரும் தமிழுக்கும் தமிழுலகுக்கும் இதுகாறும் செய்துவந்த தொண்டுகள் எதிர்காலத்தில் செய்யவேண்டிய தொண்டுகளுக்கு ஒரு முன்னணியாகவே விளங்கக்கூடியவை. மேலைநாட்டு நாகரீகத்தின் பாற்பட்டவை என்று சில ஆண்டு களுக்கு முன்வரை நாம் கருதிய கொள்கைகள், பழக்கவழக்கங்கள் பல இப்பொழுது நம் வாழ்வுடன் கலந்து ஒன்றுபட்டுவிட்டன. சமூக அமைப்பு, உரிமைகள், கடமைகள், மக்கள் தொடர்பு முதலிய பல துறைகளிலும் கொள்கைகளிலும் செயல்களிலும்

மாறுதல்கள் ஏற்பட்டுக்கொண்டே வருகின்றன. தற்கால அறிவுப் பகுதிகளிற் பல பாகங்கள் பற்றிய நூல்கள் நம் மொழியில் இல்லாமையால் தமிழ் மாத்திரம் கற்ற நம்மக்கள் தாங்கள் விரும்பும் அளவு அறிவு பெற இயலாதவர்களாக இருக்கிறார்கள். நமது பண்புக்குப் பழுதின்றிச் சமூகத்திலும் மொழியிலும் வளர்ச்சியும் விரிவும் ஏற்படுமாறு கழகமும் தமிழறிஞர்களும் முயலுவார்களென்பது உறுதி.

இவ்விழாவிற்குத் தலைமை தாங்கி நடத்திச் சிறப்பிக்க வந்தமர்ந்திருக்கும் தமிழ்நாட்டுக் கவர்னர் நம்வாழ்வையே தம் உயர்வாகக் கருதும் மாண்பமை விட்ணுராம் மேதி அவர்களையும் தமிழ் நாட்டின் தனிச்சிறப்பையும் புகழையும் எல்லா நாடுகளுக்கும் எடுத்துக்காட்டிய திருக்குறள் நூலாசிரியர் திருவள்ளுவர் படத்தைத் திறந்து வைக்க மனமுவந்திருக்கும் டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்களையும், இந்நூலில் பன்னிருதிருமுறைப் பெருந்திரட்டு என்னும் ஆயிரத்தெட்டாவது நூலினை வெளியிடும் அரும்பணிபுரிய அமர்ந்திருக்கும் இந்து அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் உயர்திரு எம். பக்தவத்சலம் அவர்களையும், இக்கழகத்தில் இதுகாறும் தொகுத்த நூல் பலவற்றைப் பரப்பி வைத்திருக்கும் 7 நூற் காட்சித் திறப்பு என்னும் சிறப்புப் பணிபுரியச் சிந்தையன்புற்று வந்தமர்ந்த சென்னை உயர்நீதி மன்றம் நீதிபதி உயர்திரு, சு. கணபதியாபிள்ளை அவர்களையும் கனிந்த அன்புடன் வரவேற்கின்றேன். மற்றும் இவ்விழாவிற்கு வந்திருக்கும் கலைவல்ல பாவலர், பாராளும் காவலர், செந்தமிழ்ப் பற்றுடைய செல்வர், நாட்டுத்தொண்டு மொழித்தொண்டு சமயத்தொண்டு முதலிய பொதுநலப் பணிபுரியும் சான்றோர், மதியிற் சிறந்த மங்கையர், கல்லூரி மாணவர் மாணவியர், மற்றுமுள்ள அனைவரையும் மகிழ்வுடன் வரவேற்கின்றேன். விழா நிகழ்ச்சிகளை விழைந்து காணுமாறு அனைவரையும் பெரிதும் வேண்டுகின்றேன்.

வாழிய செந்தமிழ்! வாழ்க நம் கழகம்!

தலைமை உரை

தமிழ்நாட்டு ஆளுநர் மாண்புமிகு **விட்ணுராம் மேதி** *அவர்கள் தந்தலைமையுரையினை ஆங்கிலத்தில் அழகுற மொழிந்தனர். அவ்வுரையின் பெயர்ப்பு வருமாறு:*

நண்பர்களே,

இம் மாநிலத்தின் கவர்னராகப் பணியேற்றதிலிருந்து தமிழ் மொழி, இலக்கிய வளர்ச்சிகள் பற்றிய பல கூட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. சிறப்புமிக்க தமிழறிஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், நாடகம் எழுதுவோர் இவர்களுக்குப் பரிசு வழங்கும் வாய்ப்பும் ஏற்பட்டது. இதுபோன்ற நிகழ்ச்சிகளின்போது தமிழில் உங்களிடம் பேச முடியவில்லையே என்றுதான் வருந்துகிறேன். ஆனால் இக் குறைபாடு தொன்மை

மிக்க தமிழிலும், அதன் வளர்ச்சியிலும் நான் ஆர்வங் கொள்ளு வதற்கோ, ஈடுபடுவதற்கோ தடையாக இருக்கவில்லை. உலகில் உள்ள எல்லா மொழிகளும்-(உலகில் மிகப் பல மொழிகள் உள் ளன)-எண்ணங்களையும் கருத்துக்களையும் வெளிப்படுத்தும் கருவியாகப் பயன்படுவதில் ஒவ்வொரு சிறப்பைப் பெற்றுள்ளன என்று நம்புபவர்களில் நானும் ஒருவன். தென்னிந்திய சைவ சித்தாந்தக் கழகத்தின் 1008 ஆவது நூல் வெளியிடப்பெறும் இந் நாளில் இந் நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வாய்ப்பு ஏற்பட்ட மைக்கு உண்மையில் பெரிதும் மகிழ்கிறேன். இந் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்க வேண்டுமென அன்புடன் அழைத்த கழகத்தின் ஆட்சியாளர் அவர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் என் நன்றி யைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மூன்றாண்டுகளுக்கு முன்பு சென்னையில் இக் கழகத்தின் வாயிலாகவே மறைமலையடிகள் நூல்நிலையத்தைத் திறந்து வைக் கும் பேறு பெற்றேன். வளர்ந்துவரும் கழகத்தின் வரலாற்றில் மிகவும் குறிப்பிடத்தக்க இந்நிகழ்ச்சியில் பங்குபெறும் வாய்ப்பை மீண்டும் ஏற்படுத்தித் தந்ததற்காகக் கழகத்தினர்க்குப் பெரிதும் நன்றியுடையேன். தமிழ் மொழி, இலக்கியம், தத்துவம், சம யம் இவற்றில் ஆரா ஆர்வமும், குன்றா நம்பிக்கையும், ஆழ்ந்த பற்றும் கொண்டு கடந்த நாற்பதாண்டுகளாகத் தொண்டு மனப் பான்மையுடன் மிகச் சிறந்த நல்ல பணியாற்றி வந்திருக்கும் தனிச் சிறப்பைக் கண்டு என் மகிழ்ச்சிப் பாராட்டுதல்களை அளிக்க விரும்புகிறேன். இக் கழகம் ஒப்பற்ற பணி செய்து வந் திருப்பதுடன், தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கம், தென் னிந்தியத் தமிழ்ச் சங்கம் என்ற இரு அற நிலையங்களைத் தன் மேற்பார்வையில் நடத்திக்கொண்டு, ஆண்டுதோறும் கழகத்தின் மொத்த ஊதியத்தின் ஒரு பாதியை அவ்விரு சங்கங்களுக்காக வும் ஒதுக்கி வைத்து வருகின்றமை கண்டு மகிழ்ச்சி யடை கிறேன். இலக்கியம், சமயம், வரலாறு, தத்துவம் போன்ற பல துறைகளில் கழகம் நூல்களை வெளியிட்டுள்ளது. கழக வெளி யீடுகளில் சங்க இலக்கியங்களுக்கும் சமய இலக்கியங்களுக்கும் சிறந்த உரைவிளக்கங்கள் மட்டுமின்றி, ஆங்கில இலக்கியத்தின் கதைகள், நாடகங்கள், புதினங்கள் இவற்றின் மொழிபெயர்ப்பு களும் இருப்பது குறிப்பிடத்தக்கது. மனித நெடுங்கால வர லாற்றை நோக்குமிடத்து, பல்வேறு மொழிகள் பேசப்படும் உலகின் பல்வேறு பகுதிகளிலும் பெருமையும் சிறப்பும் மிக்க இலக்கிய ஆசிரியர்கள் தோன்றியிருக்கின்றனர் என்பதை அறி கிறோம். மனித இனத்திற்கு எக் காலத்தும் அறிவூட்டத்தக்க பேரிலக்கியச் செல்வங்களை அவர்கள் அவரவர் மொழிகளில்

ஆக்கித் தந்துள்ளனர். மனிதன் என்றும் அறிவையும் உண்மையையும் தேடிச் செல்கிறான். அதனால் மொழி வேறுபாடுகளைக் கருதாது அவ்வாசிரியர்கள் எல்லாருடைய அரும் நூல்களையும் திறனாய்வு முறையில் அறிந்துணர முற்படுவதே அறிவுடைமையாகும். அத்துணை மொழிகளையும் ஒருவன் தன் ஆயுட்காலத்தில் கற்றுக்கொள்ள முடியாதாகலின், அப் பெரு நூல்களையெல்லாம் மொழி பெயர்ப்புக்கள் மூலமாக அறிந்துகொள்வதில் மன நிறைவு பெற வேண்டியிருக்கிறது. ஆதலின் கழகமும் ஆங்கிலத்தில் புகழ்பெற்ற சில நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுவதில் விருப்பங் கொண்டிருத்தலைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். இவ்வாறே ஆங்கில மொழியிலுள்ள நூல்களை மட்டுமின்றிப் பிற இந்திய வெளிநாட்டு மொழிகளிலும் உள்ள பல நூல்களைத் தமிழ் மொழியொன்றே கற்றவர்களின் நலத்துக்காக மொழி பெயர்த்து இன்னும் நூல்கள் வெளியிடும் என நம்புகிறேன். தமிழ் மொழி அறியாதவர்களுக்காகக் கழகம் பழமைத் தமிழ் இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டிருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். தமிழ், உலகத்து மிகவும் தொன்மை வாய்ந்த மொழிகளுள் ஒன்று. அதன் புகழ்மிக்க இலக்கியம் வளமானது; பல துறைகளைப் பெற்றது. இன்று கிடைக்கும் மிகப் பழைய தமிழ் நூலான தொல்காப்பியம் இரண்டாயிரமாண்டுகளுக்கு முன்னரே தோன்றியது. தொல்காப்பியத்திற்கு முற்பட்ட சிறந்த நூல்கள் யாவும் கடல் கோளால் அழிந்துபட்டன போலும். பழங்காலத்திலிருந்தே அரசர்களும் புலவர்களும் தமிழைப் போற்றி வளர்த்து வந்திருப்பதால், அம்மொழி இடையீடில்லாது தொடர்ந்து வளர்ந்து வந்திருக்கிறது. தமிழ் இலக்கியங்களில் பரந்துபட்ட அறிவுக் கருவூலங்கள் ஆழ்ந்து பொதிந்துள்ளன. தமிழறியாதவர்களும் அவ்வறிவுச் செல்வங்களை எய்துமாறு செய்ய வேண்டும். இப்போது பல தமிழ்நூல்கள் பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு அவை பல வெளிநாடுகளிலும் பரவி வருவது அறிந்து மகிழத்தக்கது.

குறிப்பாக என் கவனத்தை ஈர்த்த கழகத்தின் இன்னொரு முக்கியமான பணி குழந்தை யிலக்கியங்களை வெளியிடுதலாகும். நாட்டின் உண்மைச் செல்வங்களான குழந்தைகளுக்கு ஏற்ற நூல்களை வெளியிடுவதற்குத் தனித்திறமை வேண்டும். அவர்கள் மனதுக் கேற்ற கருத்துக்களை நன்கு ஆராய்ந்தெடுத்துக் கூற வேண்டும். குழந்தைகளுக்கு ஏற்ற நூல்களை எழுதுவது உண்மையில் மிகவும் கடினம். ஏனெனில் அதற்குச் சிறந்த சிந்தனையும், ஏற்ற நடையில் எழுதும் கவனமும் வேண்டும். குழந்தை

களின் உளவியல் சரியாக உணர்ந்தறியப்படவேண்டும். வளரும் இளம் உள்ளங்களுக்கு ஏற்றவகையில் அவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் நூல்கள் எழுத வேண்டும். குழந்தை இலக்கியங்களை வெளியிடுவதில் நாட்டஞ் செலுத்திய கழகம் மிகவும் பாராட்டுப்பெறுதற்குரியது. வளரும் பருவமான இளமையிலேயே குழந்தைகள் அப் புத்தகங்களில் உள்ள அறிவினைப் பெறும்படி கழகம் வெவ்வேறு துறைகளில் அழகிய வெளியீடுகளை மேலும் மேலும் வெளியிட்டுக்கொண்டிருக்கும் என நம்புகிறேன்.

இப்போது கழகம் தனது 1008 ஆவது நூலை வெளியிட்டுள்ளது. இந்நூல் சைவ அருண்முதல்வர்கள் தலங்கள்தோறும் சென்று திருக்கோயில்களில் இறைவனைப் புகழ்ந்து பாடியருளிய திருப்பாடல்களின் பெரிய தொகை நூலாகும். தென்னிந்தியாவில் உள்ள பாடல்பெற்ற திருப்பதிகளுக்குச் செல்வோர்க்கு இக் கையடக்கத் தொகைநூல் மிகப்பெரிதும் பயன்படும் என்றறிகிறேன். இவ்வுலகத்தில் பொருளியல் வாழக்கைக்குச் சிறப்புக்கள் உள்ளன. எனினும் இந்நாட்டில் பிறந்து நாட்டிற்குப் பெருமையளித்த எல்லா அருட்சான்றோர்களும், பெருமக்களும் ஆன்ம வாழ்க்கையே உண்மையான இன்பத்தைத் தருவதாகும் என வலியுறுத்தி உணர்த்திப் போந்துள்ளனர். நம் வாழ்க்கைக்கு அடிப்படையாயுள்ள சிறந்த ஆன்மீகக் கருத்துக்களைப் பழங்காலத்திலிருந்தே பெற்றுவந்துள்ள பெருமை இந்நாட்டுக்கே உரியது. தெய்வ அருள் பெற்ற அருளாளரும், ஞானிகளும் பத்தியில் திளைத்து இறைவனைப் புகழ்ந்து பாடியுள்ளனர். தமிழ்நாட்டு அருட்சான்றோர்களின் பாடல்கள் பாதுகாக்கப்பட்டு இக்காலத்தினர்க்கும் வருங்கால மக்களுக்கும் பயன்படுமாறு வெளியிடப்பட்டிருப்பது ஒரு நற்செயலே. இஃது உண்மையில் ஒரு (தூய) புண்ணியத் தொண்டாகும். அருட்சான்றோர்களும், மெய்யறிவாளர்களும் அருளிய நூல்களையெல்லாம் வெளியிடுவதில் தனிக் கருத்துக் கொண்டிருக்கும் இக்கழகத்திற்கு என் நன்றியறிவைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ் இப்போது இம்மாநிலத்தின் ஆட்சிமொழியாக இருக்கிறது. நாடு விடுதலையடைந்ததிலிருந்து தமிழை எல்லா அலுவலகங்களிலும் ஆட்சிக்குக் கொண்டுவர அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதுவரை 3,700 பொது அலுவலகங்களில் தமிழில் கடிதப் போக்குவரத்துத் தொடங்கப்பட்டிருக்கிறது. இக்கழகங்கூடத் தமிழில் சில பாட நூல்களை வெளியிடும் பொறுப்பைப் பெற்றிருக்கிறது. தமிழ்

வளர்ச்சி - ஆராய்ச்சிக் குழு, ஆட்சிமொழிக் குழு முதலியவையும் கலைச்சொற்கள், சட்டங்கள், விதிகள், அரசாங்க ஆணைகள், ஒழுங்குமுறைகள், பாடநூல்கள் முதலியன தமிழில் வெளிவர உதவிபுரிந்திருக்கின்றன. அரசாங்கச் சார்பு உள்ள குழுக்களும், சார்பில்லாத நிறுவனங்களும் தமிழ் மொழியையும் இலக்கியத்தையும் வளர்ப்பதில் ஒன்றுபட்டுழைக்கும் எனவும், தமிழுக்குரிய இடம் எப்போதும் கிடைக்கும்படி செய்ய உதவும் எனவும் நம்புகிறேன்.

அழியாத் 'திருக்குறளை' உலகுக்களித்த திருவள்ளுவப் பெருந்தகையின் உருவப்படத்தை இன்று திறந்துவைப்பதும் பொருத்தமுடையதே. திருக்குறள் பல மொழிகளில் பெயர்க்கப் பட்டிருக்கிறது என்றறிகிறேன். கழகத்தின் 1008 ஆவது நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொள்ளும் வாய்ப்பு அளித்தமைக்காகவும், அன்புடனளித்த வரவேற்பிற்காகவும் நான் மீண்டும் நன்றி செலுத்துகிறேன். விழா எல்லா வெற்றியும் பெறுக என மனமுவந்து வாழ்த்துகிறேன்.

திருவள்ளுவர் படத்திறப்பு

டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியாரவர்கள் 'திருவள்ளுவர் திருவுருவப்படத்தைத்' திறந்து வைத்தனர். படம் மூவண்ண முறையில் தக்கபெருந் தொன்மைத் தமிழ்ச் சான்றோரின் தன்மையினை எடுத்துக்காட்டும் இன்ப எழிலுடன் காட்சியளித்தது. இப்படம் பல நூற்றாண்டுகளுக்குமுன் எடுப்பித்த திருமயிலாப்பூர்த் திருவள்ளுவர் திருக்கோவிலின்கண் திகழும் திருப்படிமத்தினை யடியொட்டியதாகும். இதனைத் திறந்து வைக்குங்கால் டாக்டர் செட்டியாரவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் வருமாறு:

உண்மையில் உலகத்தில் சிறந்த பேரற வாழ்க்கை வழிகாட்டி நூல்களில் தலைசிறந்து விளங்கும் ஒன்றான திருக்குறளைத் திருவள்ளுவர் தந்தார் என்பதே அவருக்குப் பெருமை. உயரிய மதிநுட்ப மாண்புடைய நூல் இதனையொத்தது வேறில்லை எனக் கூறலாம் என்று டாக்டர் ஆல்பர்ட் சுவைட்சர் தெரிவித்துள்ளார். "பாலை வனத்தில் தோன்றிய தாமரைப் பூவைப் போலவும், இருளிரவில் தோன்றிய ஒரு நட்சத்திரம் போலவும் திருவள்ளுவர் தமிழகத்தில் தோன்றி, இறைவன் ஏற்றிய ஞானத்திரு விளக்கினைக் கண்டு நூலியற்றி எங்கும் ஒரு விளக்கெனத் திருவள்ளுவர் நின்று உயர்ந்து விளங்குகிறார்" என வீரமாமுனிவர் வரைந்துள்ளனர். இவ்வளவு பெருமையுள்ள திருவள்ளுவரது

நூல் இக்காலத்திலும் வாழ்க்கையில் வெவ்வேறு துறையினர்க்கும் நல்லதொரு வழிகாட்டியாக இருக்கிறது.

திருக்குறளைத் தமிழ் எழுத்தில் அல்லாமல் நாகரி எழுத்தில் எழுதித் தமிழ்மக்கள் படிக்க வேண்டுமென்ற நிலை இந்திய தேச ஒற்றுமைப்பெயரான் உருவாகிக் கொண்டிருப்பதைக் கண்டிக்காமலிருக்க முடியவில்லை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக எழுந்த தமிழ்நூல்கள் அனைத்தும் இப்பொழுதுள்ள தமிழெழுத்து முறையிலுள்ளன. அந்த நெடுங்கணக்கு முறையை மாற்றிவிட்டு அதற்குப் பதிலாக நாகரி லிபியைப் பயன்படுத்துவதென்பது ஒரு சிறிதும் பொருந்தாது. நாகரி எழுத்து முறை தமிழ் எழுத்துக்களின் ஒலிகளுக்கு ஒவ்வாது. ஓரே தலைமுறையில், பழைய நூல்களை எல்லாம் தமிழ் எழுத்தில் படித்த மக்கள் புது எழுத்து முறையினால் திக்குமுக்காடுவது ஒரு பக்கமும், புது எழுத்து முறையில் பயில முற்பட்டுத் தமிழ் எழுத்தில் அமைந்த நூல்களைத் தொடமுடியாத அளவு குருடர்களாகிவிடக் கூடிய குழந்தைகள் ஒரு பக்கமுமாக இருக்கவேண்டிய நிலை இரங்குதற்குரியதாகும். எனவே உணர்ச்சி காரணத்தால் மாத்திரமல்லாமல், நடைமுறைக்கு ஒவ்வாமை காரணமாகவும் எதிர்க்கவேண்டும். ஆட்சியில் உள்ளவர்கள் இதில் சரியான-தக்க கவனம் செலுத்தி, மொழியைக் காக்க ஆவன செய்வார்கள் என எதிர்பார்க்கிறேன். இந்திய அரசியல் சட்டம் 29 ஆவது பிரிவின்படி தமிழ்மக்கள் தங்களுடைய மொழியையும் கலையையும், மொழி எழுத்து முறையையும் பாதுகாத்துக் கொள்ளுதற்குரிய அடிப்படை உரிமை யுடையர். அவ்வுரிமைக்கு ஊறுபாடு ஏற்படாத வண்ணம் அனைத்திந்திய தேசீயம் உருவாக்கப்படுதல் வேண்டும்.

நூல் வெளியீடு

தமிழ்நாட்டு அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் உயர்திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் 1008 ஆவது கழக வெளியீட்டு நூலாகிய 'பன்னிரு திருமுறைப் பெருந்திரட்'டென்னும் அருள் நூலைப் பாராட்டி ஆளுநர்பால் ஒப்புவிக்குமுகத்தான் வெளியிட்டனர். மூவர் முதலிகள் பாடியருளிய தேவாரம் அல்லது அடங்கன் முறையென்னும் ஏழு திருமுறைகளும், எட்டாந்திருமுறையாகிய திருவாசகமும் திருக்கோவையாரும், ஒன்பதாந் திருமுறையாகிய திருவிசைப்பாவுந் திருப்பல்லாண்டும், பத்தாந் திருமுறையாகிய திருமந்திரமும், பதினொராந் திருமுறையும், பன்னிரண்டாந் திருமுறையாகிய பெரியபுராணமும் கூடிய மொத்தத் திருப்பாட்டுக்கள் 18327 ஆகும். இவற்றினின்றும்

இப்பெருந்திரட்டின்கண் தொகுக்கப்பட்ட திருப்பாட்டுக்கள் 2835 ஆகும். இவற்றுள்ளும் தேவாரத்தினின்றுந் தொகுக்கப் பட்டன 2474 ஆகும்.

இப்பெருந்திரட்டுப் பொதுவாகச் செந்தமிழ் அன்பர் களுக்கும் சிறப்பாகச் செந்நெறிச் செல்வர்களுக்கும் மிக்க பயன் விளைப்பதாகும். திருமுறைகள் பாடப்படுங் காலத்துத் தமிழ் நாடு எந்நிலையிலிருந்தது? கடவுட் கொள்கையும் மக்கட் பண்பும் பிறவும் எவ்வாறிருந்தன? சைவ சமயாசாரியர் நால்வர் முதலா யினோர் மக்கட் குழுவுடன் எங்ஙனமியைந்திருந்தனர்? அவர்தம் நல வாழ்க்கைக்கும், முன்னேற்றத்திற்கும் எவ்வாறு வழித் துணையாயிருந்தனர்? மக்களுள்ளத்தைக் கடவுள்வழிபாட்டிலும், மனைவாழ்க்கையிலும், நல்லறவொழுக்கத்திலும், பண்ணிசைப் பயிற்சியிலும், மெய்யுணர்விலும், அன்பருள் நிலையிலும், இன்ப வாழ்விலும் எங்ஙனம் ஈடுபடுத்தியருளினர்? இவை போன்ற வற்றைப் பற்றிய அரும்பெருஞ் செய்திகள் இத்தொகுப்பில் நன்குணரலாம்.

இவ்வரிய நூலை வெளியிட்டுள்ள அமைச்சர் ஆற்றிய சொற் பொழிவின் சுருக்கம்:

மேன்மை தங்கிய கவர்னர் அவர்களே, பேரறிஞர் சுப்பிர மணியம் அவர்களே, அன்பர்களே, இது மிகச்சிறந்த ஒரு திரு விழா. இவ்விழாவில் கலந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைப்பது அரிது. இவ்வாய்ப்பினை அளித்த உங்களுக்கு முதல் முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையில் இவ்வளவு காலைவேளையிலேயே நீங்கள் எல்லா ரும் ஆர்வத்துடன் கூடியிருக்கிறீர்கள். இது கழகம் நாற்ப தாண்டுகளாகச் செய்துவரும் அரிய பணியைக் காட்டுகிறது; சிறந்த சாதனையைக் காட்டுகிறது. சிறந்த இவ்விழா நாற்ப தாண்டுகளாகக் கழகம் பணியாற்றி ஆயிரத்தெட்டாவது வெளி யீட்டை - அதுவும் 'பன்னிரு திருமுறைப் பெருந்திரட்டு' என்ற நூலை வெளியிடும் விழாவாகும். இன்னும் பல ஆண்டுகள் கழகம் தொண்டுபுரிந்து கொண்டிருக்கவேண்டும். நாடெங்கும் தமிழ் உணர்ச்சி பெருகச் செய்யவேண்டும். கன்னித் தமிழ் என்று பெயர் பெற்றதற்கேற்ப எப்போதும் தொடர்ந்து தொண்டு செய்து கொண்டிருக்கவேண்டும். திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் என்ற பெயர் உள்ளது. ஆனால் அவர்கள் திருநெல்வேலியுடன் நின்றுவிடவில்லை. சென்னையில் திருநெல்வேலிக்காரர்கள் பலர் இருக்கிறார்கள். நான் சிறுவயதில் மாணவனாக இருக்கும்போதிருந்தே கவனித்து வந்திருக்கிறேன்.

அது அடிக்கடி நினைவுக்கு வருவதுண்டு. பலரிடமும் சொல்லி யிருக்கிறேன். பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர்களை அந் தந்த ஊர்க்காரர்கள் பாராட்டுவது வழக்கம். குறிப்பாகத் திரு நெல்வேலிக்காரர்கள் திருநெல்வேலிச் சங்கம் என்று வைத்துக் கொண்டு மிகவும் சிறப்பாகக் கொண்டாடுவார்கள். அவர்களுக் கிருக்கும் ஆர்வமும் உற்சாகமும் வேறு மாவட்டத்தினருக்கு இல்லை. சென்னைக்கு வெகு தூரத்திலிருப்பதால்தான் இவர் களுக்கு இவ்வளவு உணர்ச்சியிருக்கிறது. செங்கல்பட்டோ, வடார்க்காடோ, தஞ்சைமாவட்டமாகவோ இருந்தால் இவ்வளவு உணர்ச்சி இருந்திருக்காது. காரணம் சென்னைக்குப் பக்கத் திலேயே அவை இருக்கின்றன. திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த துணைவேந்தர் அவர்களுக்கு நான் பெருமையுடன் கூறிக் கொள்கிறேன். திருநெல்வேலி ஓர் உயர்ந்த மாவட்டம். அம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தமிழ் நாட்டுக்குப் பணி செய் கிறார்கள்; தமிழ் நாட்டுக்கு அப்பாலும் பணி செய்கிறார்கள். எல்லோரும் இன்பத்தை அனுபவிக்க வேண்டும். இந்த இன் பத்தை எல்லோரும் அனுபவிக்க வேண்டுமானால் அதைப் பெருக்க வேண்டும்.

இக்கழகம் சைவசித்தாந்த நூல்களை வெளியிடுவதுடன் நின்றுவிடவில்லை. பல துறைகளிலும் நூல்களை வெளியிட்டுள் ளார்கள். 'அன்பே சிவம்' என்ற தொடர் உண்டு. அது ஓர் அருமையான தொடர். அதில் உயர்ந்த கருத்து இருக்கிறது. அந்த அன்பு அவர்களிடம் இருக்கிறது. சமயம் என்பது வேறொன்றுமில்லை, சமுதாயம் சீரிய முறையில் நடைபெறுவதற்கு ஒரு சிறந்த சாதனம் தான் அது. சமயமும் சமுதாயமும் வெவ் வேறல்ல.

பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரு குறிப்பிட்ட நூல் வேண்டும் என்றால் பல கடைகளுக்குச் சென்று பார்த்தாலும் கிடைக்காது. கார் எடுத்துக்கொண்டு கடை கடையாகச் சென்று கேட்டாலும் வேண்டிய நூல் கிடைக்காது. இப்போது கழகம் 1007 நூல்களை வெளியிட்டுள்ளது. பல நூல்களைத் தமிழில் நாம் பெருமைப் படும் அளவுக்கு அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். பல சிறந்த நூல்களைப் பல ஆசிரியர்களைக் கொண்டு வெளியிட்டிருக்கிறார்கள். முன்பெல்லாம் என்னைப் போன்ற படிக்காதவர்களுக்குச் சைவ சித்தாந்தக் கழகம் என்றால் அவர்கள் வெளியிட்ட திருக்குறள் டைரிதான் தெரியும். அது ஆண்டுதோறும் வெளியிட்டுவரும் திருக்குறள்டைரி ஓர் அரிய பணி. அது ஒன்றே போதும். குழந்தைக்குத் தேனில் சேர்த்து மருந்து கொடுப்பது போல அன்றாடமும் திருக்குறள் படிப்பதற்கு இந்த டைரியால் வாய்ப்பு

ஏற்படுகிறது. டைரி எழுதும் பழக்கம் ஒரு ஃபாஷனாக இக் காலத்தில் உள்ளது. அன்றாடம் டைரியில் என்ன எழுதுவது என்று பார்ப்பார்கள். அப்போது குறள் கண்ணில்படும். குறளை யும் பார்க்கிறோம். அதை மனத்தில் இருத்திக் கொள்கிறோம். இத்தகைய சீரிய பணியை அவர்கள் செய்து வருகிறார்கள். அவர்கள் சமயத்தைப் பற்றிமட்டும் நூல்களை வெளியிடவில்லை. பொதுவாகத் தமிழைப் பற்றி எல்லோரும் தெரிந்துகொள்ளக் கூடிய வகையில் பல சிறந்த வெளியீடுகளை வெளியிட்டிருக்கின்ற னர். நம் தமிழின் சிறப்பை உயர்வை நாமெல்லாம் போற்று கின்றோம்-அவற்றால் பெருமைப்படுகிறோம். மேன்மை தங்கிய கவர்னர்கூடப் புகழ்ந்து பாராட்டினார்கள். **தமிழ் தெய்வீகம் பொருந்தியது.** இந்த உண்மையை நாம் மறக்க முடியாது; உணராமல் இருக்க முடியாது. நாம் பெற்ற செல்வங்கள் எல்லாம் நம் முன்னோர்கள் சேர்த்து வைத்துப்போன நூல் களே. அவற்றைக் கழகம் வெளியிட்டுள்ளது. ஒப்பற்ற தமிழ் இலக்கியங்கள் எல்லாம் இறைவனின் பாமாலைகளாயுள்ளன. தமிழ்ச் சிறப்பு, கலைச் சிறப்பு, தமிழில் உள்ள பற்று, கடவுளின் மேல் உள்ள பற்று இவையெல்லாம் சேர்ந்தவைதான் தமிழில் இலக்கியங்களாக உள்ளன. "நாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்குங் காணோம்" என்று பாரதியார் பாராட்டிய தமிழ் இவ்வகையிலேதான் ஆக்கப்பட்டுள்ளது. கலை ஒருபுறம், இறைவன் பற்று ஒரு புறம். இரண்டும் சேர்ந்து இந்த ஒப்புயர்வற்ற தமிழ் நமக்குக் கிடைத்துள்ளது. அதை எல்லோரும் அனுபவிக்கச் செய்யவேண்டும். நாம் மட்டும் அனுபவித்தால் போதாது. 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்றனர். நம் ஊர், நம் மாவட்டம் என்று கூற வில்லை. பரந்த மனப்பான்மை உடையவர்கள் நம் பெரியோர்கள். அதனால்தான் நம் கழகத்தினரும் அக்கறைகொண்டு பல துறை நூல்களை வெளியிடுவதில் ஆர்வமுடன் ஈடுபட்டனர்.

தமிழை நாம் உணர்ந்து கற்க முற்பட்டிருக்கிறோம் என்றால் மற்ற நாடுகளிலும் தமிழின் பெருமையை உணர்ந்து தமிழ் கற்று வருகின்றனர். மாஸ்கோவில் தமிழ் கற்று வருகின்றனர் என்று கவர்னர் அவர்கள் கூறினர். சில ஆண்டுகட்கு முன்பு நான் ஆக்ஸ்போர்டில் உள்ள ஒரு சிறிய ஆனால் புகழ் பெற்ற நூல் நிலையத்திற்குப் போக நேர்ந்தது. அங்கே போய் ஒவ்வொரு பகுதியாகப் பார்த்துக்கொண்டு வந்த போது அங்கிருந்தவர்கள், "வாருங்கள் உங்கள் நாட்டுப் புத்தகங்கள், உங்கள் மொழிகளின் வெளியீடுகள் எல்லாம் இங்கே இருக்கின்றன; அவற்றைப் பாருங்கள்" என்று கூறி அவர்களை அழைத்துச் சென்றனர்.

தமிழ் நூல்களையும், நம் நாட்டுப் பிற மொழி நூல்களையும் காட்டினர். "நாங்கள் எங்கள் வெளியீடுகளை உங்களுக்கனுப்பு வது போல் நீங்கள் உங்கள் நாட்டு வெளியீடுகளை யனுப்புங்கள்" என்று கேட்டுக் கொண்டனர். அவர்கள் வெளியிடும் புத்தகங் கள் எல்லாம் அவ்வளவு சிறப்புடையவை. சில சமயம் நான் நினைப்பதுண்டு, என்ன தமிழ்ப் புத்தகங்கள் மட்டும் வசீகரம் இல்லாதிருக்கின்றனவே என்று. குழந்தைகளுக்கு மட்டு மில்லை, வயது வந்தவர்களுக்கும் வசீகரம் வேண்டும். எல்லோருக்கும் அழகு வேண்டும். அப்படியானால் விலை அதிகமாகப் போகும். எல்லோரும் வாங்க முடியாது. "இவ்வளவு விலை கொடுத்து யார் வாங்க முடியும்? அவை யெல்லாம் நூல் நிலையத்தில் தானே வைத்துக்கொள்ள முடியும்" என்று நினைக்கத் தோன்றும். ஆனால் வெளியிடுபவர்களுக்குத்தான் புத்தகம் வெளியிடுவதின் அருமை தெரியும்; அவர்களுக்குக் கட்டுபடியாகாதுதான். என்ற லும் சிறிது விலைமலிவாகத்தான் இருக்க வேண்டும். ஏனெனில் எல்லோரும் வாங்க வேண்டுமல்லவா? நாயன்மார்கள் அரிய தமிழில் இசைப்படுத்தித் தேவாரப் பாடல்களைப் பாடியிருக்கின் றனர். அவை காதுகளுக்கும் மனத்துக்கும் சிறந்த இன்பத்தைத் தருகின்றன. எல்லோரும் கேட்டனுபவிக்கும் வகையில் அவற்றை அருளியுள்ளனர். எல்லோரும் அனுபவிக்கும்படி உயர்ந்த சம தர்ம அடிப்படையில் அருளியுள்ளனர். நாம் எல்லோரும் அந் நூல்களை விலை கொடுத்து வாங்கி வாசிக்கவேண்டும். இப்போது **பன்னிரு திருமுறைப் பெருந்திரட்டு** என்ற நூலை வெளியிட்டிருக் கின்றனர். இதன் விலை 10 ரூபாய்கூட இல்லை. இவ்வளவு வசீகரமாயுள்ளது அதுவுமன்றிப் பாடல் பெற்ற தலங்களின் படங்கள், வழி விளக்கப்படங்கள் இவையெல்லாம் சேர்த்து ஏழரை ரூபா தான். விலை குறைவுதான். பழைய காலத்தில் தமிழில் அச்சுப்பிழைகள் இருந்தன. ஆனால் பிழைகள் இல்லாமல் அப்பரின் பெயரால் அச்சகம் நிறுவிக் கழகத்தினர் அச்சடித்து வருகின்றனர். சில ஆண்டுகளுக்கு முன்பு நான் இரங்கூனிலிருக்கும்போது, ஏதேனும் தமிழில் அச்சடிக்க வேண்டின் சென்னைக்கு வரவேண்டும் என்பேன். அப்பர் அச்சகம் அச்சிடுவதில் பேர் பெற்றது; கழகமும் பிரசித்தி பெற்றது.

இந்நூல் எல்லோருக்கும் கிடைக்கும் வகையில் வெளியிட்டி ருக்கின்றனர். நல்ல காரியம் செய்யும்போது நாம் நன்றியுடன் ஏற்றுக்கொள்கிறோம். பொதுவாக ஒரு காரியம் செய்யும் போது இன்னும் கொஞ்சம் வேண்டும்; அது இல்லையே இது இல்லையே என்றுதான் சொல்வார்கள். அந்த முறையில்தான்

நான் சொன்னேன், 1008 வெளியீடுகள் போதாது என்று. இன்னும் பல வெளியீடுகளை நாமனுபவிக்கும் வகையில் வெளியிட வேண்டும். எனக்கு நீண்ட காலமாக ஒரு கோரிக்கை உண்டு. அது இப்போது நிறைவேற்றப்பட்டுத்தான் வருகிறது. ஒப்புயர்வற்ற புலவர்கள் - புலவர்கள் எல்லாம் தெய்விகம் பொருந்தியவர்கள் - மேன்மை பொருந்தியவர்கள் - அவர்கள் வரலாறுகளை எல்லாரும் தெரிந்துகொள்ளக்கூடிய வகையில் நூல்கள் குறைவாகவே உள்ளன. அப்படிப்பட்ட நூல்கள் ஆங்கிலத்தில் உள்ளது போல் இல்லையே என மாணவனாக இருந்த காலத்திலேயே வருந்தியது உண்டு. இக்குறை இப்போது தீர்ந்து வருகிறது. கழகத்தாலும், மற்றப் பதிப்பகங்களின் சேவையாலும், ஆசிரியர்களின் சேவையாலும் இக்குறை நீங்கிக் கொண்டு வருகிறது. ஆனால் இன்னும் நல்ல முறையில் வேறு சில சிறந்த பதிப்புக்களை வெளியிடுவார்கள் என நம்புகிறேன்.

மாணவனாயிருக்கும்போது ஆங்கிலத்தில் படித்த நினைவு இருக்கிறது. Men of letters series என்ற ஒன்று உண்டு. அந்த வரிசையில் பல நூல்களை வெளியிட்டுள்ளார்கள். இவற்றைப் பார்க்கும்போது நால்வர்களைப்பற்றிய குறிப்புக்கள் சுருக்கமாகவே தமிழில் வெளிவந்துள்ளன.

Men of Letters வரிசையில் ஒவ்வொரு புலவரையும் எடுத்துக்கொண்டு அவரைப் பற்றிய விமரிசனம், அவருடைய கவிதையின் விமரிசனம் - கவிதையில் உள்ள அரும்பெருங் கருத்துக்கள் எல்லாம் இருக்குமாறு வெளியிட்டுள்ளார்கள். புலவர்களைப் பற்றிய வரலாறுகளையும் நாம் தெரிந்துகொள்ளுகிறோம். எல்லாக் கவிதைகளையும் படிக்க நமக்கு நேரமிராது; படித்தாலும் எல்லாம் புரிந்துகொள்ள முடியாது. ஆனால் இந்த வரிசையில் வெளியிடப்பட்ட நூல்களைப் படித்தால் எல்லாம் தெரிந்து கொண்ட மாதிரி இருக்கும். அம்முறையில் பல நூல்கள் ஆங்கில இலக்கியத்தில் இருக்கின்றன. நான் உதாரணத்துக்காகத்தான் சொன்னேன். இவ்வளவு தலைசிறந்த ஆற்றலோடு நூல்களை வெளியிடுகின்ற உங்களுக்கு நான் யோசனை கூறும் தகுதியுடையவனல்லன். அப்படி ஆங்கிலத்திலிருப்பதுபோல் தமிழ்ப் புலவர்களைப் பற்றியும் - அவர்கள் கவிதைகளைப்பற்றியும் உருப்படியான வகையில் வெளியிடத் தொடங்கலாமெனத் தாழ்மையுடன் கூறுகிறேன்.

இன்று வெளியிடப்படும் நூலும், அதையொட்டிய விளக்கப்படங்களும் எல்லாம் நம் திருக்கோயில்களைப் பற்றியவை. திருக்கோயில்களில்தான் நம் தமிழ் வளர்ந்தது; கலை வளர்ந்தது.

கோயில் இல்லை என்றால் தமிழ் இல்லை; கலை இல்லை என்றுகூடச் சொல்லலாம். கோயில் இல்லாத தமிழ் என்றால் அது வேறு தமிழாய் இருந்திருக்கும். அது நாம் இப்போது போற்றும் தமிழாய் இருந்திருக்காது.

இவ்வளவு சக்தியை அவர்களுக்கு அளித்தது இறைவனிடமிருந்த பற்றுத்தான். அப்பற்றுத்தான் அவ்வளவு சிறந்த சக்திக்குக் காரணம். "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாரதியார் உலகெங்கும் பறைசாற்றும் அளவுக்குச் சக்தி ஏற்பட்டது. தேவாரங்கள், திருவாசகம், திருமந்திரம் இவற்றை நாம் சுலபமாகப் படித்துத் தெரிந்துகொள்ளலாம்; அல்லது கேட்டுப் புரிந்துகொள்ளலாம். அவற்றை இசையுடன் சொல்லவேண்டும். அவர்கள் இசையுணர்ச்சியுடன்தான் பாடியிருக்கின்றனர். அதனால் காதுக்கும் இன்பம், மனதுக்கும் இன்பம். அப்போதுதான் நாம் அவற்றை அனுபவிக்க முடியும்.

சமுதாயத்திற்கு இன்றியமையாத சாதனம் **சமயமே**. சீரிய உயர் வாழ்வுக்குச் சமயம் இன்றியமையாதது. 'பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்பது உண்மையான வாக்குத்தான். வள்ளுவரும் இதை அனுபவ பூர்வமாகத்தான் கூறியிருக்கிறார். பொருள் வேண்டியது தான்; அது அடிப்படையானதுதான். ஆனால் பொருள் மட்டும் இருந்தால் போதாது. பொருள் படைத்தவர்களை நாம் பார்க்கிறோம்; பொருள் இருந்தும் அவர்களால் அனுபவிக்க முடியவில்லை. பொருள் படைத்தும் அவதிப்படுபவர்களை நம் நாட்டில் மட்டுமல்ல; நம் நாட்டைக் காட்டிலும் மேனாட்டில் மிகுதியாகக் காண்கிறோம்.

சீரிய வாழ்வை - குறைவற்ற வாழ்க்கையை - இன்பகர வாழ்க்கையை - வாழ வேண்டுமானால் **கோயில்கள் வேண்டும்**. கோயில்களே நம் செல்வங்கள். தமிழ்நாட்டின் பெருமை உலகம் எல்லாம் பரவுவதற்கு முக்கிய காரணம் கோயில்களே.

இரண்டு ஆண்டுகட்கு முன்பு நண்பர் ஒருவர் - தொழில் துறையில் ஈடுபட்ட ஒரு பிரமுகர் - தமிழ்நாட்டிலிருந்து ஜெர்மனிக்குச் சென்றார். ஜெர்மனியில் முதல்வராயுள்ள சான்சலர் **அடினர்** என்பவருக்கு அடுத்த ஸ்தானத்தில் உள்ளவரை நண்பர் போய்ப்பார்த்தார். அப்போது அவர் "நீங்கள் இந்தியாவின் எப்பகுதியிலிருந்து வருகின்றீர்கள்?" என்று கேட்டார். அதற்கு நண்பர் "மதராஸ் ராஜ்யத்திலிருந்து வருகிறேன்" என்றார். உடனே அவர், "மதுரைக் கோயில் இருக்கிறதே அந்தப் பகுதியில் இருந்துதானே" என்று கேட்டாராம். ஜெர்

மணியின் இரண்டாவது ஸ்தானத்திலிருக்கும் அவருக்கு மதராஸ் என்றதும் மதுரைதான் நினைவுக்கு வந்திருக்கிறது.

நம் திருக்கோயில்களுக்கும், திருமுறைகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. திருமுறைகளுக்குமட்டுமல்ல; மற்றத் தமிழ் நூல்களுக்கும் தொடர்பு உள்ளது. எவ்வாறு தமிழின் பெயர் உலகெங்கும் பரவியிருக்கிறதோ, அவ்வாறே நம் கோயில் களின் பெருமையும் பரவியிருக்கிறது. இரண்டு மாதங்களுக்கு முன்பு மத்திய அரசாங்கத்திலிருந்து சம்பந்தப்பட்ட அமைச்சர் எழுதினர்; "அயல் நாடுகளிலிருந்து பிரயாணிகள் நிறைய நம் நாட்டுக்கு வருகின்றனர். அவர்களின் எண்ணிக்கை ஆண்டு தோறும் மிகுதியாகி வருகிறது. அவர்களின் நோக்கம் நம் நாட்டுக் கோயில்கள் - சிற்பக்கலை இவற்றைப் பார்ப்பதுதான்: ஆனல் சில இடங்களில் சிற்பங்களைப் பார்ப்பதற்குச் சில அசௌ கரியங்கள் இருக்கின்றன என்று சொல்லுகின்றனர். அதைக் கவனிக்கவும்" என்று. இரு வாரங்களுக்கு முன்பு பதில் எழுதி னேன்: 'அப்படி ஒன்றும் கோயில்களைப் பார்க்கத் தடை இல்லை. எல்லோரும் வந்து நன்கு பார்க்கலாம். பார்ப்பதற்கு வசதி யளித்திருக்கிறோம்" என்று. மேனுடுகளிலும் சிற்பக்கலைகளை எல்லாம் நாம் தடையின்றிப் போய்ப் பார்க்கலாம் என்ற நிலை இருக்கிறது.

நம் தமிழ்நாட்டுக் கோயில்களின் அருமை பெருமைகளை வெளிநாட்டில் உள்ளவரும் நன்கு அறிந்துகொள்ளுவதற்காகக் கோயில்களைப்பற்றிய ஒரு படம் தயாரிக்கப்படுகிறது. அது இன்னும் முடியவில்லை. நேற்று நான் அதைப்பார்க்க நேர்ந்தது. பார்த்ததில் எனக்கு அளவு கடந்த மகிழ்ச்சி. பல நூற்றாண்டு களுக்கு முன்பு - ஆயிரமாண்டுகட்கு முன்பிருந்து அமைக்கப் பட்ட நம் கோயில்களில் நம் சிற்பக்கலை எவ்வாறெல்லாம் வளர்ந்து வந்திருக்கிறது; காலத்துக்குக் காலம் மாறிக்கொண்டு வந்திருக் கிறது என்பதைக் காட்டும் வகையில் படம் எடுத்துள்ளனர். இறைவனை வழிபடும் முறை - நம் நாட்டுப் பத்திப்பெருக்கையும் காட்டுகிறது அப்படம். வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் எல்லாம் அப்படத்தைப் பார்த்துவிட்டு "இம்மாதிரிக்கூட்டத்தை நாங்கள் எங்கும் கண்டதில்லை. அமெரிக்காவில்கூடக் கண்ட தில்லை. இவ்வளவு பெரிய கூட்டம் எவ்வளவு அமைதியாய் இருக்கிறது! நிரம்ப ஆச்சரியமாயிருக்கிறது" என்று கூறினர் கள். வழிபாட்டு முறை, திருவிழாவின் விசேடங்கள், பழஞ் செல்வங்களான கோயில்களை எப்படிப் பராமரித்து வருகிறோம் என்பதையும் எல்லாவற்றிலும் முக்கியமாக ஆலயங்கள் மக்கள் வாழ்வுக்கு எவ்வாறு பயன்படுத்தப்பட்டு வருகின்றன - சிறப்பாக

மாணவிகள் கலைகளை எவ்வாறு நன்கு உணர்கின்றனர் - மற்றவர்களும் எவ்வாறு அனுபவிக்கின்றனர் என்பவற்றையெல்லாம் தெரிவிக்க அதற்குரிய ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் படமாகக் காட்டுவதன் நோக்கம் வெளிநாட்டில் உள்ளவர்களும் நம் செல்வத்தையுணர்ந்து அனுபவிக்க வேண்டும் என்பதுதான். 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்ற கருத்துடன் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் நூல்களை வெளியிட்டு வருகின்றது போல, அப்படம் அங்குள்ளவர்களும் பார்த்தனுபவிக்கும் முறையில் தயாரிக்கப் பட்டு வருகிறது.

இவ்வாறு மொழிந்து கழகத்து 1008 ஆவது வெளியீடாகிய 'பன்னிரு திருமுறை பெருந்திரட்'டென்னும் சிறந்த நூலை மாண்பமை ஆளுநர்க்கு வழங்கி வெளியிட்டனர்.

நூற்காட்சித் திறப்பு

உயர்திரு. கணபதியா பிள்ளை அவர்கள் (நீதிபதி சென்னை உயர்நீதி மன்றம்) நூற்காட்சியினைத் திறந்து வைத்தனர். யாண்டும் பொருட்காட்சிகள் வைக்கப்படுகின்றன. அவைகள் தக்கரால் திறக்கப்படுகின்றன. மக்களனைவர்களும் குடும்பத்துடன் சென்று கண்டு மகிழ்கின்றனர். அப்பொருள்களை யுணர்த்துவன எழுத்தாலாகிய சொல்லும், அத்தகைய சொற்கள் பல தொடரும் சொற்றொடர்களும், இவை நிலைத்திருக்கும் நூல்களுமேயாம்.

இந்நூல்கள் இலக்கண, இலக்கியமென இருபெரும் பிரிவில் அடங்கும். இவைகள் முத்தமிழ் வல்ல செந்நாப் புலவர்கள் பன்னாளுழைத்துப் பாங்குற ஆக்கித் தந்த பயனார் அருந் தொண்டின் விளைவாகும். இப்பெரும் புலவர்கள் இவ்வரிய பணியை முட்டின்றி நிறைவேற்றுவதற்கு இவர்களை எத்திறத்தானும் போற்றிப் புகழ்பெற்றுவரும் வேந்தர், மன்னர், பெருநிலக்கிழார், வணிகர், வள்ளல், புரவலர், நூல்களை வாங்கிக் கற்றுங்கற்பித்தும் வரும் கலை வல்லார், பயில்வோர் முதலியோருடைய ஒப்புரவாண்மை பெருந்துணையாம் என்ப.

இந்நூற்காட்சியின்கண் அரிய பழம்பெரு நூல்கள், செய்தித்தாள்கள், புத்துணர்வும் பொருவில் எழிலும் போற்றிக்காட்டும் புதுப்பெரு நூல்கள், புலவர், புலவரையோம்பிய புரவலர், இவ் விரு பெருஞ் சான்றோர்களின் திருமுகங்(கடிதம்)கள், கைச்சாத்துக்கள், ஒளியுருவங்கள் முதலியன வியத்தகு முறையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

தொன்று தொட்டு மொழி வளர்ந்துவரும் முறைமையும், நூல் வழக்கினின்றும் அஃது உலக வழக்கின்கண் திரிபெய்து மாறும், உலக வழக்கில் அயன் மொழி மயலால் தூய தனித் தமிழ்ச் சொற்கள் வழக்கு வீழ்ந்தமையும், அவ்வவ்விடங்களில் அயன் மொழிச் சொற்கள் வந்து புகுந்தமையும், அவை புகுந்தமையால் பண்டைய சொற்களை நூலின்கண் பயில்வார் சொற்பொருள் விளங்குதற்பொருட்டு நிகண்டு அகராதி முதலியவற்றை உழைத்து உடன் பயிலுதல் வேண்டும் என்னும் இன்றியமையாமையும் இவை போன்ற பிறவும் கால முறையிற் காட்டும் எழுத்துப்படங்களும் வைக்கப்பட்டுள்ளன.

ஒரு பொருளை எடுத்துக்கொண்டால் அப்பொருளின் இனப்பிரிவுகளும் அவ்வவற்றிற்கியைந்த பெயரும் தெளிவுறக் காட்டும் எழுத்துப் படங்களும் பலவாகும். எடுத்துக்காட்டாக நெல்லின் வகைகளும் அவ்வவற்றிற்குரிய பெயர்களும் மூந்நூறுக்குமேல் எழுத்துப்படத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. இது போல் பல்வகைப் பொருட்களுக்கும் அமைக்கப்பட்டுள்ளன. சில பல வரலாற்றுக் குறிப்புக்களும் காட்டப்பட்டுள்ளன. இவைபோல் நூன்முறைகளுள் இலக்கண இலக்கிய வகைகள், சிற்றிலக்கியங்கள், பனுவல்கள் (பிரபந்தங்கள்) முதலியனவும், காலம், வரலாறு, ஆசிரியர், ஆக்குவித்தோர் ஆகிய குறிப்புக்களுடன் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

பழம்பெரும் புலவர்களின் நிழலுருவங்களும் அவர்களின் வரலாற்றுக் குறிப்புக்களும் அமைக்கப்பட்டுள்ளன. அரிய பழம்பெருஞ் சுவடிகள், செய்தித்தாள்கள் முதலியனவும் நிரம்பியிருந்தன. கிடைத்தற்கரிய பல புலவர் பெருமக்களின் கைச்சாத்து (கையொப்பம்)க்களை படப்பிடிப்பாக்கி அவ்வவற்றிற்கு நேராக அவ்வவர்களின் பெயர் விளக்கங்களும், வரலாற்றுக் குறிப்புக்களும் பொறித்துக் காட்டப்பட்டுள்ளன.

தமிழகத்தாரே யன்றிக் கடல் கடந்த வெளியுலகத்தாரும், அடுத்துள்ள அயன் மொழியாளரும் தமிழின் தொன்மை, இனிமை, எளிமை, இயன்மை, தனித்தியங்கும் ஆற்றலுண்மை, கலப்புக்கிடங் கொடுத்துக் கவினழியாமை முதலிய தனிப்பெருமாண்புகளை மனமார நினைந்து, வாயார வாழ்த்தி, கையார வரைந்து நிலைநாட்டிய பல் பெரும் புகழுரைகளைப் பொறித்துக் காட்டிய எழுத்துப்படங்களும் அமைக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டார் திருக்குறள் திருவாசகம் போன்ற அரிய நூல்களைத் தத்தம் மொழிகளில் மொழி பெயர்த்துப் போற்றிப் புகழ்ந்த மொழி பெயர்ப்பு நூல்களும் வைக்கப்பட்டிருந்தன.

பல்வேறு சமயங்களின் பெயர்களும், அவ்வவற்றின் கொள்கைகளும், அவற்றை ஆக்கிய ஆசிரியன்மார்களும் விளக்கிக் காட்டப்பட்டுள்ளனர். ஆசிரியர் பெயரானன்றித் தெய்வத்திருப் பெயரான் தொன்று தொட்டு வழங்கி இன்றுகாறும் நிலை பெற்றுத் திகழ்ந்து வரும் சமயங்களின் பெயர்களும், அவ்வவற்றின் கொள்கைகளும், அவற்றைக் காலங்கடோறும் திருவருளாற்றேன்றி உலகுக்கு விளக்கி உண்மையுணர்த்தி நிலைநாட்டிய ஆசிரியன்மார் திருப்பெயர்களும் விளக்கும் எழுத்தோவியங்களும் இவை போன்ற பல்வேறு துறைகளிலுமுள்ள அரும்பெருஞ் செய்தி விளக்கங்கள் பல அமைந்துள்ளன.

சொல்லாட்சி முறையால் விளங்கிக் கொள்ளுதற்காம் பல குறிப்புக்களும் விளக்கப்பட்டிருந்தன. அவற்றுள் சிறந்தது: ஒரு சொல்லை எடுத்துக்கொண்டால் அதன் வேர்ச்சொல், அதினின்றுங் கிளைத்த இனச்சொல், சொற்கள் திரிபெய்து முறைகள் முதலியன அனைத்தும் விளக்கி அவை ஒரு குடும்பம் போற்றேன்றுந் தன்மையால் சொற் குடும்பமாம் முறைமை காட்டிய எழுத்தோவியங்களும், மக்கட் பெயர், இல்லப்பெயர், ஊர்ப்பெயர், தொழிற்றுறைப் பெயர் முதலிய அனைத்தும் தூய தனித்தமிழ்ச் சொற்களான் அமைப்பது தமிழ்மொழிக்கும், தமிழர்தம் பண்பாட்டிற்கும் தனிப்பெரு மதிப்புத் தருவதென்னும் உண்மையினை விளக்கும் எழுத்தோவியங்களும் அமைந்திருந்தன.

நூற்காட்சியின் திறப்பு விழாத் தலைவர் அரியதொரு விரிவுரையாற்றி நூற்காட்சியினை அனைவருங் கண்டின்புறுமாறு வேண்டி முன் செல்லத் தொடர்ந்து ஆளுநர், அமைச்சர், ஆன்றோர், பெருமக்கள் முதலியோர் சென்று காட்சியினைக் கண்டு களித்தனர். சென்னை உயர்நீதிமன்ற நடுவர் திரு. **கணபதியா பிள்ளை** அவர்கள் நூற்காட்சியை 'மானசீகமாக'த் திறந்து வைத்து ஆற்றிய திறப்புரை:

மாட்சிமை மிக்க கவர்னரவர்களே, பெரியோர்களே,

எனக்கு ஒரு சிறு பணி இட்டிருக்கிறார்கள். உங்கள் கண் முன்னில்லாத கண்காட்சியைத் திறந்துவைக்கும் பணியைக் கொடுத்திருக்கின்றனர். இதை மானசீகமாகத்தான் திறந்து வைத்துப் பேசுகிறேன். சென்னையில் உள்ள மற்றக் கண்காட்சிகளைப் போலல்லாமல் இஃது ஒரு சிறந்த கண்காட்சியாகும். இது கண்ணுக்கு மட்டுமன்று, கருத்துக்கும் விருந்தளிப்பதாக அமைந்துள்ளது. தமிழின் தொன்மையையும் சிறப்பையும் காட்டுவதாக இருக்கிறது. நெடுநாளாகத் தமிழ் என்றால் மற்ற மொழிகளிலிருந்து வளர்ந்த ஒன்று என்ற கருத்து நிலவி

வந்திருக்கின்றது. ஆனால் உண்மையில் தமிழிலிருந்து பல மொழிகள் கடன்வாங்கியிருக்கின்றன. வடமொழியும் கடன் வாங்கியிருக்கிறது. இதையெல்லாம் பட்டியல் மூலம் இந்நூற் காட்சியில் காட்டியிருக்கின்றார்கள். நம் நாட்டிலேயே நம் மொழியைப்பற்றியும், அதன் தொன்மையைப்பற்றியும் அறியாதவர்கள் நிறைய இருக்கின்றனர். ஆகையால் இக்காட்சி அவசியமாக இருக்கிறது. இங்கு நான் ஓர் உண்மை வரலாற்றைக் கூறலாமென்று விரும்புகிறேன். என்னோடு வேலை பார்க்கும் இணை (சக) நீதிபதியுடன் நான் மூன்றாண்டுகட்கு முன்பு பேசிக்கொண்டிருந்தேன். அக்காலத்தில் வீட்டில் நாங்கள் தமிழ் பேசுவது உண்டு. அவரிடம் கலை, மொழிபற்றி அளவளாவிக் கொண்டிருந்தேன். அவர் என்னைப் பார்த்துக் கேட்டார்: "பிள்ளையவர்களே, உங்கள் மொழியில் இரண்டாயிரமாண்டுகட்கு முன்பே நாகரிகம் அமைந்துள்ளது என்கின்றீர்களே - ஆனால் பசு என்ற மிருகத்துக்குத் தமிழ் வார்த்தை உண்டா?" என்று கேட்டார். எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. அவருக்கு நேரடியாகப் பதில் சொல்லாமல் கேள்விகள் மூலம் உணர்த்த முற்பட்டேன். அவரைப் பார்த்து, "தமிழ்நாட்டில் மூவாயிரமாண்டுகளுக்கு மேலாக விவசாயம் இருந்துவந்தது என்பதை ஒப்புக்கொள்கிறீர்களா?" என்று கேட்டேன். "ஒப்புக்கொள்கிறேன்" என்றார். மூவாயிரம் ஆண்டுகளாகத் தமிழர் விவசாயத்தையே நம்பி வாழ்ந்திருக்கின்றனர் என்பதை ஒப்புக்கொள்கிறீர்களா?" என்று கேட்டேன். "ஒப்புக்கொள்கிறேன்" என்றார். "அக்காலத்தில் டிராக்டர்கள் முதலியன இல்லாமல் உழுதார்கள் என்பதை நம்புகிறீர்களா?" என்று கேட்டேன். "நம்புகிறேன்" என்றார். உடனே நான் "பசுவில்லாமல் எப்படி உழுதார்கள்? பசு இல்லாமல் காளை எப்படி வந்தது? இவ்வளவு காலமாகப் பசு என்பதற்குத் தமிழில் வார்த்தை இல்லாமல் இருந்திருக்குமா?" என்று நான் அவரைத் திருப்பிக் கேட்டேன். அதற்கு அவர் "அப்படியானால் ஏன் அந்த வார்த்தையை வளர்க்கவில்லை?" என்று கேட்டார். நான் சொன்னேன்: "அது தமிழர்களின் சோம்பேறித்தனத்தால் தான். அதை வார்த்தை என்றுகூடச் சொல்லமுடியாது; ஓர் எழுத்துத்தான். தமிழில் வாய்திறந்து 'ஆ' என்றாலே அவ்வொலி பசுவைக் குறிக்கும். உலகில் அழகு எங்கெங்கு இருக்கிறதோ, அங்கிருந்தெல்லாம் தமிழர்கள் கடன்வாங்கிக் கொள்கிறார்கள். தமிழன் அழகில் மோகமுள்ளவன். அதனால் சொந்த மொழிகளையெல்லாம், கருத்துக்களையெல்லாம் மறந்து விடுகின்றான்" என்றேன். அவரும் இதை ஓரளவு ஒப்புக் கொள்வதாகச் சொன்னார்.

நாற்பதாண்டுகளுக்குமுன் அடுப்பங்கரையில் மட்டும் தமிழ் பேசினால் போதும் என்ற நிலை இருந்தது. அப்போதுதான் இக்கழகம் தன் பணியை ஆரம்பித்தது. அக்காலத்தில் நல்ல புத்தகம் கிடையாது; நல்ல முறையில் புத்தகங்கள் பதிப்பிப்பவர்களும் இல்லை. இப்படிச் சோர்வுற்ற மனிதர்களுக்கிடையே சிறந்த பணியைச் செய்ததால் கழகத்தை நாம் பாராட்டுகிறோம். இந்த நிலையத்தின் மூலம் மொழிக்கும் சமயத்திற்கும் செய்யப்பட்ட தொண்டுகள் மிகவும் பாராட்டத் தக்கவை.

தமிழரின் முதல் கொள்கை 'ஆதி பகவன் முதற்றே உலகு' என்பதுதான். ஆயிரமாயிரமாண்டுகளாகத் தமிழர் இதை மறந்தாரில்லை. அந்தப் பண்புக் கேற்பவே கழகத்தினர் சைவத்தையும் தமிழையும் வளர்த்து வந்திருக்கின்றனர். எவ்வளவோ எதிர்ப்புக்களுக்கிடையே கழகம் வளர்ந்து வந்திருக்கிறது. கடவுளருளால் அவற்றை எல்லாம் வென்று மேலோங்கியிருக்கிறது. இன்னும் மேலோங்கி வளர வேண்டுமென்று ஆசிகூறிக் கண்காட்சியை இங்கிருந்தே திறந்துவைக்கிறேன்.

நன்றி நவிலுதல் கடவுள் வாழ்த்துப் பாடுதல் ஆகியவற்றுடன் காலைக் கூட்டம் நிறைவுற்றது.

மொழி மாநாடு

மாலை 5-30 மணிக்கு 'மொழி மாநாடு' துவங்கப்பெற்றது. கடவுள் வாழ்த்து ஓதப்பெற்றது. மாநாட்டைப் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை, (எம். ஏ., எல். டி.) அவர்கள் திறந்து வைத்தனர். உலகனைத்திலும் வழங்கும் மொழிகள் எல்லாவற்றினும் நனிமிகத் தொன்மை வாய்ந்தது நம் தாய்மொழியாந் தமிழென்பது இப்பொழுது வரலாற்றுலகம் அறிந்த பேருண்மையாகத் திகழ்கின்றது. இவ்வுண்மையினையும் பிற தன்மைகளையும் பன்மொழியுடன் ஒப்பு நோக்கிச் சான்றுகளோடு தலைவர் தந் திறப்புரையில் செவ்விதின் மொழிந்தனர்.

இவ்வுண்மைகளை அகப்புறச் சான்றுகள் பலவற்றுடன் விளக்கித் தமிழின் தொன்மை, மேன்மை, நன்மை, இனிமை, எளிமை முதலிய சிறப்புக்களைத் திறப்புரை வாயிலாக வலியுறுத்தினர். சுருக்கம் வருமாறு:

உலகமொழிகளில் தமிழுக்குத் தனிச்சிறப்புண்டு. மனித இனம் தோன்றிய காலந்தொட்டு வழங்கிவருவது தமிழ். மனித இனத்தின் தாய்மொழி தமிழே. தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு போன்ற பல தன் இனமொழி

களைப் பிறப்பித்தது. இந்தியாவுக்குள்ளும், ஹங்கேரி போன்ற பிற நாடுகளிலும் திராவிடமொழிகளுடன் தொடர்புடைய மொழிகள் உள்ளன. அடிப்படையில் உலகமொழிகள் பல வற்றுக்கும் தமிழுடன் தொடர்பு உள்ளது.

உலகில் பலமொழிகள் தனித்தனியாக வாழ்கின்றன. ஆனால் தமிழ் தனியாக வாழ்வதில்லை. தமிழர் வெளிநாடுகளில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டவில்லை. ஆனால் பிறமொழிகளின் ஆதிக் கத்துக்குப் பாடுபட்டுள்ளனர்.

கிரீக்கு, வடமொழி, இலத்தீன் மொழிகள் இடையிலே தோன்றிச் சிறப்புற்று வழக்கற்றன. ஆனால் தொன்றுதொட்டு வரும் சிறப்புடைய மொழிகள் சீனமும் தமிழுமே. இவ்விரண் டுக்கும் உலகப்பெருமொழிகளுள் இடமுண்டு. சமய சமுதாய அறிவுச்செல்வம் நிரம்பிய மொழி தமிழ். ஐயாயிரம் ஆண்டு களாக மனித நாகரிக நிழலாகத் தமிழ் விளங்குகிறது.

தமிழ், சமயப்பணியே தலையாய பணியெனக்கொண்டு உழைத்துவரும் கழகம், மறைமலையடிகள்போன்ற நல்லாசிரியர் களைக்கொண்டு நல்ல காரியங்களைச் சாதித்துவந்துள்ளது. இந்தியாவில் மிகப் பழைய மொழி தமிழ்தான். தமிழே கிரீக்கு, வடமொழி, இலத்தீன் மொழிகளுக்கும் மூலமான மொழி என்று பிற்காலத்தில் நிறுவப்படும் என்னும் உறுதியுடன் இம் மாநாட்டை மனப்பூர்வமாகத் திறந்து வைக்கிறேன். தமிழ் சிறப்பதாக.

தலைமை உரை

டாக்டர் மு. வரதராசனார், (எம். ஏ., எம். ஓ. எல். பி.எச்.டி. பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம்) அவர்கள் தலைமை தாங்கினர். மொழிகள் ஒன்றினின்று தோன்றின என்பதற்கும் அவை இயைபுடையன என்பதற்கும், அதனால் அவைகள் இன மொழிகள் என்பதற்கும் அகச்சான்ருகக் கொள்ளப்படுவன இலக்கண அமைவும், பேச்சு வழக்குமேயாம்.

டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம் :

மொழித்துறையில் பல்லாண்டு தொண்டாற்றிய பன் மொழிப்புலவர் கா. அப்பாத்துரையவர்களால் இம்மாநாடு திறக்கப்படுவது ஒரு சிறப்பே.

திரு. வி. க. வும், மறைமலையடிகளும் தோற்றுவித்த எழுச்சியைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் பாதுகாத்து வருகிறது.

இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் உள்ள மொழிகள் எல்லாம் ஓரினம் என்றே கருதியிருந்தனர். ஆனால் இந்தியாவில் தங்கள் சமயத்தைப் பரப்பவந்த பாதிரியார்கள் மொழிக்குமொழி சொற்றொடரமைப்பில் வேறுபடுகிறது என்று உணர்ந்து கூறினர். இந்தியர்கள் ஆங்கிலத்தை எழுதும் போதோ, பேசும்போதோ தங்கள் மொழியிலுள்ளவாறு சொற்களை யமைத்துவிடுகின்றனர். இதை இந்தியமுறை (Indianism) என்று கூறுவர். இதற்குக் காரணம் மக்களின் அறிவின் குறையன்று. நாட்டுமொழியின் அடிப்படைத்தன்மை பிறமொழி பேசும்போதும் அப்படியே அமைந்துவிடுகிறது. ஒரு மொழியின் உயிர்த்தன்மை சொற்களைக் கோத்தமைப்பதில்தான் இருக்கிறது. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகளின் சொல்லமைப்பு - உயிர்த்தன்மை - ஒன்றே என்று முதன்முதலில் கண்டறிந்தவர் அறிஞர் கால்டுவெல். தமிழுக்குப் பெருந்தொண்டாற்றிய அவர் நம் முதல் வணக்கத்திற்கு உரியவர். நம் வணக்கத்திற்குரிய இன்னோர் அறிஞர் டென்மார்க்கைச் சார்ந்த ராஸ்க் என்பவர். இவர் இந்தியாவுக்கு வரும்போது மேற்குக்கரை வழியே வந்து சென்னைக் கடற்கரை வந்து சேர்ந்தார். இவர் இந்தியாவில் 1816 - முதல் 1823 வரைதான் தங்கியிருந்தார். தென்னாட்டு மொழிகளைக் கேட்டுணர்ந்தார். பிறகு வடநாட்டு மொழிகளையும் கவனித்தார். கிரீக்கு, வடமொழி, இலத்தீன், மொழிகளைக் கற்றிருந்தார் அவர். இந்திய மொழிகள் எல்லாம் ஓரினம் என்ற கருத்துத் தவறு என முததில் கூறியவர் அவரே. இந்தோ - ஐரோப்பியக் குடும்பத்தில் சேராத மொழிக்குடும்பமும் உளது என்று கண்டுபிடித்தார். தமிழ், மலையாளம், தெலுங்கு முதலிய மொழிகளை 'மலபாரிக் குடும்பம்' என்ற பெயரில் அழைத்தார்.

கலைகள், அறிவியல் என்ற இரண்டு கண்ணும் நமக்கு வேண்டும். தமிழர் தாய்மொழியிலேயே இவ்விரு கண்களையும் பெற வேண்டும். தமிழில் நல்லன்பு, இலக்கியம் இவை மட்டும் வளர்ந்தால் போதாது. அறிவியலும், பிற துறைகளும் நன்கு செழித்து வளரவேண்டும். தமிழை வளர்க்கும் பொறுப்பு எல்லாப் பேராசிரியர்களுக்கும் உண்டு. எல்லா அறிவுச் செல்வத்தையும் தமிழில் கொண்டுவருவதே தமிழுக்கு உயிர் கொடுக்கும் பெருந் தொண்டாகும். உலக மொழிகளுள் தமிழ் எவ்வகையிலும் எம்மொழிக்கும் தாழ்ந்ததன்று. எவ்வகைக்

கருத்தையும் சிந்திப்பதற்கும், உணர்வதற்கும் ஏற்ற மொழி தமிழ் என்பதை மேனாட்டறிஞர் விட்னி போன்றவர்களும் உணர்ந்திருக்கின்றனர். நம் நாட்டில் தொடக்கப்பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரையில் பாடமொழி தமிழாக இருக்கவேண்டும். இன்று உருசிய நாட்டில் பல மொழிகள் இருக்கின்றன. ஆனால் அந்தந்த மொழிகளுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது. அவரவர்கள் தத்தம் மொழிகளிலேயே நிருவாகத்தையும் நடத்துகிறார்கள். இருப்பினும் அவர்கள் கூட்டாக ஓர் ஆட்சியின்கீழ் இயங்குகிறார்கள். இதைப்போல நாமும் வாழமுடியும் என்ற ஒரு நம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். நமக்கு மொழி உயிர் போன்றது. அறிவியல் துறையில் கணக்கு மிகவும் அடிப்படையானது. தமிழ்மொழியிலேயே சிந்தித்து விஞ்ஞானம் போன்ற அறிவியல் நூல்களை ஆக்கவேண்டும். இந்த வாய்ப்புக்களை நாம் ஏற்படுத்தித் தீரவேண்டும்.

தமிழர்களுடைய வாழ்விலே - நடைமுறையிலே - தமிழ் இல்லை. அதனால்தான் தமிழ் வளராமல் கீழ்நிலையில் இருக்கிறது. நம் நாட்டில் விளம்பரப் பலகைகள் எல்லாம் ஆங்கிலத்தில் இருக்கின்றன. வேறு நாடுகளில் இப்படி உண்டா என்று என்று எண்ணிப்பார்க்க வேண்டும். பெரிய அதிகாரிகள் வீடுகளில் தமிழ் பேசப்படுவதில்லை. அவர்கள் குழந்தைகளுக்குத் தமிழ்ப்பெயர் வைக்கப்படவில்லை. இந்தக் குறை எல்லாம் நீங்க வேண்டும். தமிழர்கள் தமிழிலேயே பேசுதல் வேண்டும். ஒரு சிலருக்கு மட்டும் பிறநாட்டு மொழிகள் தெரிந்திருந்தால் போதும். இளைஞர்களுடைய அறிவையும் ஆக்கத்தையும் பயன்படுத்தவேண்டும். நாமும் நமது நோக்கத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். எல்லா ஒலிக்கும் தமிழில் சொல் உண்டு. தமிழைத் தேவநாகரியில் எழுதமுடியாது ; எழுதினால் பொருளே மாறிவிடும்.

' ஓ ' என்ற ஓசையுடைய எழுத்துத் தேவநாகரியில் கிடையாது. ஓகரம்தான் அங்கு உளது. எனவே, பொலிவு என்ற சொல்லைப் 'போலிவு' என்றுதான் அவ்வெழுத்தில் குறிப்பிட முடியும். 'சொல்' 'சோல்' ஆகும். 'பொருள்' - 'போருள்' என்று உருப்பெற்றுவிடும். தொல்காப்பியம் என்பதைக்கூடத் தோல்காப்பியம் என்றுதான் கூறவேண்டும். தொல்காப்பியச் சூத்திரமான 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்பதை 'எல்லாச் சோல்லும் போருள் குறித்தனவே' என்றுதான் எழுத வேண்டும். இதனால் அச்சூத்திரமே உருமாறிப் பொருள்மாறிப் போய்விடுகிறது. ஆகவே தமிழ்ச்சொற்களைத் தேவநாகரியில் எழுதுவது இடைஞ்சலும் சங்கடமும் தரக்கூடியது மட்டுமன்று; பொருந்தாத முயற்சியுமாகும்."

கழகப் பணி பாராட்டல்

டாக்டர் எஸ். ஆர். அரங்கநாதன் (எம். ஏ., டி. லிட்; தலைவர், நூலகத்துறை, பல்கலைக்கழகப் பொருளுதவிக்குழு) அவர்கள் கழகம் தொடர்ந்து நாற்பதாண்டுகளாகப் புரிந்துவரும் அரும் பணிகளைப் பற்றி நன்கினிது பாராட்டி நல்லுரை நவின்றனர். சுருக்கம் வருமாறு :

கழகப்பணியைப் பற்றிய என் கருத்துக்களை எல்லாம் பாராட்டுவிழா நூற்பட்டியிலேயே எழுதியிருக்கிறேன். இந் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாட்டில் புத்துணர்ச்சி ஏற் பட்டது. மகாத்துமா காந்தியடிகள் ஆப்பிரிக்காவுக்குச் சென்று வந்தபிறகு நாட்டு விடுதலைக்காகப் பாடுபடத் தொடங்கினர். அந்தச் சமயத்தில் தான் இக்கழகம் தோன்றியது. அதற்கு முன் மக்கள் களைத்துத் தூங்கிக் கொண்டிருந்தனர். காந்தியடி கள் மக்களிடம் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தி வந்தார். நாட்டில் நல்லதொரு கிளர்ச்சி தோன்றிய காலத்தில் இக்கழகம் தோன்றி யது. உலகில் புத்துணர்ச்சி பெருகி வரும்போது அதையுணர்ந்து செயல் படுத்துபவர் ஒரு சிலரே. அவருள் கழக ஆட்சியாளர் சுப்பையா பிள்ளை யவர்களின் தமையனார் - கழகத்தைத் தோற்று வித்து நடத்திவந்த திருவரங்கம் பிள்ளையும் ஒருவராவர். அவர் ஒரு சீலர். எதிர்காலத்தில் தமிழுக்குச் சிறப்பு ஏற்படுமென்று முன் கூட்டியே அறியும் திறம் பெற்றிருந்தார். அவர் மனம் கேவலம் வாணிகத்துறையில் மட்டும் பற்றுக்கொள்ளவில்லை. ஆனால் மக்கள் நல வாழ்விலேயே மனம் ஈடுபட்டார். இதனால் தான் முதலில் வெளிவந்த புத்தகங்கள் எல்லாம் பாமரமக்கள் விரும்பிப் படிப்பதற்குரியனவாக இருக்கின்றன. தெளிந்த அறிவுடன் மக்கள் கூச்சமின்றிப் படிக்கும் நூல்களையே வெளி யிட்டார். பொதுமக்களிடம் தமிழறிவும், புத்துணர்ச்சியும் ஏற்படவேண்டும் என்ற நன்னோக்கத்திற்காகவே இக் கழகம் தோன்றியது எனலாம்.

நமக்குச் சமயம் மிக இன்றியமையாதது. சமயமில்லாவிடில் எவ்வளவு பொருள் இருந்தாலும் மன அமைதியிராது. கழகத் தினர் சமயத்தைப் பரப்பும் பணியிலும் ஈடுபட்டிருக்கின்றனர். மாநாடுகளில் தீர்மானம் நிறைவேற்றிவிட்டுச் சும்மா இருந்துவிடு வதால் பயனில்லை. நாம் ஓரளவு செயலில்செய்து காட்டுதல் வேண்டும். பிறமொழியையும் கற்றுக்கொள்ள வேண்டும். பிற மொழிகளைப் பேச வேண்டும் எழுதவேண்டும் என்பதில்லை. படித்துப் புரிந்து கொண்டால் அவற்றில் உள்ள அறிவியல் கருத் துக்களை எடுத்துக் கொள்ளமுடியும். கழகம் பலப்பல

துறைகளில் - விஞ்ஞானத் துறைகளில் நிறைய நூல்களை வெளியிடவேண்டும் என விரும்புகிறேன்.

பாராட்டுவிழா நூற்பட்டி வெளியீடு

திரு. நெ. து. சுந்தரவடிவேலு (எம். ஏ, எல். டி. தமிழ் நாட்டுக் கல்வித்துறை நூல்நிலையத்துறை இயக்குநர்) அவர்கள் 'பாராட்டு விழா நூற்பட்டி' (கழகத்தின் 1008 நூல்களின் அடைவுமுறை) என்னும் அரிய நூலினை வெளியிட்டு விழைதகு விரிவுரையொன்றாற்றினர். சுருக்கம் வருமாறு:

தமிழ் வளரவேண்டும் வளரவேண்டும் என்று பலர் கூறுகிறார்கள். ஆனால் வளர்ப்பவர் யார்? தமிழை வளர்க்க வழி காட்டியது சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம். இதுவரை இக்கழகம் வெளியிட்ட 1008 நூல்களைப்பற்றிய பட்டி ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்நூலை ஒரே மூச்சில் படித்து முடித்தேன். இது வெறும் பெயரட்டவணை மட்டுமன்று. நூல்களை எடைபோடும் மதிப்பீடு அடங்கிய பட்டியாகவும் இருக்கிறது. முதல் பத்தாண்டுக்காலத்தில் பெரும்பாலும் சமய நூல்களே வெளியிடப்பட்டிருக்கின்றன. பிறகு பல துறைகளிலும் நூல்கள் வெளிவந்துள்ளன. இது தமிழன் பல துறைகளைப் பற்றியும் படிக்கிறான் என்பதைக் காட்டுகிறது.

தமிழறிஞர்கள் பிறநாட்டு அறிவியல் நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து அளிக்கும் பணியில் தம்முடைய வாழ்நாளைச் செலவிடுதல் வேண்டும். தமிழனின் உயர்வு மீண்டும் தலை தூக்கத் தொடங்கியுள்ளது. இதைத் தமிழர்கள் உறுதிப்படுத்த வேண்டும். கூட்டு முயற்சியும் அழுக்காறில்லாத பண்பும் வளர வேண்டும். இன்று வெளிவரும் நூல்கள் பெரிதும் வெறியூட்டுவனவாக உள்ளன. அந்த வழியில் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் இல்லை. நல்ல தமிழ் வேண்டுமென்றால் கழகத்து நூலை எடுத்துப் படிக்கலாம். நாற்பதாண்டுகளில் பயனுள்ள 1008 நூல்களை வெளியிட்டுள்ளனர். இன்று நாட்டில் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் அதிகமிருக்கிறது. படிப்பகம் இல்லாத சிற்றூரே இல்லை எனலாம். இப்போது எழுத்தறிவுடையவர் தொகை 30 சதவீதமாக உள்ளது. இன்னும் பத்துப் பதினைந்து ஆண்டுகளில் நூற்றுக்கு நூறுபேரும் படித்தவர்கள் ஆகிவிடுவார்கள்.

எனவே நாம் புறப்பட்ட இடத்திற்கே திரும்பிச் சென்று கொண்டிருக்காமல், போகவேண்டிய இடத்திற்குச் செல்ல வேண்டும். இளைஞர்கட்கு எதிர்காலத்திற்கான வழியை அறிஞர்கள் காட்டவேண்டும். ஒவ்வொருவரும் தமக்கென்று ஒரு

நூல்நிலையம் வைத்திருக்கவேண்டும். இனித் தமிழ்ப் பற்றை ஊட்ட வேண்டியதில்லை. தமிழ்த்தொண்டுதான் செய்யவேண்டும். பலதுறை அறிவையும் பரப்பவேண்டும்.

பாராட்டுவிழா நூல்பட்டி தமிழிலும் ஆங்கிலத்திலும் நல்ல ஒட்டநடையுடன் உள்ளது. தமிழர்கள் தெரிந்துகொள்ளவேண்டிய நேர்மையான தகவல்களைப் பெற்றிருக்கிறது. உலகப் பேரறிஞர் டாக்டர் ரங்கநாதன் அவர்கள் தங்கள் பொன்னனை நேரத்தில் நூறுமணி நேரம் இதில் செலவிட்டிருக்கின்றனர். அந்நேரத்திற்குமேல் செலவிட்டு அழகான தமிழில் அதை மொழி பெயர்த்த மறைமலையடிகளார் நூலகர் முத்துக்குமாரசாமி அவர்களுக்கும் நம் நன்றி உரித்தாகுக. இந்நூலை எல்லோரும் படித்துப் பார்க்கவேண்டும்.

அடுத்த பத்தாண்டில் இன்னும் 1008 நூல்களை வெளியிட்டு நம் பேரறிஞர் ரங்கநாதன் அவர்களைக் கொண்டே நூற்பட்டி வெளியிட வேண்டும் என்று கழக ஆட்சியாளர் சுப்பையா பிள்ளை யவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இக்காலத்தில் வைர வியாபாரிகூட விளம்பரம் செய்கிறன். வைரத்தைவிட இன்றியமையாதது நூல். இதை எல்லோர்க்கும் தெரியப்படுத்தும் வகையில் விளம்பரம் செய்யவேண்டும். நூல்களை அனுப்பச் சொல்லிக் கேட்பவர்களுக்கு உடனுக்குடன் அனுப்பிவிட வேண்டும். கழகம் இந் நல்ல தமிழ்த்தொண்டைத் தொடர்ந்து பல்லாண்டு செய்துவர வேண்டும் என்று வாழ்த்தி இந்நூலைத் தலைவர்க்குக் கொடுப்பதன்மூலம் வெளியிடுகிறேன்.

திரு. அ. மு. பரமசிவானந்தம் அவர்கள் உரை

'மொழி வளர்த்த பண்பாடு' என்னும் பொருள் பற்றித் திரு. அ. மு. பரமசிவானந்தம், (எம். ஏ., எம். லிட். பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர்) அவர்கள் சிறந்ததொரு விரிவுரையாற்றினர். புலவர் பெருமக்கள் அவரவர்தம் தாய் மொழியினைத் தாந்தாம் தவமிருந்து பெற்றெடுத்த மக்களினும் சிறப்பாக மதித்து முக்காலமும் ஓம்பி வருகின்றனர் என்பது கண்கூடு. அம்மட்டுமன்று, தத்தம் உயிரினும் விழுமிதாகவுங் கொள்கின்றனர். அதற்குக் காரணம் பெற்ற மக்களும், உற்ற நண்பரும், உடைமையும், மற்றெருப்பில்லா வுயிரும் நில்லாது நீங்கும் என்பதும், மொழியொன்றுமே வழிவழியாக நிலை நின்று நற்பயன் அளிக்குமென்பதுமாம்.

அத்தகைய நன்மதிப்பிற்குரிய பெரும்புலவர்கள் பல்லாயிரவாண்டுகளாக வளர்த்து வந்துள்ள தமிழ் மொழியின் கணுள்ள

எழுத்து, சொல், தொடர், யாப்பு, இலக்கண இலக்கியங்கள், உரைநடை முதலியவற்றை மரபுகெட மாற்றுவது, கலப்புறுத்துவது, தூய்மை கெடுப்பது முதலிய பொருந்தாச் செயல்களைச் செய்ய முற்படின் அவர்கள் மனம் நனிமிகப் புண்படும் என்பது சொல்லாமே விளங்கும். அங்ஙனமாகவும் சில்லோர் பழகு சொற்கள் பல வழக்கொழிந்து மாளுமாறு அயன் மொழி மயலால் அம் மொழிச் சொற்களை வரைமுறையின்றி இடைக் காலத்தே புகுத்துவாராயினர். அவையனைத்தும் பைங்கூழிற் காணும் களைகளொத்துப் பெருந் தடையாக நிற்பதாயின. இவற்றின் மெய்ம்மையினையுணர்ந்த வாய்மைத் தமிழ்ப் பெரும் புலவர்களும் பெருமக்களும் அக் களைகளைக் களைந் தெறிவாராயினர். இப்பொழுது நம் கன்னித் தமிழ் பண்டுபோல் மரபு கெடாமல் தூயதாய் வழங்கப்படுகின்றது. பெருமக்களின் ஆர்வமும் இம் முறையில் நாளும் பெருகிக்கொண்டே வருகின்றது.

இவ் வுண்மைகள் அனைத்தையும் சொற்பொழிவாளரவர்கள் தொல்காப்பிய முதலிய நூற்சான்றுகளும் வெளிநாட்டார் கூறும் நூற்சான்றுகளுங் கொண்டு நன்கு விளக்கியுள்ளனர். சுருக்கம் வருமாறு :

பண்பாட்டோடு வாழ்வதுதான் வாழ்க்கை. வாழ்க்கைக்கு அடிப்படையாயுள்ளவை உடம்பும் உயிரும். எனவே தமிழ் மொழிக்கடிப்படையா யுள்ள எழுத்துக்களை மெய்யும் உயிரும் என்றனர். பிறப்புத்தோறும் வெவ்வேறு உடலை எடுக்கும் உயிர் தன் தன்மை மாறாது விளங்குகின்றது. இதையே இலக்கணத்தின் வாயிலாகவும் உணரும்படி செய்கின்றார் தொல்காப்பியனார்.

"மெய்யோ டியையினும் உயிரியல் திரியாது."

உடல் உயிருடன் சேர்ந்து தான் வாழமுடியும் என்பதை,

"மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்"

என்ற நூற்பாவினின்று அறிகிறோம்.

தமிழில் வல்லெழுத்துக்கள் இனமாகிய மெல்லெழுத்துக்களுடன் சேரும்போது வன்மை மாறி மென்மை எய்துகின்றன. மேலிருப்பவன் தாழ்ந்துவந்து கீழிருப்பவனுடன் கலந்துறவாட வேண்டும். இதுதான் மொழிகாட்டும் பண்பாடாகும். மொழியில் பண்பாடு இணைந்திருக்க வேண்டும். தமிழ் மொழியில் உள்ள பண்பாட்டை நாம் வளர்க்க வேண்டும்.

திரு. எம். ஆர். பெருமாள் முதலியார் உரை

'தமிழ் மொழியின் இன்றைய நிலை' என்னும் பொருள் பற்றித் **திரு. எம். ஆர். பெருமாள் முதலியார்** (எம். ஏ , எல். டி. முதல்வர், சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி) அவர்கள் நகைச்சுவை ததும்ப, நாவலத்துடன் அரியதொரு சொற்பெருக்காற்றினர். சுருக்கம் வருமாறு:

தமிழ்மொழி மிகவும் பழமையான மொழி. பண்பாடு கெடாமல் அக்காலப் புலவர்கள் கவி யாத்தனர். ஆனால். இக்காலத்தில் பண்பாடு இல்லாமல் பலர் எழுதிவருகிறார்கள். எழுத்தாளர்கள் பண்பாட்டையும் தமிழையும் கெடுக்காமல் எழுதுதல் வேண்டும். அதற்குத் திறனாய்வு வளரவேண்டியது இன்றியமையாதது. அறிஞர்கள் கொண்ட ஆய்வுக் குழு ஒன்று தமிழகத்தில் இருக்கவேண்டும். அக்குழு ஆறு மாதத்திற்கு ஒரு முறை தமிழகத்தில் வெளியாகும் சிறுகதை, கட்டுரை, புதினம், நாவல், கவிதை ஆகியவற்றில் எவர் எழுதியது சிறந்தது என்று தேர்ந்தெடுக்க வேண்டும். அப்பொழுதுதான் பொருளற்ற முறையில் எழுதுபவர்கள் பொருளோடும் தமிழைக் கெடுக்காமல் தமிழ் மரபின்படி எழுத முயல்வர். வெளியிடுபவர்களும் நல்ல நூல்களை வெளியிடுவர். பின்னர் நாளிதழ், வாரஇதழ், மாத இதழ்களில் நல்லதமிழ் எழுதும் முறை விரைவில் உருவாகும்.

இலக்கிய மாநாடு

21-8-1961. திங்கட்கிழமை மாலை 5-30. மணிக்கு **இலக்கிய மாநாடு** தொடங்கப்பட்டது.

டாக்டர் **மா. இராசமாணிக்கனார்** (எம். ஏ., எம். ஓ. எல்., பி. எச். டி. சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் வாசகர்) அவர்கள் மாநாட்டைத் திறந்து வைத்தனர். உணவுக்கு வயல்நிலம் எத்துணை இன்றியமையாமையோ அத்துணை இன்றியமையாதனவாகும் நல்லுணர்வையும் நல்லொழுக்கத்தையும் நாளும்பயந்து பண்பட்ட மாந்தர்தம் நல்வாழ்க்கைக்குத் துணையாயுள்ள சீரிய இலக்கியங்கள்; வயலுக்கு வரம்பு போன்று வயங்குவன சிறந்த இலக்கணங்கள். எண்ணும் எழுத்தும் இரு கண்ணெனுக்கும் என்பது என்றும் மாறா வுண்மையாகும்.

அத்தகைய சிறந்த இலக்கியங்களின் தனிப்பெரு மாண்புகளைப் பற்றி டாக்டரவர்கள் தம் திறப்புரைக்கண் அழகாகியதொரு விரிவுரையாற்றினார். சுருக்கம் வருமாறு:

கழகத்தின் நாற்பதாண்டுத் திருப்பணியின் பயன் இத்தகைய சிறந்த மூன்று நாட்கள் விழா நிகழ்கின்றது. இலக்கியத்

துறையில் மேனாட்டறிஞர்கள் சிறந்து விளங்குகின்றனர். இலக்கியம் சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்டு கற்றுவல்ல புலவர்களால் காலத்துக் கேற்ப வாலிதிற் செய்யப்படுவது. அதுவே மக்களால் யாண்டும் விழைந்து ஏற்றுக்கொள்ளப்படுவதாகும். சமுதாய நாட்டமில்லாத எந்த இலக்கியமும் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இலக்கண வரம்பு, மரபு முதலியன கெடாமல் எழுதுவது தான் இலக்கியம். 'சமுதாய உணர்ச்சிக்கு இல்வாழ்க்கைச் சிறப்பும் இல்வாழ்க்கை இன்பமாக இருப்பதற்கு ஆட்சித்துறைக் காவலும் இன்றியமையாதன. காவலின் ஒரு பகுதி பகையை நீக்கும் போராகும். போருக்கு இலக்கணம் வகுத்த மொழி தமிழ்மொழியொன்றேயாம். இம்முறையாற் சங்க காலத்தில் அகப்பொருளிலக்கியமும் புறப்பொருளிலக்கியமும் மிக்குத் தோன்றின.

காலத்துக் கேற்பப் பல்லவர் காலத்தில் ஆழ்வார்கள் நாயன் மார்கள் பாடிய பத்திப்பாடல்கள் தோன்றின. தமிழ்ப்பேரரசர் களாகிய சோழர் காலத்துச் சமய வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு சிந்தாமணி, கம்ப ராமாயணம், பெரிய புராணம் போன்ற பெருங்காப்பியங்கள் தோன்றின.

முற்றும் வேற்றவர்களாகிய விசய நகரமன்னர், மராட்டியர், நாயக்கர் ஆண்ட காலத்துச் சிறந்த இலக்கியங்கள் தோன்றவில்லை.

தமிழ்ப் புலவர்களை மன்னர்கள் போற்றவில்லை. இக்காலத்துத் தலபுராணங்கள், சிறுபிரபந்தங்கள் தோன்றின. ஆங்கில ஆட்சி வந்தபின் உரைநடை நூல்கள் தோன்றின என்பதாம்.

தலைவர் உரை

இலக்கிய மாநாட்டின் தலைவராக அமைந்துள்ளவர், திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் (எம். ஏ., பி. எல்., எம். ஓ. எல்., தமிழ்ப்பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்) அவர்களாவர். திரு. பிள்ளையவர்கள் தந்தலைமையுரையினை மிக விரிவாகப் பற்பல சான்றுகளுடன் இனிமையுற ஆற்றினர். சுருக்கம் வருமாறு :

பொதுவாக இலக்கியங்கள் கற்கும் மாணவருள்ளத்தை இயல்பாகத் தொட்டு அவர்கட்கு வேட்கையையும், இன்பத்தையும், உணர்ச்சியையும், ஊக்கத்தையும் விளைப்பனவாக இருத்தல் வேண்டும். அதற்கேற்றமுறையில் இக்காலத்துப் புதுப் புது

இலக்கியங்கள் தோன்றுதல்வேண்டும். இதனால் பண்டைய இலக்கியங்கள் பாராட்டுதற்குரியன அல்ல என்றோ, சிறந்தன அல்ல என்றோ, வேண்டத்தக்கன அல்லவென்றோ பொருளன்று. சமுதாய ஒருமைப்பாட்டை உண்டாக்குவதே இலக்கியங்களின் சீரிய பண்பாகும்.

இலக்கியங்களெல்லாம் பெரும்பான்மையும், எழுத்து வடிவிலுள்ளன. வான்வழிப் பயணத்தைக் காட்டிலும் மிகச்சிறந்த புதுமையாக இருப்பது மனிதன் இலக்கியத்தின்மூலம் காலத்தைக் கடந்து நிற்பது. தாய்மொழி இலக்கியத்தின் நுட்பங்களை அறிந்துகொள்ளுவதே கடினம். பிறமொழிகளைக் கற்று அவற்றின் இலக்கியங்களை முற்றிலும் சுவைப்பது முடியாத காரியம். சமய இலக்கியங்களான தேவார திருவாசகங்களின் உண்மைப்பொருளை உணர்ந்துகொண்டோமா? நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களுக்கு எழுதப்பட்டவுரைகளை உணர்ந்தோமா!

இதற்குமுன் தமிழ்நாடு 1008 நூல்களை வெளியிட்டதா? உலகில் அன்பு வளரச் சிறந்த வழி இலக்கியமே. பாவாணர் உணர்ச்சிததும்பப் பாடுகின்றனர். வாழ்க்கையனுபவம் அத்தனையும் இலக்கியத்தில் காணுகிறோம். இன்றைய சமுதாயம் இலக்கியத்தைப் புறக்கணிக்கின்றது. மனிதன் திருந்துவதற்கும் உலக வாழ்விற்கும் பண்பாட்டைப் பெறுவதற்கும் இலக்கியம் இன்றியமையாதது. தமிழ்நாட்டில் மாதத்திற்கு 1008 நூல்கள் வெளிவருதல் வேண்டும். பிறநாட்டுமொழிகளில் - பிரஞ்சு, ஆங்கிலம் போன்ற மொழிகளில் குழந்தைகளுக்காக அழகழகாக வெளியிடப்படும் வண்ண நூல்கள் தமிழிலும் வெளிவருதல் வேண்டும்.

விழா மலர் வெளியிடல்

உயர்திரு. சி. **சுப்பிரமணியம்,** (தமிழ்நாட்டுக் கல்வி, நிதி அமைச்சர்) அவர்கள் விழா மலரை வெளியிட்டனர். விழா மலர்களால் விழைதக்க பெரும் பயன் விளைவது கண்கூடு. இவைகள் பெயரளவில் விழாமலர்கள் எனப் பெயர் பெறினும் உண்மையில் தமிழ் நாட்டுத் தனிப் பெரு வரலாற்றிலக்கியங்களாகும். என்னை? அவற்றின்கண் ஒருகாலத்துப் பல்வேறிடங்களில் பல்வேறு துறைகளில் பல்வேறு பணிகள் ஆற்றிவரும் பெரும் புலவர்கள், பேராசிரியர்கள், ஆட்சித்துறையினர், பேருதியத்தர் பலருடைய பயன் நிறைந்த கட்டுரைகள் பல அவரவர்தம் அரிய வரலாறுகளுடன் ஒருங்கு திகழ்கின்றமையானென்க. முற்காலத்துச் சங்கப் பாட்டுந் தொகையும் இங்ஙனந் தொகுக்கப்பட்ட

னவேயாம். அவை இக்காலத்துப் பண்டைய வரலாறுகளை ஆராயும் ஆய்வாளர்கட்குப் பெரிதும் பயன்படுகின்றன என்பது மறுக்கொணு வுண்மையன்றே! இதுபோன்று இவ் வெளியீட்டு மலர்களும் பிற்காலத்தாய்வாளர்கட்குப் பெரிதும் பயன்பட்டுச் சிறந்த வரலாற்றிலக்கியங்களாகத் திகழுமென்பது முழுவுண்மையேயாகும். இம் மலரின்கண் அறுபத்தேழு சிறந்த கட்டுரைகளும், மதிப்புரைகளும் அமைந்துள்ளன. இத்தகைய விழா மலரினை வெளியிட்டு உயர்திரு அமைச்சரவர்கள் உயர்ந்ததொரு விரிவுரையாற்றினர். சுருக்கம் வருமாறு:

தலைவர் அவர்களே, நண்பர்களே, இவ்விழாவில் கலந்து கொள்ள வாய்ப்புக் கிடைத்தமைக்கு மகிழ்ச்சியடைகிறேன். நான் வெளிநாடுகளுக்குச் செல்லுமுன்பே இவ்விழா நடக்கப் போகிறது என்றும், அதில் நான் கலந்துகொள்ளவேண்டும் என்றும் பணித்திருந்தார்கள். விழாமலரை வெளியிடும் நிகழ்ச்சி முதல்நாளில் நடப்பதே பொருத்தமாய் இருந்திருக்கும். ஆனால் இன்றுதான் விழாவுக்கு என்னால் வரமுடிந்தது. நேற்று விழா விமரிசையாக நடைபெற்றது என்றும், பல பெரியோர்கள் ஆசி கூறினர் என்றும் கேள்விப்பட்டேன். இக்கழகத்திற்கு ஆசி கூறுவது பொருத்தமே. இந்தியாவிலேயே எந்த நூற்பதிப்புக் கழகம் ஆயிரத்தெட்டு நூல்களை வெளியிட்டுள்ளது? கழகத்தின் நல்ல பணியால் பல அரிய தமிழ்நூல்கள் கிடைத்துள்ளன. சாதாரண மக்களும் படித்துப் பயன்பெறும் வகையில் வெளியிடப்பட்டுள்ளன. இன்று தமிழ் வளரவேண்டும், பல்வேறு துறைகளில் வளர்ந்து பயன்படவேண்டும் என்ற அவா எல்லாரிடத்திலும் எழுந்துள்ளது. ஆனால் மொழிப்பிரச்சினை சிக்கலாகவே உள்ளது. அதற்கு வழி காண்பதற்குப் பல்வேறு ஆலோசனைகள் கூறப்படுகின்றன. அப்பிரச்சினையில் சிலசமயம் ஒரு கோடிக்குப் போகிறோம், மற்றொரு சமயம் அடுத்த கோடிக்குப் போய்விடுகிறோம். இதற்கு அடிப்படையான காரணம் மொழியின் தன்மையை நாம் நன்கறியாததே யாகும்.

இந்தியா பல மொழி பேசும் ஒரு நாடாகும். இதைப் பல இனங்கள் வாழும் நாடு என்கின்றனர். ஆனால் பலமொழி பேசும் நாடு என்றே நான் கருதுகின்றேன். இதை உணராதுபோனால் பல சிக்கல்கள்—குழப்பங்கள் எழும். சுதந்தரம் பெற்ற பிறகு ஒவ்வொரு மொழியினரும் தம்தம் மொழி வளரவேண்டுமென்பதில் அக்கறை கொண்டுள்ளனர். இஃது இயற்கைக்கு விரோதமானதோ, நாட்டுப்பற்றுக்கு எதிரானதோ ஆகாது. அப்படி எதிரானது என்று கொண்டால், நாட்டுப் பற்று என்றால் என்ன என்று அறியாது கூறுவதேயாகும்.

தாயிடம் அன்பு காட்டுவது என்றால் பிறரை வெறுப்பது என்ற பொருள் இல்லை. தாயிடம் சிறப்பன்பு கொள்வது இயற்கைக்கு ஒத்தது; மனித இயற்கையே. மொழியில் அன்பு செலுத்தும்போது, மொழி வளரவேண்டும், அதற்கான பல்வேறு வாய்ப்புக்கள் ஏற்படவேண்டும், மொழி பல்வேறு துறைகளிலும் பயன்படவேண்டும் என்று விரும்புகிறோம்.

பன்மொழி பேசும் நாடுகள் உலகில் பல உள்ளன. ரஷ்யாவில் பலமொழி பேசும் மக்கள் உள்ளனர். அங்கே மொழிப் பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கிறது. அங்கே எப்படி அப்பிரச்சினை தீர்க்கப்பட்டது? அமெரிக்காவிலுள்ள சிலநாடுகளிலும் பன்மொழி பேசுகின்றனர் அங்கும் பிரச்சினை எப்படித் தீர்க்கப்பட்டது என்றறிந்து மற்றவர்களின் அனுபவம் என்ன என்பதையும், நாம் அறிந்துகொள்ளவேண்டும்.

அப்படி உணர்ந்துகொள்வதுதான் மனித அறிவுக்குச் சிறப்புச் செய்வதாக இருக்கும். தமிழின்பால் பற்றுச்செய்வதால் நாட்டுப் பற்றுக் குறைகிறது என்பது ஒப்புக்கொள்ள முடியாத காரணம். எந்த அடிப்படையில் மொழிப்பிரச்சினை ஏற்படுகிறது என்று பார்க்கவேண்டும். ஒரு சிலர் மொழிப் பிரச்சினையைத் தங்கள் நலனுக்காக அரசியலில் புகுத்தும்போது தான் சிக்கல் ஏற்படுகிறது. சிலசமயம் ஒரு மொழி பேசுபவர் பிறமொழி பேசுபவர்மீது ஆதிக்கம் செலுத்துவதாலும் சிக்கல் ஏற்படுகிறது. எனவே இந்தியாவில் பல்வேறு மொழிகளும் முரண்பாடின்றி - வெறுப்பின்றி வளரும் சூழ்நிலையை ஏற்படுத்துவது நம் கடமை. அச்சூழ்நிலையை உருவாக்க எக் காரணத்தால் பகைமை ஏற்படுகிறது; அதன் அடிப்படைக் காரணம் என்ன என்று உணரவேண்டும். மொழிப் பிரச்சினையில் காணப்படும் முரண்பாடுகளை அலசிப்பார்த்தால், அவை பயம் என்ற அடிப்படையில் தோன்றுவதைக் காணலாம். தங்கள் மொழி வளர இடமில்லாது போய்விடுமோ; வேறு மொழிகள் ஆக்கிரமித்துவிடுமோ என்று அஞ்சும்போதுதான் முரண்பாடுகள் தோன்றுகின்றன. இந்தியாவில் எந்த மொழி பேசுபவரும் தங்கள் மொழி வளர்ச்சி பற்றிப் பயப்படத் தேவையில்லை என்ற நிலை ஏற்பட்டால்தான் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும். மற்ற வழிகள் எல்லாம் நிரந்தரமான பயனைத் தாரா.

இப்போது தமிழ் ஆட்சிமொழியாயிருக்கிறது. கல்லூரிகளில் போதனு மொழியாக ஆவதற்குச் சில முரண்பாடுகள் தோன்றினால் எங்கே கோளாறு இருக்கிறது என்று உணர்ந்து அதைப் போக்கவேண்டும்.

அண்மையில் இந்தியப் பொது எழுத்தைப்பற்றி ஒரு பூச்சாண்டி வந்தது. எல்லாமொழிக்கும் தேவநாகரி பொதுலிபி என்பது ஒரு கருத்துத்தான்; முடிவன்று. அஃது எல்லாரும் ஏற்கக்கூடியதா என்பது வேறு.

நான் ஜப்பானுக்குச் சென்றேன். ஜப்பானிய மொழிக்கு உருவமூலமாகவே எழுத்துக்கள் உள்ளன. குறைந்த அளவு மூவாயிரம் எழுத்துக் கற்றால்தான் அம்மொழியைப் படிக்க முடியும். எத்தனையோ மாறுதல்களைச் செய்துவரும் ஜப்பானியர்கள் தங்கள் மொழி எழுத்துக்களை மாற்ற விரும்பவில்லை; அவ்வெழுத்துக்களில் சீர்திருத்தமே விழைகின்றனர். எழுத்து மாற்றம் அவசியமா என்று ஊன்றிப்பார்த்தால் அது கடினமான காரியம் என்றுதான் தோன்றும். கழகம் வெளியிட்ட 1008 நூல்களையும் வேறு லிபியில் வெளியிடுவது முடியக்கூடிய காரியமா?

தமிழர்கள் தமிழிலக்கியம் படிக்கும்போது தங்கள் எழுத்தையே வைத்துக்கொள்ளலாம்; அதுபோலவே பிறமொழியினரும் தங்கள் மொழியிலேயே இலக்கியத்தைப் படிக்கலாம். ஆனால் மற்றவர்கள் பிறமொழியைக் கற்றுக்கொள்ள— அம்மொழியின் எழுத்துக்களையும் கற்றுக்கொள்ளவேண்டிய அவசியமின்றிப் பொது எழுத்தை வைத்துக்கொள்ளலாம். எனவே இந்தியமொழிகள் மட்டுமல்ல - உலகமொழிகளை கற்றுக்கொள்வதற்கு எளிதாயிருக்குமாறு உரோம எழுத்தை ஏற்றுக்கொள்ளலாம். இக்கருத்தை எல்லோரும் சிந்தித்துப்பார்த்து முடிவு செய்யவேண்டும். ஆனால் தமிழுக்கு எந்தவிதத்திலும் தீங்கு வரும் வகையில் ஒன்றும் நடக்கவிடமாட்டோம். நான் ரஷ்யா, அமெரிக்கா, ஜப்பான் முதலிய நாடுகளில் நம் மாணவர்களின் ஒழுக்கம் கட்டுப்பாடு இவற்றுக்கு இலக்கணமானவர்கள் என்று கூறிவந்தேன். பெரியோர்கள் சேர்ந்து முடிவுக்கு வரவேண்டிய காரியத்தில் மாணவர்கள் கிளர்ச்சி செய்யவேண்டியதில்லை. இப்பழக்கம் வேறுவகையில் நாம் விரும்பக்கூடாத வகையில் போய்விடலாம். இதுவரை நாம் பெற்ற பெருமையெல்லாம் வீணாகப் போய்விடும். படிக்கவேண்டிய பருவத்தில் மாணவர்கள் வேறு செய்திகளில் ஈடுபட்டுத் தங்கள் அறிவைச் சிதறடிக்கக் கூடாது. இக்காலத்தில் வானவெளியில் பறக்குமளவு மனித அறிவு பெருகியுள்ளது. எந்திரங்களைப் படைத்துச் செயல்புரியும் அளவுக்கு மனித ஆற்றல் வளர்ந்துள்ளது. அவ்வகை அறிவு, ஆற்றல் நம் சந்ததியினர்க்கும் ஏற்படவேண்டும். அஃது ஆழ்ந்து படிப்பதனாலும் சிறந்த பயிற்சியினாலுமே ஏற்படமுடியும்.

நாற்பது வருடத்தில் இக்கழகம் 1008 நூல்களை வெளியிட்டுள்ளது. நான் விரும்புவது அடுத்த பத்தாண்டில் 2008 நூல்கள்

வெளியிடவேண்டும் என்பதே. புதிய புதிய துறைகளில்— விஞ்ஞானம் தத்துவம் போன்ற பல துறைகளில்— மனித அறிவு நூல்கள் எல்லாம் சைவ சித்தாந்தக் கழகத்தில் கிடைக்கும் என்ற நிலை ஏற்படுமாறு— புதிய நூல்களை வெளியிடவேண்டும். சமய நூல்கள் மட்டுமன்றி விஞ்ஞான நூல்களையும் வெளியிடலாம். ஏனெனில் விஞ்ஞானத்திற்கும் மெய்ஞ்ஞானத்திற்கும் அடிப்படை வேற்றுமையில்லை. இன்னும் பல்லாயிர நூல்கள் வெளிவர வேண்டும் என்று கூறி இம்மலரை வெளியிடுகின்றேன். எல்லோருக்கும் வணக்கம்.

கழகப்பணி பாராட்டல்

திரு. கீ. இராமலிங்கனார், (எம். ஏ., தனியலுவலர், ஆட்சி மொழித்துறை) அவர்கள் கழகப் பணியினைப் பாராட்டிச் சொற்சுருங்கப் பொருள் விளங்கக் கேளாரும் வேட்பத் தாளாண்மையிற் றுங்கண்ட வுண்மையோடு விரிவுரையாற்றினர். சுருக்கம் வருமாறு:

கழகப்பணியினைப் பாராட்டு முகத்தான் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்: பாராட்ட வேண்டியவர்களைப் பாராட்டுவது இனிமைமிக்க நல்ல செயலே. கழகம் அச்சிட்ட நூல் வகைகள் நூற்கட்டடங்களின் அழகு இவற்றை எல்லோரும் பாராட்டுகின்றனர். குறிப்பாகக் கழகத்தின் சிறந்த இரண்டியல்புகளைப் பாராட்டுதல் வேண்டும். ஒன்று பல்லோர்க்கும் பயன்படு நூல்களை அச்சிடுதல்; மற்றொன்று தமிழைத் தமிழாக வெளியிடுவது.

கழகம் தோன்றிய காலத்தில் முதலில் அச்சிட்டது திருவருள் பரப்புஞ் செந்தமிழ் நூலே. அதுபோல் 1008 ஆவது நூலும் சிவனருள் பரப்பும் பெருந்தவ நூலே. தமிழைத் தமிழாகப் பேசுவதில் எழுதுவதில் கருத்து வேறுபாடு கொள்ள வேண்டுவதில்லை. நாம் வழங்கும் சொற்களெல்லாம் தமிழோசையைப் பெற்றிருத்தல் வேண்டும். திரு. திருவரங்கனார், சுப்பையா பிள்ளை மற்றும் கழகத்தினர் எல்லாரும் தமிழைத் தமிழாக எழுதுவதில் பேரார்வமுடையவர்கள். தமிழை அவர்கள் எப்பொழுதும் விட்டுக்கொடுக்க வில்லை. சொற்களை எடுத்தாளும்போது முடிந்தவரை தமிழ்ச்சொற்களையே பயன்படுத்துவர். பிறமொழிக் கருத்துக்களையும் தமிழில் சொல்ல முடியுமா என்றே கருதிப்பார்ப்பர். தமிழின் இன்னோசை நயங் கருதித் தமிழை எழுதி வருகின்றனர். எனினும் கழகத்தினருக்குப் பிறமொழியின்மீது ஒன்றும் வெறுப்புக் கிடையாது.

திருவுருப் பரிசு வழங்குதல்

உயர்திரு. எம். ஏ. மாணிக்கவேலர், (தமிழ்நாட்டு நலத்துறை அமைச்சர்) அவர்கள் கழக நூலாசிரியர்கள் எழுவர்கட்குக் கழகத்தார் நல்கும் திருவுருப் பரிசு வழங்கினர். இவ்வெழுவர் தம் வரலாற்றுச் சுவடி அவையினர்க்கு நல்கப்பட்டது. அமைச்சரவர்கள் திருவுருப் பரிசு வழங்கிப் பொருவரும் சொற்பொழிவொன்றாற்றினர். சுருக்கம் வருமாறு:

நான் தமிழை நன்கு கல்லாதவன்; நான் கல்லூரியில் படிக்குங் காலத்தில் தமிழ் கற்பதற்குச் சிறிதும் வாய்ப்புக் கிடையாது. நம்நாடு பரந்தநாடு. வெப்பதட்பம், உணவு, உடை, உண்ணுங்காலம் முதலியவற்றால் இடத்துக்கு இடம் வேறுபாடுண்டு. ஆனால் பண்பு ஒன்றுதான். தாய்மொழியோடு பிறமொழியும் கற்றல் வேண்டும்.

புலவர் பெருமக்கள் எழுவர் வரலாற்றுச் சுருக்கம்

க. இளவழகனார் (அழகரடிகள்) ஆசிரியர் இளவழகனார் மதுராந்தகத்தையடுத்த மாம்பாக்கத்தில் கணக்கர் குடியில் தோன்றியவர். தந்தையார் பெயர் சுப்பராயர். தாயார் பெயர் மாணிக்கம்மையார். இவர் பிறந்த ஆண்டு 1904. 1927 முதல் கழகப்புலவராய்ப் பணியாற்றினர். 1929 இல் அவர்தம் ஆசிரியர் மறைமலையடிகளாரின் பணிக்குத் துணையாதற் பொருட்டுக் கழகத்தினின்றும், விலகினர்.

1940 முதல் மீண்டும் கழகப்பணியாற்றி வந்தனர். 1949 இல் மாம்பாக்கத்தில் குருகுலந் தொடங்கி அதன் முதல்வராயிருந்து சீரிய தொண்டுகள் பல ஆற்றி வருகின்றனர். இவர்கள் கழகத்திற்கு அகப்பொருள் புறப்பொருள் பற்றிய சிறந்த கட்டுரைகள் இருபத்து நான்கு இயற்றியுள்ளனர். நீதி வெண்பா முதலிய நூல்களுக்கு உரையெழுதினர். சங்கவிலக்கிய இன் கவித்திரட்டுக்கள் என்னும் சீரிய நூல்களும் எழுதியுள்ளனர்.

உ. சித்தாந்த பண்டிதர் ப. இராமநாத பிள்ளை, இவர் குலசேகரன் பட்டினத்தில் வேளாண் குடியில் 1890இல் தோன்றியவர். இவர்தந் தந்தையார் பெயர் பரமசிவன் பிள்ளை. தாயார் பெயர் வீரலட்சுமி அம்மையார். 1946 ஆம் ஆண்டு முதல் கழகப் பணிபுரிந்து வருகின்றனர். சிவஞான போதச் சிற்றுரை விளக்கம், திருமந்திர விளக்கம், முதலிய உரை விளக்கங்கள் இயற்றியுள்ளனர்.

௩. இராசு முதலியார் (புலவர் அரசு) இவர் நடுநாட்டில் ரிசிவந்தியம் என்னும் ஊரில் 1900 ஆம் ஆண்டில் தோன்றியவர்.

தந்தையாரின் பெயர் சடாதர முதலியார். கழகத் தொடர்பு கொண்டு காப்பியக் கதைகள், நந்நாட்டுத் தலைவர்கள், மறைமலை யடிகள், கவிமணிதேசிக விநாயகம் பிள்ளை முதலியோர் வரலாறு கள், சிந்தாமணி, சிலப்பதிகாரம், பெரிய புராண உரை நடைகள் சதகவுரைகள் முதலியன இயற்றியுள்ளனர்.

௪. பெருமழைப் புலவர் **பொ. வே. சோமசுந்தரனர்.** இவர் தஞ்சை மாவட்டத்து மேலைப் பெருமழையில் 1909 ஆம் ஆண்டில் தோன்றியவர். இவர் கழகத் தொடர்பு கொண்டு பத்துப்பாட்டு, குறுந்தொகை, பரிபாடல், ஐங்குறுநூறு முதலிய பல நூல்களுக்கு உரையெழுதியுள்ளனர்.

௫. பன்மொழிப் புலவர் **கா. அப்பாத்துரை,** எம். ஏ., எல். டி. இவர் ஆரல்வாய்மொழி என்னும் ஊரிலே பாண்டி வேளாளர் குலத்தில் 1907 ஆம் ஆண்டு பிறந்தவர். கழகத் தொடர்பு கொண்டு குமரிக்கண்டம், சிறுகதை விருந்து, சேக்ஸ்பியர் கதைகள், குடியாட்சி, உலக இலக்கியங்கள், மேனாட்டு இலக்கியக் கதைகள், கிரேக்கக் கதைகள், நாட்டுப்புறக்கதைகள், கழக ஆங்கிலத் தமிழ்க் கையகராதி, இந்திய நாகரிகத்தில் திராவிடப் பண்பு முதலிய பல நூல்கள் இயற்றியுள்ளனர்.

௬. கருப்பக்கிளார் **சு. அ. இராமசாமிப் புலவர்.** இவர் திருமறைக் காட்டினையடுத்த காரன்புலம் என்னும் ஊரில் 1907 இல் தோன்றியவர். இவர் கழகத்தொடர்பு கொண்டு இலக்கியச் சிறு கதைகள், புலவர் வரலாறுகள் முதலிய நூல்களாக ஏறத் தாழ எழுபது நூல்கள் வரை எழுதியுள்ளனர். மேலும் எழுதி வருகின்றனர்.

௭. **திரு. சிவசைலம் பிள்ளை,** எம். ஏ., எல். டி., எம். இ. எஸ் இவர் திருக்குற்றாலத்தையடுத்த சிவசைலம் என்னும் ஊரில் வேளாளர் குலத்தில் 1897 ஆம் ஆண்டு தோன்றியவர். இவர் கழகத் தொடர்பு கொண்டு 1925 இல் கழகத் தமிழ்ப் பாடம் முதற்புத்தகம், அவ்வரிசையில் 1 முதல் 5 புத்தகங்கள், புது முறைக் கழகத்தமிழ்ப் பாடம் 1 முதல் 3 புத்தகங்கள் ஆகிய நூல்களை இயற்றியுள்ளனர்.

திருவுருப் பரிசு பெற்ற புலவர் பெருமக்களெழுவரும் தனித்தனி நன்றி நவிலுங் கடப்பாட்டினர். ஆனல் காலமும் இடமும் நோக்கி அவ்வவர் சார்பாக நன்றிகூறுமாறு இருவர் அமைந்தனர். இருவருள் **இளவழகனரின்** உரைச் சுருக்கம்:

நான் கழகத்திற்கு நூல் எழுதி இருபதாண்டுகள் ஆகி விட்டன. இருந்தும் மறவாது பாராட்டுகின்றனர். திரு

வள்ளுவர் அரசியலின் தொடக்கத்திலேயே கல்வியைப் பற்றிக் கூறி கல்வி எல்லோருக்கும் வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளார். வீதி தோறும் பள்ளி வேண்டும் என்றார் பாரதியார். அது போலக் கழகத்தின் நூல் நிலையம் வீதி தோறும் அமைய வேண்டும் என விரும்புகிறேன்.

பன்மொழிப் புலவர் **கா. அப்பாத்துரை**யாரின் உரைச் சுருக்கம் :

பரிசு பெற்ற ஏழுபேரும் நன்றி சொல்லக் கடமைப்பட்டவர்களே. ஆனால் அதற்கு நேரமில்லை. இங்குக் குழுமியுள்ள இளைஞரை நோக்க நான் முதியவனாயினும், பரிசு வாங்கியவர்களுள் யான் இளைஞனே. இளவழகனார் அவர்கள் எனக்கு நூல் எழுதக் கற்பித்த ஆசிரியர்களுள் ஒருவர்.

சைவ சித்தாந்தக் கழகம் ஒரு பல்கலைக் கழகம். என் வாழ்க்கையைப் பொறுத்த வரை மூன்று வகையான பல்கலைக் கழகங்களில் பயின்றேன். முதலாவது நான் பிறந்த குடும்பம் அஃது என்னைப்பெற்றுவிட்டது. வளர்த்தது. இரண்டாவது நான் படித்துப் பட்டம் பெற்ற சென்னைப் பல்கலைக் கழகம். மூன்றாவது இப்போதுள்ள நிலைக்கு என்னை உயர்த்திய சைவ சித்தாந்தக் கழகம்.

எனக்கு முன் பரிசுபெற்ற அனைவரும் அறிஞர் பெருமக்களுடைய பரம்பரையினரே. என் ஆசிரியருடன் சேர்ந்து பரிசு பெறுதற்குப் பெரிதும் மகிழ்கிறேன். இதுபோன்று 1008 மணி போன்ற நூல்களை வெளியிட்ட கழகம் அமெரிக்கா போன்ற பிற நாடுகளிலும் இருக்காது என்றே நினைக்கிறேன். கழகத்தின் ஆட்சியாளர் இப்படி இப்படிச் செய்யவேண்டும் என்று வற்புறுத்திச்சொல்லி வழிகாட்டுகின்றனர். அங்குப் பணிபுரிந்தவர்கள் பிறகு மதிப்புப்பெரிதும் உள்ளவர்களாக விளங்குவர் என்பது ஒரு தலை. அதனால்தான் அதை ஒரு பல்கலைக் கழகம் என்கிறேன்.

திருமதி, **சௌந்தரம் கைலாசம்** அவர்கள் '**இலக்கிய இன்பம்**' என்னும் பொருள் பற்றி அழகியதொரு விரிவுரை யாற்றினர். சுருக்கம் வருமாறு :

மொழிக்கும் முதல்வனுக்கும் செய்யும் தொண்டே உலகில் சிறந்ததெனக் கொண்டு பணியாற்றி வரும் கழகம் 1008 ஆவது நூலை வெளியிடுகின்றது. இக்கழகம் இலட்ச நூல்களை வெளியிட்டு இலட்சார்ச்சனை செய்யு நாள் விரைவில் வந்து எய்துமாக.

அறிஞர்களைப் பாராட்டுவது நம் கடமைமட்டுமன்று, நாட்டிற்கும் நாட்டு வாழ்விற்கும் தேவையான பண்பாடுமாகும். அம்முறையில் கழகம் திருவுருப் பரிசு வழங்கிப் பெரியோர்களைப் பாராட்டி யுள்ளது. நல்வாழ்வுக்கு இன்றியமையாதன மொழி, இலக்கியம், சமயம் என்பன. அத்தகைய சிறந்த குறிக்கோளைப் புலப்படுத்துமாறு கழகம் மாநாடுகளை முறையே அமைத்துள்ளது. மனிதனின் தனிப் பெருமை மனமெனுங் கருவிச் சிறப்பால்.

இலக்கியம் மனிதப் பண்பாட்டின் ஊற்றுக் கண்ணாக இருக்கின்றது. அதனாற்றான் வாழ்வில் வளர்ச்சி ஏற்படுகிறது. இலக்கியந் தரும் இன்பம் ஈடும் எடுப்புமற்றது. தமிழின் இறவாத் தன்மையை உணர்ந்து பாரதியார் 'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே' என்றனர். மேலும் 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு' என்றனர். விஞ்ஞானத்தினால் அமைதி இன்பம் பெறுதல் முடியாது. அருளோடிணைந்த அறிவால் மட்டும் இன்பமுண்டு. அவ்வருட் பண்பை மக்களிடையே வளர்ப்பது சிறந்த இலக்கியமே. 'உலகம் பண்புடையார்ப் பட்டுண்டு', என்பதனை நினைவு கொள்க.

வித்துவான், திருக்குறள்மணி அ. ந. நவநீதகிருட்டிணன் அவர்கள், 'சமயஇலக்கியங்கள்' என்னும் பொருள் பற்றிச் சிறந்த தொரு சொற்பொழிவாற்றினர். சுருக்கம் வருமாறு :

நம்நாட்டில் இன்று சமய உணர்ச்சி தழைத்து வருவதற்குக் கழகந்தான் காரணம். கழகம் என்னும் தமிழ்ச்சொல்லையும் வழக்குக்குக் கொண்டுவந்ததும் கழகந்தான். இறைவன் ஒருவனே நாயகன் ; நாமெல்லாம் நாயகியராவோம். பன்னிரு திருமுறைகளே குறைவிலா நிறைவாகிய சமய மெய்ந்நூல்களாகும். பிற்காலத்தும் எத்துணையோ சமய நூல்கள் தோன்றியுள்ளன. தமிழிலக்கியத்தில் சமய இலக்கியங்களே தலை சிறந்தன.

சமய மாநாடு

22-8-1961 மாலை 5-30 முதல் '**சமய மாநாடு**' தொடங்கப் பெற்றது.

உயர்திரு, **எம். எஸ். சாரங்கபாணி முதலியார்**, அவர்கள்(பி. ஏ., பி. எல், ஆணையர், இந்து அறநிலைய ஆட்சித்துறை) மாநாட்டைத் திறந்து வைத்து விரிவுரை யாற்றினர். சுருக்கம் வருமாறு :

சைவ சித்தாந்தக் கழகத்தினர் சமயத்திற்கும் கல்விக்கும் சிறந்த பணியாற்றியுள்ளனர். ஆங்கிலத்தில் மக்களுக்கு அளவிலாப் பற்று மிகுந்திருந்த அக்காலத்தில் இக்கழகம் தோன்றி

யது. இக்கழகத்திற்கும் எத்தனையோ இடர்ப்பாடுகள் வந்தன. ஆனால் அவற்றை எல்லாம் நீக்கி விடாப்பிடியுடன் இக்கழகத்தினர் அருஞ்சேவை செய்துவந்திருக்கின்றனர். தமிழும் சமயமும் ஒன்றோடொன்று பிணைந்திருக்கின்றன. மக்கள் நல்வாழ்விற்குச் சமயம் அடிகோலுகிறது. உலகில் பொருட்செல்வத்திற்குக் குறையில்லை. ஆனால் வேண்டியது ஆத்மீக அருட்செல்வமே. கோயில்களில்தான் சமயம் வளர்ந்து வந்திருக்கிறது. கோயில்களில் வழிபாடு நடந்தால்தான் சமயத்திற்கு வன்மை ஏற்படும். குறைபாடுகள் ஏதேனும் இருப்பின் அவற்றை நீக்கிக் கொள்ளல்வேண்டும். குறைபாடுகள் சிற்சில இருப்பதால் சமயமே ஒழிக்கப்படவேண்டு மென்பது சரியன்று.

சமயநூல்களை யெல்லாம் இக்கழகத்தினர் குறைந்த விலையில் அச்சிட்டு வெளியிடுகின்றனர். சமயத்தின் ஆழ்ந்த கருத்துக்களை யெல்லாம் எளிதில் இனிய முறையில் பரப்பும் வழிகளைக் கண்டுபிடித்தனர்.

நமக்கெல்லாம் திருமுறைகளனைத்தையும் முறையே படிக்க நேரமில்லை. எங்கும் ஒரே வேகம்தான். அதனால்தான் எல்லாரும் திருமுறைகளின் சிறந்த பகுதிகளைப் படித்தறிய வேண்டும் என்ற நோக்குடன் பன்னிருதிருமுறைப் பெருந்திரட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. பலர் சமயத்தின் தேவையை உணராமல் பலவித இடையூறுகளைச் செய்துவருகின்றனர். அவற்றை எல்லாம் போக்கிச் சமயத்தைக் காத்து உலகுக்கு வழிகாட்டியாக நாம் வாழ்தல் வேண்டும்.

தலைவர் உரை

அருட்டிரு தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் (திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி) அவர்கள் மாநாட்டுக்குத் தலைமை பூண்டனர். நாட்டினும் மொழியினும் நனிமிகச் சிறந்தது நன்னெறி காட்டி வீடு பேறளிக்கும் சமயம் என்ப. இம் மூன்றும் முறையே உடலும், உணர்வும், உயிரும் ஒத்துத் திகழ்வன.

மக்கள் நாடு பற்றியும், மொழிபற்றியும் ஒற்றுமையுற்று வெற்றியொடும் வாழ்கின்றனர். ஆனால் நாடும் மொழியும் மக்களனைவர்கட்கும் ஒன்றாகவிருக்கும் வாய்ப்புப் பெற்றில; என்னை? அவை வெவ்வேறு தன்மையவாய்க் காணப்படுகின்றன வாகலானென்க. ஆயின் கடவுட் கொள்கையாகிய சமயம் பற்றிய ஒற்றுமை அனைத்துலகிற்கும் ஒன்றேயாம். அவ்வுண்மை நுனித்துணர்வார்க்கு நன்கு புலனாகும். சமயங்கள் பள்ளிவகுப்புப்

போன்ற படிமுறைகளாகும். மக்கள் படியாமலிருப்பதுதான் தவறே யன்றிப் படிப்பது எத்திறத்தானும் தவறாகாது. மேலும் எந்த வகுப்பில் படிப்பினும் படிப்பினளவிற்குப் பயனுண்டு என்பது துணிபு. இன்ன வகுப்பு மட்டுந்தான் வகுப்பென்றும் அதில் படித்தால் மட்டும் பயனுண்டென்றும் நயனுடை மாந்தர் நவிலார்.

ஆடையினைச் செவ்வையாகக் கட்டாமை பொறுத்தற்கரிய குறையெனவும் ஒறுத்தற்கும் உரியவா மெனவுங் கூறப்படுமே யன்றி இன்ன நிற ஆடைதான் ஆடையாகும், அதனைக் கட்டிக் கொள்வதே ஆடை கட்டுதலென்னும் பண்பாகும், ஏனையவை ஆடையாகா, அவற்றைக் கட்டிக்கொள்வதும் பண்பாகா எனவுங் கூறப்படுமோ சொன்மின்! 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்னும் உயர்ந்த வுண்மையினைக் கைக்கொண்டவர்கள் யாண்டும் எவ்வுயிர்களினிடத்தும் கடவுட் டொடர்பினைக் கண்டு ஒற்றுமை கொண்டு வாழ்வர். இத்தகைய வியத்தகு விழுமிய வுண்மை சைவ சமயத்தில் அகப்புறச் சான்றுகளுடன் காணலாகும். அது வருமாறு:

> "எல்லா முடைய வீசனே யிறைவ னென்ன வறியாதார்
> பொல்லா வேடச் சாக்கியரே யாகிப் புல்ல ராகுவார்
> அல்லார் கண்டர் தமக்கிந்த வகில மெல்லா மாளென்ன
> வல்லா ரிவரவ் வேடத்தை மாற்றா தன்பின் வழிநிற்பார்"
>
> —கஉ. சாக்கிய நாயனார் - ஙா

இத்தகைய செம்பொருட் சிவனெறி விளக்கமாம் சைவசமயத்தின் தனிப் பெரு மாண்புகளைப் புலப்படுத்தும் இச் 'சமயமாநாடு' தக்கதொரு சூழலில் தோன்றியுள்ளது. இஞ்ஞான்று நால்வர் திருப்பாடல்களால் நிலை பெற்று ஆல்போல் தழைத்துத் திகழும் திருக்கோவில்களில் அந்நால்வர் திருப்பாடல்களுள்ளிட்ட திருமுறைகளுக்கு உரியதொரு தனியிடம் இருத்தல் வேண்டுமெனவும், அதுவே ஆன்ற பெரும்பயன் விளைக்கு மெனவும், அதுவே முறையா மெனவும் நீண்டநாட்களாக ஆன்றோர் பலரும் ஆங்காங்கு எழுதியும் கூறியும் கிளர்ச்சி செய்து வந்துள்ளனர். அவை இந்நாள் இம்மாநாட்டுக்குத் தலைமை பூணும் அடிகளார் ஆற்றிய அரும்பெரு முயற்சியால் நிறைவுறுகின்றது. அதுவே அமைச்சர் பக்தவத்சலத்தின் வாயிலாக வந்துள்ள 'திருமுறையருச்சனை' யாகும். 'அருச்சனை பாட்டேயாகும்' என்பது சேக்கிழாரடிகளின் வாயிலாகப் போந்த திருவருண் மொழியாகும்.

இதுவே மேற்குறித்துள்ள 'தக்கதோர் சூழல்' என்பது ஆகும். அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் கழக 1008 ஆவது வெளியீட்டு விழாவில் அந்நூலினை வெளியிடுங்கால் ஆற்றிய

அரிய சொற்பொழிவில் 'நம் தமிழ் தெய்வீகத் தன்மை வாய்ந்தது; நாயன்மார் ஆழ்வாராதிகளின் திருப்பாடல்களைக் கொண்டு திகழ்வது; உலகத்தில் எங்கும் காணப்படாத திருக் கோவிற் பெருமை நம் தமிழகத்துக்கே தனிச் சிறப்பு வாய்ந்தது' என நவின்றார். அம்முறையானே இந்நாள் 'திருமுறை யருச்சனை' செய்முறை அமைச்சரவர்கள் வழியாக வெளிப்போந்த தென்க.

அடிகளாரவர்கள் அருளுளங் கனிந்து ஆட்சிப் பொறுப்பாளர் திரு. வ. சு. அவர்களின் அரும்பெரும் பணியினைப் பாராட்டிச் செந்நெறிச் செல்வர்கட்கு உயிரினை யொத்துத் திகழ்வது திருவைந்தெழுத்து. உடலினை யொப்பது திரு வெண்ணீறு. உடையினை யொப்பது சிவமணி (உருத்திராக்கம்). திருவைந்தெழுத்தினைத் திருவுரு வெண்ணிச் சிவஞ் செய்வதற்கு நற்றுணை (சாதனம்) யாவது நூற்றெட்டுச் சிவமணிகள். இச்சிவமணி மாலையினை அக்கு மாலை யெனவும் மொழிவர். இவ்வுண்மை வரும் திருமாமறையானுணரலாம்:

"நெக்குளார்வ மிகப்பெருகி நினைந்
தக்கு மாலைகொ டங்கையி லெண்ணுவார்
தக்க வானவ ராய்த்தகு விப்பது
நக்கன் நாம நமச்சி வாயவே" —ந. சகூ-ந

இத்தகைய தெய்வச் செந்நெறியின் சீர்சிறப்பும், அன்பருளும், இன்பாக் குவிக்கும் ஆற்றலும் ஒருங்குணர்த்தும் ஒரு பேரடையாளமாம் இச்சிவமணிமாலை என்றும் இவர்பால் நின்று நிலவுக என வாழ்த்து மொழிந்து அன்னவர்க்கு அணிவித்தனர். பின் சிறந்த பொன்னுடையும் போர்த்திப் புகழ்ந்தனர். அம்முறையே கழகப்புலவர் சித்தாந்த பண்டிதர் திரு. ப. இராமநாதபிள்ளையவர்களையும் பாராட்டி அருட்டிருவடிகள் சிவமணிமாலையினை அணிவித்துப் பொன்னுடையும் போர்த்தியருளினர்.

அடிகளாரவர்கள் வனப்பமை மாண்புசேர் தலைமையுரை யொன்று திருமுறைச் சான்றுகள் பற்பல திகழ ஆற்றினர். சுருக்கம் வருமாறு:

"மாதவம்செய் தென்திசை வாழ்ந்திட" எனச் சிறப்பிக்கப் பட்டுள்ள தமிழ்த்திரு நாட்டில் மெய்யடியார்கள் பொருட்டுக் கடவுள் நம் கைப் பொருள்போல் மிகவும் எளிவந்துள்ளார். பாடல் பெற்ற திருப்பதிகளுக்குச் செல்லும்போது இத்திருமண் "வான்பழித் திம்மண் புகுந்து மனிதரை ஆட்கொண்ட வள்ளல்" ஆகிய சிவபெருமான் திருவடியும், அவனைத் தம்முள்ளந்தழீஇ அவனாகவே திகழ்ந்த நால்வர் முதலாயினார் திருவடியும் தீண்

டப்பெற்ற சீர் சிறப்பு வாய்ந்தது என்னுங் களிப்பால் இன்ன தெனச் சொல்லவாரா இன்பம் பெருகுகின்றது. அவன் என்றும் அடியவர்கட்கு அத்துணை எளியனாக நின்றருள்கின்றனன்.

சிவபெருமான் அப்பர் பெருமானார்க்குச் சீலப்பாங்காம் அடிமைநெறி முதல்வனாகவும், சுந்தரப் பெருமானார்க்குச் செறிவுப்பாங்காம் தோழமைநெறி முதல்வனாகவும் திகழ்ந்தருளுகின்றனன். அன்பும் அறனும் அருளும் நீங்கா உணர்வொடு வாழும் ஒருவர்க்கு உள்ளமும் உடலும் நீங்கா நலமொடு ஒங்குகின்றன. உடம்பினை உயிர் தங்கியிருக்கும் ஒரு வீடாகத் திருவள்ளுவர் அருளுகின்றார். அவ்வீடு உயிர்க்கு உரிய வீடன்று; வாடகை வீடாகும் வாடகை வீட்டில் வாழ்பவர்க்கு ஏற்படுந் துன்பம் ஏனைய இடங்களைவிடச் சென்னையிலிருப்பார்க்கு மிகவும் நன்றாகத் தெரியும். அதனால் பெரும்பாலோர் அரிதின் முயன்று உரிய வீடுகட்டி அதனிற் குடிபுகுந்து குடும்பத்துடன் பெரிய இன்பந்துய்க்கின்றனர். அதுபோல் நாமும் வாடகை வீடொத்த இந்த வுடலை நீங்கி உரிய வீடாகிய இறைவன் திருவடியை அடைந்து வீடுபேறெய்துதல் வேண்டும். வீடுபேறு என்னும் தனித்தமிழ் மொழிதரும் பொருட் சிறப்பு வடமொழியில் வழங்கும் மோட்சம் என்னும் சொல் தருவதில்லை.
வள்ளுவர் வாய்மொழி வருமாறு:

"புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சி லிருந்த வுயிர்க்கு." —திருக்குறள்-௩௪0.

உயிருக்கு மாசு மறு, இன்னாச்சொல், அவா வெகுளி முதலிய இல்லாத இன்ப வுறைவிடமே வீடாகும். உலகியலினும் புறத்து உழல்வார் அனைவரும் அகமாகிய வீட்டுக்குப் போனாற்றான் மன அமைதி என்று கூறுவதை யாம் யாண்டுங் காண்கின்றோம்!

சமுதாயத்திலுள்ள மூன்றாந்தர மக்களையும் அணைத்துச் செல்வதுதான் சமயம். செல்வர்களும் படித்தவர்களும் முறையே சமயச் சார்பும் சமய வுணர்வும் பெற்றிருப்பதில் வியப்பொன்றுமில்லை. ஆனால் பொதுமக்களிடத்தில் சமய வாழ்வைச் செலுத்திச் சமுதாயப் பண்பாட்டை வளரச் செய்தல் வேண்டும். நீதி மன்றங்கள், வழக்குரைஞர்கள், ஊர்காவலர் இவர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைதல் வேண்டும். அதுவே சமுதாயத்துச் சமய நல்வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாகும். முன்பெல்லாம் இறைவன் சாட்சி இறைவன் மேலாணை என்றால் அதற்குமேல் சான்று கேட்பவர் இல்லை. இன்று பொய் கூறுவோரும் எளிதாக இறைவன் சான்றாகக் கூறுகின்றேன் என்கின்றனர். சமுதாயத்தில் நாம் மனசசான்றுகளை நம்பாமல் நீதிமன்றங்களை எதிர்நோக்கி நிற்கின்றோம்.

சமுதாயத்தில் ஒருவரையொருவர் நம்பி வாழ்வதுதான் மலர்ச்சியான வாழ்க்கையாகும். இம்மையில் வாழ்வாங்கு வாழ்பவன் உறுதியாக மறுமையின்பம் எய்துவான். உயிர்கள் இன்பம் நுகரவே பிறந்திருக்கின்றன. இலக்கியக் காதலர்களின் உடன் போக்கிற்குத் துணையாக நிற்கின்றவள் தோழி. அதுபோல் உயி ரின்பெய்துதற்குத் துணையாக நிற்பவன் இறைவன். உயிர்கள் தாமாக அறிந்து தெளிந்து இன்பநுகர்தல் வேண்டு மென்பது இறைவன் திருவுள்ளம். உலகியல் வாழ்வுக்குப் பொருள் வேண்டும். கடவுள் வாழ்விற்கு ஞானப் பாடல்களும் அதன் வழித்தாய அனுபவமும் வேண்டும். ஞானப் பாடல் களை ஓதுவது இறைவனை நோக்கிச் செய்யும் வழிபாட்டிற்குப் பெருந்துணை புரிகின்றது.

"அடித்தடித்து அக்காரந்தீட்டிய அற்புதம் அறியேனே" என்றருளினர் மணிவாசகப் பெருமானார். திருவாசகத்துக்கு ஒப்பான நூல் உலகத்தில் யாண்டும் இல்லை. அந்நூல் ஆங்கில முதலிய பல மொழிகளில் பெயர்த்து ஆண்டாண்டு ஓதப்படு கின்றது. இறைவன் உயிர்கள் எண்ணும் எண்ணத்திற்கேற்ற திருவருளுருக் கொள்கின்றனன். இறைவன் எல்லாவுறவுமாய் நின்றருள்கின்றனன். அப்பன், அம்மை, ஐயன், மாமன், மாமி என வுறவு முறைத்திருப்பாட்டுக்களைக் காண்கின்றோம். மாணிக்க வாசகப் பெருமானார் 'தாயினும் சாலப்பரிந்து' என்று அருளு கின்றனர். திருவாசகச் செழும் பாடல்களை ஓதி ஓதி அழு தாற்றான் உயிர் பக்குவமடையும். தமிழர் ஒவ்வொருவரும் அப்படி ஓதும் நற்காலம் வருதல் வேண்டும்.

மனிதகுல வாழ்வுக்கு, அறம், அன்பு இன்றியமையாமை போன்று இன்பவாழ்வுக்குச் சமயம் இன்றியமையாதது. உயிரைப் பக்குவப்படுத்துவதற்கு வழிபாடு செய்யப்படுகிறது. நம் வாழ்க்கை உயிர்ச்செல்வங்களாகிய திருமுறைகளை ஓதி வழிபடுமுறை தடைப்பட்டமையாற்றான் சமயச் சிறப்புக்கள் குன்றின. திருமுறையருச்சனை செய்வதன் மூலந்தான் மனங் கரையமுடியும். இறைவன் இரக்கத்தால் எவ்வகை நிலையையும் எய்துகின்றனன். பன்றிக்குட்டிக்குத் தாயாய் முலை கொடுத் தருளினன். உலகத்து மூத்த தத்துவ சமயமாகிய சிவனெறியை நாம் அறியாதாரைப்போல் வாழ்ந்திராமல் உலகில் பரப்புதல் வேண்டும். கிறித்துவப் பாதிரிமாரைப் போலச் சைவ சமயத் தொண்டு புரிதற்குப் பலர் முன் வருதல் வேண்டும். சைவத் தொண்டியற்றும்போது ஆழமாகப் பதிந்து கிடக்கும் சாதிக் களை களை அகழ்ந்தெறிதல் வேண்டும்.

சமயத்தில் கழுவாயாகப் பிராயச்சித்தம் செய்தால் பாவம் போகும், தானங்கொடுத்தால் பாவம்போகும் என்பதான தவறுகள் வந்து புகுந்தது ஒருபெருங்குறைபாடேயாகும். திருவாசகம் போன்ற திருவருள் நூல்களை யோதி அழுதாற்றான் வினைதீரும்; பாவம்போகும். உலகம் இன்னும் பலவூழிகள் தவஞ் செய்தாலும் கிடைக்க முடியாத பெருஞ்செல்வம் திருவாசகம்.

ஒரு பெரிய திருமடம் செய்ய வேண்டிய பணியை அத்திருமடம் செய்வதைக் காட்டிலும் சிறப்பாகச் செய்துவருவது சைவ சித்தாந்தக் கழகம். வெறும் வாணிக நோக்க மட்டும் இக்கழகத்திற்கு இல்லை. வருவாயில் ஒரு பாதியை அறச்செயலுக்குச் செலவிட்டு வருகின்றது இக்கழகம். கழகத்தைப் பாராட்டுவது கழக நூல்களைப் படித்துப் பயின்றாரைப் பாராட்டுவது போன்றதாகும். கழகம் நற்றொண்டுகள் பல புரிந்து மேன்மேலும் ஓங்குதல் வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

கழகப்பணி பாராட்டல்

முதுபெரும் புலவர் மயிலை சிவமுத்து (தலைவர், சென்னை மாணவர் மன்றம்) அவர்கள் கழகப்பணியைப் பாராட்டி, அப் பாராட்டின் குறிப்பாகக் கழக ஆட்சியாளர் திரு. வ. சு. அவர்கட்கும், கழகப் புலவர் திரு. ப. இராமநாத பிள்ளை அவர்கட்கும், மலர்மாலை சூட்டினர். அவர்கள் உருக்கமாகப் பேசிய கருத்துக்களின் சுருக்கம் வருமாறு:

கழகத் தொடக்க முதல் இக்கழகத்துடன் எனக்கு நெருங்கிய தொடர்புண்டு. கழகத்தார் செய்து போதரும் அளவிறந்த வியத்தகு பணிகளை எங்ஙனம் பாராட்டுவதென்று எனக்கே விளங்கவில்லை. சொல்லிற் கடங்காத தெனினும் சுருக்கமாக வேனும் கூறுதல் வேண்டுமென என்னுள்ளம் தூண்டுகின்றது. பாராட்டுவதென்றால் கழகப்பேருறுப்பினர், இயக்குநர், பணியாளர், கழகப் புலவர்கள், கழகத்துக்குப் பல துறையிலும் பல சிறந்த நூல்களை எழுதி நல்கிய பல பெரும் புலவர் பெருமக்கள், ஆசிரியச் சான்றோர் முதலிய பலரையும் வாழ்த்துதல் வேண்டும். அதன்பொருட்டு அவ்விருசார் பெருமக்களின் வகையாளராகக் கழக ஆட்சிப்பொறுப்பாளர் திரு. வ. சுப்பையா பிள்ளையவர்களையும், கழகப்புலவர் திரு. ப. இராமநாத பிள்ளையவர்களையும் பாராட்டுவதே அமையுமெனக்கொண்டு நிலச் செந்தாமரை யென்னும் இவ்வுரோசாப் பூமாலையினை ஒப்புவிக்கின்றேன் என மொழிந்து முறையே அணிவித்தனர். பின்னும் பலவுரைத்துக் கழகப்பணியினைப் பாராட்டினர்.

பரிசு வழங்குதல்

உயர்திரு, சி. டி. ஜானகிராம் (ஐ. ஏ. எஸ்., ஆட்சியாளர், அரசினர் அச்சகம்) அவர்கள் கழக நூற்கட்டடப் பணியாளர்கள் திரு. ஆர். மாணிக்கசாமி (தலைமைப் பணியாளர்). திரு. ஜி. பார்த்தசாரதி, திரு. இராம்சிங்கு, திரு. எஸ். டி. செல்வராசு ஆகிய நால்வர்கட்குக் கழகப் பரிசினை வழங்கினர். இப் பரிசுகள் ஒருவர்க்கு வெள்ளித் திருவிளக்கும், ஏனையார்கட்கு வெள்ளித் தட்டுக்களுமாக அமைந்துள்ளன. சிறந்த விரிவுரையும் ஆற்றினர். சுருக்கம் வருமாறு:

கழக ஆட்சிப்பொறுப்பாளர் பரிசு வழங்க வருதல் வேண்டுமென அழைத்தபோது, அவர்கள் கூறியது இது: அரசியல் அச்சக முதல்வராகத் திகழும் தங்களைக் காட்டிலும் அத்தொண்டினுக்கு வேறெவரும் பொருத்தமாக இருக்க முடியாதென்பதே. அதன்மேல் ஒப்புக்கொண்டேன். கழகம் நாற்பதாண்டுகளாகத் தொடர்ந்து ஆற்றிவருந் தொண்டு மிக மிகப் பாராட்டுதற்குரியதாகும்.

பணியாளர்களைப் பாராட்டிப் பரிசு வழங்குதல் சிறந்த முறையாகும். பரிசுகள் பணியாளர்கட்கு உவகையும் ஊக்கமும் அளிப்பதுடன் தொழில் நிலையங்கட்கு ஆக்கமும் அவை வருதற்காம் உழைப்பிற்கு ஆற்றலும் அளிக்கும் தன்மையன. எல்லாரையும் நன்கு பாராட்டுகின்றேன்.

பரிசு பெறும் கழக நூற்கட்டடப் பணியாளர் திரு. ஆர். மாணிக்கசாமி (தலைமைப் பணியாளர்): இவர் கழகத் தொடக்க முதல் கட்டடப் பணியில் ஈடுபட்டுள்ளவர்; கூர்த்தமதியினர்; ஆழ்ந்தெண்ணிச் செய்யும் அரிய முயற்சியர்; அமைதிப் பண்பினர். தொடக்கக் காலங்களில் சுவடிகளை வீட்டுக்கு எடுத்துக் கொண்டுபோய்ச் செம்மையாகக் கட்டடம் செய்துகொண்டு கொடுத்து வந்தார். கழகத்தார் கட்டடப் பொறிகள் அமைப்பதற்குமுன், இவர் தம் கைத்திறனாலும், நுண்ணுணர்வாலும் பொறிகளின் துணையால் செய்வதுபோன்றே மிகவும் செம்மையாகக் கட்டடம் செய்யும் திறல் வாய்ந்து செய்துவந்தார். 1929 ஆவது ஆண்டுமுதல் கழக நூற்கட்டடத் தலைமைப் பணியாளராக அமர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

திரு. ஜி. பார்த்தசாரதி கட்டடப் பணியாளராக வந்து எவ்வகைப் பணியிலும் ஈடுபட்டு அவ்வப்பணிகளை அவ்வத்துறை வல்லார் விழைந்து செய்வதினும் செம்மையுறச் செய்து வருந் திறலினர், உண்மையும், உழைப்பும் மிக்கவர்.

திரு. இராம்சிங்கு கட்டடத்துறையில் துணைப்பணியாளராகப் பதினைந்து ஆண்டுகளாகப் பணிபுரிந்து வருகின்றார். பாராட்டுப் பெறுதற்குரிய தகுதி வாய்ந்தவர்.

திரு. எஸ். டி. செல்வராசு இவர் முதற்கண் கட்டடப் பணியாளராக வந்து இப்பொழுது நூல் விற்பனைத்துறையிற் பணி புரிந்து வருகின்றனர். ஏறத்தாழ எல்லாப் பதிப்பாளர்களாலும் வெளியிடப்பட்ட தமிழ் நூல்கள் அனைத்தின் பெயர், விலை, கிடைக்குமிடம், கிடையாததாயிருந்தால் அச்செய்தி, நூலாசிரியர்கள், பதிப்பாளர்கள், பதிப்பு வரிசைகள் அனைத்தும் சிறிதும் ஐயமின்றித் தெளிவுறக் கூறும் திறலினர். தமிழ்த் தொடர்பாகவுள்ள ஆங்கில நூல்களையும் அங்ஙனமே கூறும் ஆற்றலினர். உண்மை உழைப்பாளர். சுருங்கக்கூறின் அவர் ஒரு வியத்தகு நடை நூலகராகக் கழகத்துக்கமைந்துள்ளார்.

திருமதி, புலவர் சி. குழந்தையம்மாள், எம். எல். ஏ., அவர்கள் 'மணிவாசகம்' என்னும் பொருள் பற்றிச் சொற்பொழி வாற்றினர். சுருக்கம் வருமாறு:

தவத்திரு அடிகளார் அவர்களே, பெரியோர்களே!

பாக்களில் சிறந்தது திருவாசகம் என்று சிவப்பிரகாசர் பாராட்டியிருக்கிறார். மணிவாசகம் என்பது திருவாசகத்தைக் குறிக்கும். மணி என்பதற்குப் பல பொருள்கள் உள்ளன. மணி என்பது நெல் மணியையும் குறிக்கும். அது பசிக்குணவாயுள்ளது. அதுபோல மணிவாசகம் ஆன்மப் பசிக்குணவாயுள்ளது. உலக வாழ்வில் ஈடுபட்டிருப்போர் ஒவ்வொரு நாளும் பொருளீட்டுவதிலேயே காலங்கழித்து வருகின்றனர். இறைவனை நினைக்க முடிவதில்லை. உலக வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் கலந்தே வருகின்றன. ஆனால் ஆன்ம வாழ்வு பெற்றோரே என்றும் இன்புறுவர். ஆன்மவிளக்கத்துக்குத் துணை திருவாசகமே. 'ஏழைத்தொழும்பனேன் எத்தனையோ காலமெல்லாம் பாழுக்கிறைத்தேன் பரம்பரனைப் பணியாதே' என்று மாணிக்கவாசகரே பாடுகின்றனர். அதுபோல நம்மில் பலரும் காலத்தை வீண் போக்குகிறோம். நமக்கு ஆன்மிகப்பெருஞ் செல்வமான திருவாசகம் கிடைத்திருப்பது பெறுதற்கரிய பேறேயாகும்.

உலகில் அமைதியாக வாழும் பேரின்பமே வீடு பேறு. எந்த வேலையைச் செய்தாலும் எல்லாம் இறைவன் அருளால் நிகழ்கின்றன என்று எண்ணவேண்டும்.

கேட்டவளவில் மன உருக்கத்தை, நெகிழ்ச்சியைத் தருவது திருவாசகம். இதைப் படிக்கும்போது மனம் கரைந்துருகு

கிறது. 'இராமலிங்க அடிகள் திருவாசகத்தைக் கேட்ட கீழ்ப் பறவைச் சாதிகளும் மெய்ஞ்ஞான நாட்ட முறும என்று பாடியுள்ளார்.

திருவாசகம் படித்தால் நல்லது எது கெட்டது எது என்ற பகுத்தறிவு கிடைக்கிறது. திருவாசகத்தைப் பாடுவதால் ஆன்மா வுக்குச் சாந்தி ஏற்படுகிறது.

அருட்டிரு, **இளவழகனர்** என்ற அழகரடிகள் '**கோயில் நாகரிகம்**' என்னும் பொருள் பற்றித் தத்துவ வுண்மைகள் பல விளங்க அரியதொரு விரிவுரை யாற்றினர். சுருக்கம் வருமாறு :

கோயில் நாகரிகம் என்பது கோயிலை அடிப்படையாகக் கொண்டு நிகழ்வது. நாகரிகம் நளினமான நல் வாழ்க்கை; குற்றம் பொறுக்கும் வாழ்க்கை, கண்ணேட்டம். நால்வருள மாணிக்க வாசகப் பெருமானர் ஒருவர் தாம் திருக்கோவில் எடுப்பித்தனர். அஃது இணையற்ற கோயில். கோயில் என்பது சிறந்த வீடு.

நாகரிகம் உடல், மனம், உயிர், உயிர்க்குயிர் என்ற நான்கு பாகுபாட்டிற் றிகழ்வது. இந நான்குமம முறையே உழைப்பு, இசை, துடிப்பு, ஏடு என்னும் குறிப்படையாளங்களால் உணர லாம். உழைப்படையாளம் உழவாரப் படை, அப்பர். இசை யடையாளம் தாளம், சம்பந்தர். துடிப்பு-யோகம் தாமரை மலர், சுந்தரர். இவ்வனுபவங்களை எடுத்துச் சொல்லக் கையில் ஏடு மாணிக்கவாசகர் ஏடு இறைவன் போன்ற அனுபவமுள்ளது.

இத்தகைய நாகரிகத்தை வளர்க்க ஒரு நிலையம் தேவை. அதுவே கோயில். நாற்பாலான நாகரிகம் வளர்வதற்குத் துணை செய்வது திருக்குறள் நூல். இக் குறிப்பு அதன் பாயிரத்தா லுணரலாம். கோயில்களில் எல்லா மூர்த்திகளும் உண்டு. அவ ரவர் விருப்பம் போல் வழிபட அமைந்த நாகரிகமவை.

மொழியில் மூன்று கூறுகள் உள்ளன. அவை கருத்து, சொல், வரிவடிவு என்பன. வரிவடிவின்றி ஒலியை நாம் அறிய முடியாது. ஒலியும் வரியும் சேர்ந்து கருத்தைப் புலப்படுத்து கின்றன. மொழிக்கு ஆற்றல் மொழியைக் கையாளுபவர்களால் வருவது. தொழுகை யென்பது அழுகையே, இக் குறிப்பெல் லாந் திரட்டிப் பதி, பசு, பாசம் என நிறுவனம் செய்தனர். நாம் கோயிலை வளர்ப்பித்தல் வேண்டும். புதுப்பித்தல் வேண்டும். கோயில்களில் இடிந்த பகுதிகளைப் பாதுகாத்துக் கட்டுதல் வேண்டும். கோயிலுக்கு நகர் எனவும் பெயருண்டு. நகர் என் றால் விளங்குவது என்பதே பொருள். நாம் நாகரிகமாக விளங் குதல் வேண்டுமாயின் கோயில்களைப் போற்றுதல் வேண்டும.

நன்றியுரை

ஆட்சிப் பொறுப்பாளர் திரு. வ. சுப்பையா பிள்ளை ஒவ்வொரு மாநாட்டு நிறைவிலும் அன்பு கனிந்தவுள்ளத்துடன் நன்றியும் வணக்கமும் நவின்றனர். அவற்றின் சுருக்கம் வருமாறு :

ஒவ்வொரு நாளும தொடக்கத்திலும் நிறைவிலும் கடவுள் வாழ்த்து ஓதிய கோவூர் வித்துவான் தேவார இசைப்புலவர் புண்ணியகோடி யவர்கட்கும், நாடொறுந் தலைமை தாங்கிப் பேரவையினைப் பெருமித மமைய அணிபெற நடத்திய அவைத் தலைவரவர்கட்கும், அருமை மிகச் சொற்பொழிவாற்றிய சொற்பொழிவாளர்கட்கும், 1008 ஆவது நூல் வெளியீடு, நூற்காட்சித் திறப்பு, திருவள்ளுவர் படத்திறப்பு, அவைத்திறப்பு, கழகப்பணி பாராட்டல், பாராட்டு நூற்பட்டி வெளியிடல், விழா மலர் வெளியிடல், கழக நூலாசிரியர் எழுவர்க்குத் திருவுருப் பரிசுவழங்கல், நூற்கட்டடப் பணியாளர்கட்குப் பரிசுவழங்குதல் முதலிய அருந்தொண்டுகள் செய்த பெரியார்கட்கும், வானொலி நிலையத்தார் பொறித்துணையுடன் வந்து ஒலி பரப்பியும் பதிவு செய்தும் பெருந்துணை புரிந்தமைக்காக அவர்கட்கும், திரைப்படப் பிடிப்பெடுத்தற் குதவிய தமிழ்நாட்டுச் செய்தித்துறை விளம்பரத் துறை இயக்குநர் உயர்திரு. ஆர். குழந்தைவேலு அவர்கட்கும், இவ்விழா இனிது நிறைவேற எல்லா வகையாலும் ஒத்துழைத்த உழைப்பாளர்கட்கும், மாண்புமிகு பழம் புலவர்களின் நிழலுருவம், வரலாற்றுக் குறிப்புக்கள், கடிதங்கள், கைச்சாத்துக்கள் முதலிய தந்துதவிய நண்பர்கட்கும் பெரியார்கட்கும், எழுத்துப் படங்கட்கு வேண்டுங் குறிப்புக்களை எழுதியுதவிய விழுமிய ஆன்றோர்கட்கும், கெழுமிய அன்பொடுங் குழுமிப் பேரவையினைச் சிறப்பித்த பெருமக்கட்கும், இடந்தந்துதவிய அரசினர்க்கும், நூற்காட்சியின் பொருட்டு விருந்து மண்டபத்தில் பொருந்துவன வேண்டியாங்குப் புரிய உடனிருந்துதவிய விருந்து மண்டபத்தார்க்கும், விழாக் குழு உறுப்பினர்கட்கும், விழாமலர்க் குழுவினர்க்கும், நூற்காட்சிக் குழுவினர்க்கும், சாரணர் குழுவினர்க்கும், மற்றும் அனைவர்க்கும் கழகச்சார்பில் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

1008 ஆவது வெளியீட்டு விழா

வாழ்த்துக்கள்

தமிழெனுந் தாயைப் போற்றிச் சால்பினுல் பத்தி செய்தே
அமிழ்தெனும் நாமஞ் சொல்லி அருச்சனை செய்யு மாப்போல்
கமழ்மலர் ஆயிரத் தெட்டு கண்டநற் "கழகம்", நின்றே
இமிழ்திரை வைப்பி லென்றும் இளமையே கொண்டு வாழ்க!

—**தஞ்சைவாணன்**, முத்தமிழ் மன்றம்.

ஆயிரத் தெட்டு நூற்கள் அகமெலாம் கண்டு போற்றும்
பாயிரம் இதற்கு வேண்டாம் படித்திட அழைப்பும் வேண்டாம்
தாயினின் கையில் காணில் தனயனும் எடுப்பான் ஓதச்
சேயினின் கையில் செல்லல் சிறப்பெனக் கூறல் வேண்டாம்.

—**ம. இராமச்சந்திரன்**, கோவை.

அவ்வரிசை தனிலிப்போ தாயிரத்தெட் டாம்நூலைச்
செவ்வியநற் சமயநெறி சேர்நூலாய் வெளியிட்டே
நவ்வியமார் உலகமதில் நன்னெறியை வளர்த்திட்டாய்
பவ்வியவுன் செயலதனைப் பாமரரும் உணர்வாரே.

—**வித்துவான் பொன். சுப்பிரமணியம்**,
திருவிடைமருதூர்

ஆயிரத்தில் ஒருவர்தான் புலவ ரென்று
அன்றொருநாள் அவ்வையவள் சொன்னாள் ஆனல்
ஆயிரத்தின் மேற்பட்டோர் உழைப்புக் கொண்டு
அனைவருமே புலமைநலம் நிறையப் பெற்று
ஆயிரங்கா லப்பயிராய்த் தழைத்து வாழ,
அருமைபெறு நற்கருத்துக் கிளைத்து வாழ,
ஆயிரத்தோ டெட்டெனவே நூலச்சிட்ட
ஆர்வமிகு நம் கழகம் நிலைத்து வாழ்க.

—**வித்துவான். சி. கைலாயர்**, திருக்கழுக்குன்றம்.

ஆயிரத்தெட் டுப்பெயர்கொ டாயிரத்தெட் டுத்தலத்தில்
மேயிருக்கு மீசனருள் மெய்ப்பாடல் — தோயும்
திருமுறையோர் பன்னிரண்டும் செப்புபிற பாவும்
மருவுமிவ்வி ழாவின் மலர்.

—**தி. செ. முருகதாசஐயா**,
கௌமாரமடாலயம், திருவாமாத்தூர்.

ஆயிரத் தெட்டா வதுநல் வெளியீடு
வாயிருந் தோர்வாழ்த்த மாவிழவாப் - போயிருந்தோர்
என்னே யெனப்புகல எங்கழகச் சுப்பையா
தன்னேரி லான்செய்வான் தான்.

—ஆ. சிவலிங்கனார், மயிலம்.

சைவமுந் தமிழும் தழைத்தினி தோங்கத்
தெய்வத் திருப்பணி செய்யுங் கழகம்
இனிது வாழ்க எனவாழ்த் துதுமே

—அ. முத்துசாமிப்புலவர், மதுரை.

1. அழகிய பனுவல் வெளியீட்டால்,
அறிவான் அமைந்தார் எல்லோரும்
கழகத் தரிய வெளியீடோ,
காணுமின் என்பார் ; நம்நாட்டின்
பழகிய தமிழைப் பரிவுடனே,
பார்த்தினி தாக அச்சிடுவார்
அழகுறுந் தொண்டின் மேலாளர்,
ஆயிரத் தெட்டாம் நிலைகாண்பார்.

2. நல்லோர் பல்லோர் பாராட்ட,
நன்மொழி, சமய மாநாட்டை
வல்லோர் அறிவுரைப் பணியுடனே
வகுத்தார் செந்தமிழ் அமுதீவார்
தொல்லோர் சைவ சித்தாந்தத்
தொன்னூற் பதிப்புக் கழகத்தார்
எல்லோ ராலும் எடுத்தேத்தி
இன்பணி செய்தே வாழியரே.

—சொ. சிங்காரவேலன், தருமபுரம்.

தமிழ்வாழ்க தழைகவெனத் தமிழ்த்தொண்டே புரியும்
சைவசித் தாந்தநூற் றமிழ்க்கழகம் வாழ்க
தமிழாட்சி புரிக! வெனத் தாழ்வின்றி நாளும்
தமிழ்போற்றி வருகின்ற தமிழ்க்கழகம் வாழ்க!
தமிழ்நாட்டுத் தமிழருக்குத் தமிழுயிரே மற்றுந்
தம்முயிர்வே றில்லையெனுந் தமிழ்க்கழகம் வாழ்க!
தமிழ்சான்ற சைவசித் தாந்தநூற் பதிப்புத்
தமிழகத்துக் கழகத்தார் தழைத்தென்றும் வாழ்க!

—பா. நாராயணன், மேட்டுப்பாளையம்.

1008 ஆவது வெளியீட்டு விழா

வாழ்த்துரைகள்

"ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே."

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் பழம்பெரும் நிறுவனமாக இருந்து புத்தகப்பணி புரிந்துவருகிறது. தமிழ்நாட்டு நூல் வெளியீடுகளில் கழகப்பதிப்பு என்றால் அது சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தையே குறிப்பதாகும். தெய்வத்தமிழ்த் திருமுறைகளையும், சாத்திர நூல்களையும் வெளியிடுவதுடன், காலத்திற்கேற்ப இலக்கியம், ஆராய்ச்சி, விஞ்ஞானம் முதலிய துறைகளிலும்,மாணவர்களுக்கேற்ற பாடநூல்நிலைகளிலும், தக்க பெரும் பனுவல்களை வெளியிட்ட இக்கழகம் இப்போது 1008ஆவது வெளியீட்டையும் சிறப்புற விழாக் கொண்டாடி வெளியிடுகின்றது. இந்திய நாட்டில் தலைசிறந்த புத்தக நிலையங்களுள் ஒன்றாய்த் திகழும் இதன் பணிகள் நம் பாராட்டிற்குரியவை. இதிற் பங்கேற்றுள்ள பெருமக்கள் அனைவரது ஒத்துழைப்பால் நம் அன்பர் திரு வ. சுப்பையா பிள்ளை இதனை நன்கு செயற்படுத்தி வருவது நம் மகிழ்ச்சிக்குரியது.

பன்னிரு திருமுறைப் பெருந்திரட்டு ஒன்றையும் கழகவழி இவ்விழாவினால் தமிழுலகம் எய்துகின்றது.

ஆயிரத்தெட்டுத் திருப்பேரால் இறைவனை அருச்சிப்பது வழக்கு. அந்நிலையில் தமிழ்த் தெய்வத்திற்கு "ஆயிரத்தெட்டுப் போற்றி" (சஹஸ்ரநாம அர்ச்சனை) புரிந்துள்ள சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் மேலும் நூறு நூறாயிரம் பனுவல்களை வெளியிட்டு நற்பணியாற்றி நீடு வாழ்க என வாழ்த்திச் செந்தமிழ்ச் சொக்கர் சேவடி சிந்திக்கின்றோம்.

—ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
தருமபுர ஆதீனம், தருமபுரம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் ஆயிரத்தெட்டாவது வெளியீட்டு விழாவிற்கு அன்புடன் அழைத்தமைக்காகத் திரு. வ. சுப்பையா பிள்ளையவர்கட்குத் திரு கருமுத்து தியாகராசன் செட்டியார் தமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், விழா இனிதே நிகழ்ந்தேறவும், கழகம் நாளும் வளர்ந்து, மேலும் பல தண்டமிழ் நூல்களைப் பதிப்பித்துத் தாய்மொழிப் பணிபுரிந்து சிறப்புற்றோங்கவும் எல்லாம் வல்ல இறையருளை வழுத்துகின்றார்.

—கருமுத்து தியாகராசன், மதுரை

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் முன்னைய சூழ்நிலையில் எழுந்தது. அதன் சீரிய பணிகளை எவரும் குறைத்து மதிப்பிடமுடியாது. பயனும் எழிலும் கொழிக்கும் நூல்களைத் தக்க முறையில் வெளியிட்டுவரும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் இனியும் புதிய வழிகள் வகுத்துத் தமிழுக்குத் தொண்டாற்றி அருளுமாறு இறைவனை இறைஞ்சுகின்றோம்.

—பே. ரா. கிருஷ்ணமூர்த்தி, கோயம்புத்தூர்.

செந்தமிழ் மணத்தையும் சிவமணத்தையும் பரப்பத்தக்க தாயகம் நம் கழகமேயன்றி வேறு யாண்டும் இல்லை. வாழ்க சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். பொலிக நல்விழா! கழகத்தின் உயிர் நாடி எனத் திகழும் தாங்கள் ஊழிதோறூழி வாழ்க! விழாவில் பங்குபெறும் செந்தமிழ்ச் செல்வர்கள் அனைவருக்கும் எனது வணக்கம் உரியது. திருவருள் முன்னிற்க.

—வித்துவான் கு. சுந்தரமூர்த்தி, திருப்பனந்தாள்.

பன்னாள் உழைத்து இத்தகைய மாபெருந் திருவிழாவை நடத்துவதற்கு உயிர் நாடியாயிருக்கும் தங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியும் வணக்கமும் உரித்தாகுக. சைவ சித்தாந்தக் கழகத்தை அளவிறந்த ஊக்கத்தோடு தாங்கள் ஆட்சிப் பொறுப்பாளராக இருந்து நடாத்தும் அளவிடமுடியாத திறமைக்கு இது நற்சான்றாகும்

—டாக்டர் டி. ஆர். அண்ணாமலை, பாளையங்கோட்டை.

ஒரு பெரு மாநிலத்தின் தலைவர், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உயர்நீதிமன்ற நடுவர்கள், பல்கலைக் கழகத் துணை வேந்தர், பேராசிரியர்கள், பல்கலை வல்லுநர் முதலாய பலப்பலர் கலந்து மகிழ்ந்து பாராட்டும் வண்ணம் ஒரு தமிழ் நூல் வெளியீட்டுவிழா நடந்ததாக இதுவரை கேட்டதும் இல்லை. அங்ஙனம் கேட்டும் அறியாததொரு பெருவிழாவாக 1008ஆவது வெளியீட்டு விழாவினை உலகம் நேரிற்கண்டு களிப்புறுமாறு மூன்று நாட்கள் சிறப்புற நடாத்திய தங்களது அறிவாற்றலும் அயராவுழைப்பும் அறிந்து பாராட்டத்தக்கன.

—தமிழ்வாசகர் மு. அருணாசலம் பிள்ளை, அண்ணாமலைநகர்.

விழா சிறப்பாக நடந்து மேலும் இலட்சத்து ஒன்றாம் வெளியீட்டு விழாவும் நடத்திச் சிறப்பிக்கும் என்று நம்புகிறேன். கழகம் மேன்மேலும் வளர்ந்து தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் அரிய பணிபுரியவும், இனிது ஓங்கவும் இறைவனை வணங்குகிறேன்.

—எம். எம். தண்டபாணிதேசிகர், அண்ணாமலைநகர்.

அடியேன் கருவுற்ற நாட்டொட்டு, 90 ஆண்டு செல்கின்ற தொண்டு கிழவனாதலின், விழாவைக் கண்டுகளிக்கும் கழிபேரு வகையுள்ள, கண்மா றிலாத காட்சியுண்டாயினும், கண்பேறில் லாக் கசடனாயினேன். அஃது அற்றாயினும், செம்பொருள் பயக்கும் திருமந்திரச் செய்யுளின் வண்ணம் சைவ சித்தாந்தம் தாரணியோர் புகழ் தழைத்தோங்கி வளர்ந்து பயன்தரும் பெரும்பேறு பெறச் சிற்சபாநாதன் திருவடிகளை சிந்தையுட் கொண்டு திருவைந்தெழுத்தைச் செபபி வருகின்றேன். வணக்கம் பலப்பல. சைவ சித்தாந்தக் கழகம் வாழ்க வாழ்க.

—சபா. சிவப்பிரகாசம் பிள்ளை, சிதம்பரம்.

"திசையனைத்தின் பெருமையெல்லாம் தென் திசையே வென்றேற, அசைவில் செழுந் தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறைவெல்ல" (சேக்கிழார்) என்னும் சிறந்த குறிக்கோளும் உடைய தங்கள் நூற்பதிப்புக் கழகம், தமிழுலகிற்குப் பல்வேறு துறைகளில் ஆற்றியுள்ள பெரும்பணி யாவராலும் பாராட்டற் குரியது.

—எஸ். இராமச்சந்திரப் பத்தர், பி. ஏ., மதுரை.

கழகம் ஆற்றியுள்ள தமிழ்ப்பணி மகத்தானது. இதை எண்ணும்போது கழகத்திற்கு நீங்கள் செய்துள்ள பணியையும், அதன் பெருமையையும் நினைந்து பாராட்டாமல் இருத்தல் இய லாது. கழகம் என்றென்றும் நின்று தமிழை வளர்த்துவர ஆண்டவன் அருள்வானாக! நூல் வெளியீட்டு விழா சிறப்பாக நிறைவேறுவதாக?

—பேராசிரியர் அ. சீனிவாசராகவன், எம்.ஏ., தூத்துக்குடி.

கூட்டுறவு முறையில் பதிப்பகம் ஏற்படுத்தி அதனைப் பல்லாண்டுகளாகச் செம்மையாக நடத்தி வரும் பெருமை தங்கள் கழகத்திற்கே உரியதாகும். 1008 அரிய நூல்களைச் சிறந்த முறையில் அழகுற வெளியிட்டுள்ள கழகம் பிற பதிப்பகங் களுக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது எனக்கூறுவேனாகில் அது புனைந்துரையன்று.

—பேராசிரியர் பு. ஆலாலசுந்தரன், எம்.ஏ., தாம்பரம்.

நூற்பதிப்புக் கழகம் முதற்கண் திரு. திருவரங்கம் பிள்ளை அவர்களது அறிவு கலந்த உழைப்பாலும், பின்னர்த் தங்கள் அரிய உழைப்பாலும் தமிழ்மொழிக்கும், தமிழ்ப் புலவர் களுக்கும், சித்தாந்த சைவ நெறிக்கும் அரிய பெரிய தொண் டாற்றியுள்ளது; இனியும் ஆற்றும் என்பதில் ஐயமில்லை.

—சித்தாந்தப்புலவர் க. வச்சிரவேலு முதலியார், காஞ்சிபுரம்.

கழகத்தார்கள் தமிழ்த்தாய்க்குச் செய்துள்ள நன்றிக்குத் தாயின் பரிபூரண ஆசியும் தமிழ் மக்களின் நன்றியும் என்றும் உரித்தாவதாக.

—ஆர். **கந்தசாமி மூப்பனார்** பி. ஏ., பி. எல். கும்பகோணம்.

இந்நிகழ்ச்சி சைவ சித்தாந்தக் கழகத்தின் வரலாற்றில் பொன்னால் பொறிக்கப்பட வேண்டிய பெருமைமிக்க நிகழ்ச்சியாகும். தமிழர்க்கும் ஏனையோர்க்கும் மகிழ்ச்சி பொங்கும் நன்னாளாகும். தென்னிந்திய சைவ சித்தாந்தக் கழகம் ஆற்றியுள்ள போற்றத்தகும் தொண்டு தென்னகத்து இலக்கிய வரலாற்றில் சீரியதொரு இடம்பெறும். தாங்கள் ஆற்றியுள்ள பெருந் தொண்டிற்காகத் தங்களையும், தங்கள் நண்பர்களையும், சலியாத ஊக்கமிகு கழகத்தின் பணியாளர்களையும் பாராட்டுகின்றேன். தங்கள் கழகத்தின் ஆயிரத்து எட்டாவது வெளியீட்டு விழாவைப் பெருமளவில் கொண்டாட வேண்டுவது மிகப்பொருத்த முடையதாகும். விழா வெற்றிபெற என் மனங்கனிந்த வாழ்த்துக்கள்.

—எம். **விஸ்வநாதன்**, மாயூரம்.

தங்கள் நூலகம் இவ்வளவு நூல்கள் வெளியிட்டிருப்பது மிகப் போற்றத்தக்கது சமயம், இலக்கியம், விஞ்ஞானம் முதலிய துறைகளில் இத்தொண்டுகள் நடந்திருக்கின்றன.

—**கா. இராமநாதன்**, அட்வகேட், கோலாலம்பூர்

ஏறத்தாழ அரை நூற்றாண்டாகத் தமிழ்ப் பணியும் சமயப் பணியுமே குறிக்கோளாகக் கொண்டு சிறந்த தமிழ்நூல்களை உயர்ந்த முறையில் வெளியிட்டு அரும்பணியாற்றி வரும் பெரும் புகழ் வாய்ந்த நம் கழகம் நற்றமிழுக்கு ஆற்றிய பணியால் இணையிலாப் பெருமிதம் பெற்றுத் திகழ்வதாகும். இதைப் போன்று ஆயிரத்திற்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்ட பெருமை, உலகிலேயே எந்தப் பதிப்பகமும் எய்தியிராது என்று கூறலாம். அத்தகைய தனிப்பெருஞ்சிறப்பை நாடறியச் செய்யும் நல் விழாப் பல்வேறு சிறப்புக்களுடன் நடைபெறுவது கண்டு களிபேருவகை அடைகின்றோம்.

—**இராம. கனகசபாபதி**, அருணகிரி இசைக்கழகம், நெல்லை.

ஆளுநரும், அமைச்சரும், ஆன்றோரும் கலந்துகொள்ளும் முத்தமிழ்விழா, தித்திக்கும் செந்தமிழினை, தேனினுமினிய தீந் தமிழினை, கண்ணுதற்பெருங் கடவுளும் கழகமோடமர்ந்து பண்ணுறத் தெரிந்தாய்ந்த பைந்தமிழினைப் பாருக்குணர்த்தும் பெருவிழாவாக அமையுமென்பதில் தடையேதுமில்லை.

—பண்டித **ச. சாம்பசிவன்**, மதுரை

பன்னிரு திருமுறைப் பெருந்திரட்டு நம்மனோர்க்கேயன்றி, எல்லோருக்கும் எல்லாவித நலங்களையும் அருளும் என்னும் நம்பிக்கையுண்டாக்குகிறது. அருளாசிரியர்கள் தூய திருவுள்ளங் களினின்று எழுந்த கருத்துக்கள் நாட்டில் பரவிப் பெருநன்மை விளைக்கும். மக்கள் உயர்வடைந்து, மாசகன்று ஓங்குதற்குத் தங்கள் 1008 ஆவது வெளியீடு பெருந்துணை புரியும்.

—இந்து மத பாடசாலை, வாலாசாபாத்.

மொழி இலக்கியச் சமய மாநாடுகளுடன் அருள் நூல் வெளியீட்டுத் தமிழ்த் தெளிதேனை உலகினுக்கு வழங்கும் உயர் தனிச் செந்தமிழ்ச் சைவ சித்தாந்தக் கழகம் பெரிதினிது வாழ்க.

—புலவர் ந. சேதுரகுநாதன், விருதுநகர்.

இதுவரை தங்கள் கழகம், தெய்வத் தமிழ்மொழிக்கும், சைவத் திருநெறிக்கும் ஆற்றிய அரும்பெரும் பீடுசால் திருப் பணிகளைத் தமிழினம் என்றென்றும் மறக்கமாட்டாது. மேலும் தங்கள் விழா நிகழ்ச்சிகளில் இடம்பெறும் சொற்பொழிவுகள், மற்றும் நிகழ்ச்சிகள் அனைத்தையும் கடல்கடந்து வாழும் தமிழர் களாகிய நாமனைவரும் படித்துப் பயனடையும் வகையில் நூல் வடிவில் அமைத்து உதவியருளுமாறும் தங்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம். தங்கள் விழா நிகழ்ச்சிகள் அனைத் தும் மாண்புடன் நிகழ்ந்து முடிவுபெற மன்றத்தின் சார்பிலும், திருக்கோணமலைவாழ் தமிழ் மக்கள் சார்பிலும் வாழ்த்தித் திருவருளை வணங்குகின்றோம்.

—இ. சண்முகராசா, திருக்கோணமலை (இலங்கை.)

ஆதாயத்தைக் குறியாகக் கொள்ளாமல், மொழிப்பற்றையும் மொழியறிவையும் மக்களுக்கு ஊட்டுவதையே முதன்மையான நோக்கமாகக் கொண்டு, நூற்களின் வாயிலாகத் தமிழியக்கத் தைத் தோற்றுவித்த பெருமை சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தையே சாரும். ஈடு இணையற்ற இப்பணி மேலும் சிறக்க வேண்டுமென்பதே தமிழ்மக்கள் விருப்பம்.

—வை. திருநாவுக்கரசு. சிங்கப்பூர்.

தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் தமது 1008 ஆவது வெளியீட்டை அண்மையில் வெளியிட இருக் கிறார்கள் என்பதை அறிந்து மிகுந்த மகிழ்ச்சியுறுகின்றோம். பல்லாண்டுக் காலமாக இக்கழகத்தினர் அயராது தமிழ்மொழிக்கு ஆற்றிவரும் தொண்டு போற்றற்கேற்றது மட்டுமன்றி உலகிற் கலையார்வமுள்ள பெருமக்களின் பாராட்டிற்கும் உரியது.

—பேராசிரியர், க. கணபதிப்பிள்ளை, கொழும்பு.

திருமுறைப் பெருந்திரட்டின் அட்டைப்படத்திலுள்ள நந்தியின் உருவம் கண்களைக் கவருகின்றது. எடுப்பான தோற்றம், மிரண்ட பார்வை. கோயில் கோபுரத்திற்குமேல் சில தூரம் பசுமைகொண்ட வானவெளியும், பறவைகள் கூட்டமும், அதற்கு மேல் மலைக் கூட்டங்களும், மேகங்களும் அதற்கப்பால் பனிமலைக் காட்சியுடனிருப்பது ஒரு புதுக்கருத்தைக் காட்டுகின்றன. இத்துணைச் சிறப்புக்களுடன் வெளியிட்டுள்ள இந்நூல் பல ஆயிரக் கணக்கில் சிவநேயச் செல்வர்கள் வாங்கி இன்புறுமாறு வேண்டுகின்றேன்.

—**காளத்தி - நடேசன்**, திருவல்லிக்கேணி.

கழகம் இதுவரை மிகச்சிறந்த சமய, இலக்கியத் தொண்டு புரிந்து வந்துளது. இறைவனருளால் வருங்காலத்திலும் அதன் தொண்டு சிறந்து விளங்கும் என்பது உறுதி. விழா இனிது நிறைவேற இறைவனை வேண்டிக்கொள்ளுகிறேன்.

—**தத்துவப் பேராசிரியர், டி. எம். பி. மகாதேவன்**, சென்னை.

கழகத் தந்தையாய திருவரங்கர் கனவு நனவாய்விட்டது. தாயாய் நின்று கழக வெளியீடுகளை வழங்கும் வள்ளல் தமிழையுஞ் சிவநெறியையும் என்றும் புகழ்மலைகளென நிலைபெறுத்தும் சுப்பையாப் பிள்ளையின் உள்ளுணர்வு வாகைசூடிவிட்டது. இப்பெருமக்களை உருவாக்கிய எந்தையின் மனம் மகிழ்ச்சியால் நிறைவுற்றது. தமிழ்நாடு உயர்ந்துவிட்டது. உலகம் தமிழர் கலை, நாகரிகங்களை உணர்ந்துவிட்டது

—**வித்துவான், மறை. திருநாவுக்கரசு**, தூத்துக்குடி.

தமிழ்மொழிக்கும் பண்பாட்டிற்கும் அடிப்படையான ஆக்கச்சேவை செய்துவரும் சைவசித்தாந்தக் கழகத்தின் பணி பெரிதும் பாராட்டத்தக்கது. வாழ்க கழகம். வளர்க அதன் பெரும்பணி என்று இறைவனை இறைஞ்சி வேண்டுகிறேன்.

—**இ. வே. சோமசுந்தரம்**, நகர் ஆட்சி ஆணையர், தூத்துக்குடி.

மனப்பூர்வமாக உங்கள் கழகத்தின் பெருஞ்சேவையை மலாயாக் குடிமகனை நான் பாராட்டுகிறேன். உங்கள் உழைப்பு தமிழ்மொழிக்குச் செய்யும் பேருபகாரமாகும்.

—**ர. ந. வீரப்பன்**, கிள்ளான் (மலாயா.)

கழகத்தினரையும், தமிழ் நூற்காவலர் உயர்திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்களையும் இம்மன்றம் மிகவும் மகிழ்ந்து பாராட்டுகின்றது.

—**சென்னை மாணவ மன்றத்தார்.**

நூற்காட்சியைப்பற்றிய கருத்துரைகள்

கழகத்தார் தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும், தமிழ் இனத்தின் முன்னேற்றத்திற்காகவும் கடந்த 40 ஆண்டுகளுக்குமேல் எத் துணைப் பாடுபட்டு வருகின்றனர் என்பதற்கு இதைவிடச் சிறந்த எடுத்துக்காட்டு வேறு ஒன்று இருக்க முடியாது. பழந் தமிழ்ப் புலவர்கள், கவிஞர்கள் கையேட்டுப் பிரதிகளையும், கையெழுத்துக் கடிதங்களையும் கண்ணுறும்போது நம் மனம், அவர்கள் இருந்த காலத்தையும், அவர்கள் உள்ளக் கிடக்கையையும் சென்று அடையச்செய்கின்றது.

—வை. சங்கரன், M. L. A.

—சு. சின்னக்கருப்பத் தேவர், M. L. A.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் சேவை மென் மேலும் ஒளி பெறப் படர்க !

—K. S. செல்வராஜன், M. L. A.

நூற்காட்சி மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது. தமிழகத் தின் தலைநகரில் இத்தகைய நூற்காட்சி ஒன்று எப்பொழுதும் இருப்பது நல்லது.

—குன்றக்குடி அடிகளார்.

—இராமசாமி அடிகள்.

சைவ சித்தாந்தக் கழகம் தமிழ்மொழிக்குச் செய்து வரும் அருந்தொண்டு இப்பொருட் காட்சியில் நன்கு மக்களுக்கு எடுத்துக் காட்டப்படுகிறது.

—திரு. சிவசுப்பிரமணியம், M. L. C.

'இங்கு இருக்கும் சிறந்த நூல்கள் நல்ல அறிவுக்கும் சிந்தனைக்கும் சிறந்த பொக்கிஷங்கள். நம் தமிழ் வளர இது போன்ற நூல்கள் நாட்டில் நிலவுவது அவசியம்.

—திருமதி. ஜி. அண்ணமலை, M. L. A.

மகிழ்ச்சிதரத்தக்க காட்சி தமிழர்களின் பழைய பெருமை பெரிதெனை இக்காட்சியால் விளங்கும்.

—மணவாள ராமாநுஜம்.

இலக்கியக் கண்காட்சி விரிவான முறையில் நடத்துவதற்கு இஃதொரு வழிகாட்டி. அரிதின் முயன்றபணி.

— அ. க. நவநீதகிருஷ்ணன்.

அற்புதமான தொகுப்பு.

—கு. அருணுசலக் கவுண்டர்.

கண்காட்சி காண்பதற்கு இனிதாகவும், சிந்தனையைத் தொடும் வண்ணமும் இருந்தது. மறைமலை அடிகளாரின் கையெழுத்துப் பிரதிகளைப் பார்வைக்கு வைத்தது தமிழன் எவ்வாறு எழுத வேண்டும் என்பதற்கு ஊன்றுகோலாக இருக்கும்.

—பி. முத்தையா, களக்காடு.

நூற்காட்சியின் சிறப்பினைத் தெரிவிக்கச் சொற்கள் அகப் படவில்லை. இது காறும் இதுபோன்ற காட்சி நடைபெறவில்லை. 'அற்புதம்' என்றுதான் எனக்குச் சொல்லத்தோன்றுகிறது.

—வல்லை - பாலசுப்பிரமணியம்.

"பல அரிய தமிழ் வளர்த்த பெரியார்களின் நூல்களைக் கண்டு மிகவும் போற்றினேன். முக்கியமாக மறைமலையடி களாரின் கைப் பிரதிகளைப்பார்க்கும்போது நேராகவே மறைமலை யடிகளாருடன் தொடர்பு கொண்டு பேசுவது போன்ற ஒரு உணர்ச்சி தோன்றியது.

—செல்வராசு.

இந்நாட்டு மக்களின் உணர்வை எழுப்பித் தருவதோடு இவ்வளவு நூல்களும் தமிழில் உள என்னும் உணர்ச்சியை எழுப்புகின்றது. காணுந்தொறும் மகிழ்ச்சியையூட்டுகிறது.

—கோவிந்தப் பிள்ளை.

இந் நூற்காட்சி தமிழர் ஒவ்வொருவரும் பார்க்கவேண்டிய ஒன்று. புத்தகம் பேணுதல், புத்தகம் காத்தல், கடிதம்போற்றல், தமிழ்மகன் தனது கையெழுத்தினை எப்படி அமைத்துக்கொள்ள வேண்டும், புலவர்களைப் போற்றுதல் முதலிய உணர்வுகளை இக் காட்சியின் மூலம் பெறலாம் இனிய காட்சி.

—சிறுவை. மோகனசுந்தரன்.

கண்காட்சி, தமிழ் வளர்த்த பேரறிஞர்களுடன் பழகுவது போன்ற களிப்புணர்ச்சியை இளைஞர்களுக்கு அளிக்கின்றது.

—R. ஜனார்த்தனம்.

இதுவரை இத்தகையதோர் இனிய நூற்காட்சியைக் கண்ட தில்லை.

—கே. என். பாலசுப்பிரமணியன்.

விருந்து

1961, ஆகஸ்ட்டுத் திங்கள் 20, 21, 22-ஞாயிறு, திங்கள், செவ்வாய் ஆகிய மூன்று நாட்களிலும் முறையே 1008 ஆவது வெளியீட்டு விழா, மொழி மாநாடு, இலக்கிய மாநாடு, சமய மாநாடு, நூற்காட்சி முதலியன செவ்வனே நிகழ்வுற்றன. அதன் பொருட்டுக் கழகத்தார் 1—9—1961 வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்குச் சென்னைப் பவழக்காரத் தெரு, 33 ஆம் எண் திருமண மண்டபத்தில் ஒரு விருந்தளித்தனர். விழாவிற் கலந்துகொண்ட அறிவுசால் ஆடவரும் மகளிரும் நிறையக் குழுமியிருந்தனர். விருந்தின்கண் விழைவுடன் அளித்த உணவு வகைகளை அடியில்வரும் அகவல் யாப்பினால் நன்குணரலாம். விருந்தினர் உண்டு மகிழ்ந்து வாழ்த்தினர்.

தொன்றுதொட்டுத் தமிழகச்சான்றோர் எடுத்துக்கொண்ட நற்செயல் அன்பர், நண்பர், வினைவலர், ஆன்றோர், புலவர் முதலாகிய பலர் துணையினைக்கொண்டு இனிது நிறைவேறிய வுடன் உள்ளம் உவந்து அன்னவர்தமக்குப் பன்னரும் விருந்து பாங்குடன் அளித்து வருதலைத் தந்தலைக்கடனாகக் கொண்டுள் ளனர் என்பதை இந்நிகழ்வு எடுத்துக்காட்டுகின்றது.

திருநெல் வேலித் தென்னிந் தியசைவ
சித்தாந்த நூற்பதிப் புக்கழ கத்தின்
ஆயிரத் தெட்டா வதுவெளி யீட்டு
விழாவிற் கலந்து வேண்டு முதவி
பற்பல புரிந்த விற்பனர் வருக!
1சர்க்கரைப் பொங்கல் 2தனிவெண் பொங்கல்
3தயிர்ச்சோ 4றெலுமிச் சம்பழச் சோறு
5காய்கறி கலந்த கலவைச் சோறு
6மாங்காய்த் தொக்குத் 7தேங்காய்த் துவையல்
8உருளைக் கிழங்குப பொரியல் 9வாழைக்
காய்வறு வல்10வெங் காயவடை 11அப்பளம்
12இன்சுவைத் தீங்குழல் 13வாதுமைச் சுவைநீர்
14கதலிக் கனியிவை கண்டுவிருந் துண்டு
15வெற்றிலைச் சுருளைச் செவ்வாய் மென்று
சித்தங் களித்துச் சிவநெறி வாழ்க!
செந்தமிழ் வாழ்க! என வாழ்த்து வீரே!

—கழகத்தார்

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்திற்காக, சென்னை, 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.